மஞ்சள் துணி



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 DEC 1955
MADRAS

847

தி.ஜ.ர.

மஞ்சள் துணி

— முதலிய கதைகள் —

தி. ஜ. ர.

பழனியப்பா பிரதர்ஸ்

சேப்பாக்கம் :: தெப்பக்குளம்
சென்னை-5. :: திருச்சி

முதற் பதிப்பு — 1955

உரிமை பதிப்பகத்தார்க்கே.

விலை ரூ. 2–8–0

ஏஷியன் பிரிண்டர்ஸ்,
சென்னை - 5

முன்னுரை

இது என்னுடைய நான்காவது சிறு கதைத் தொகுப்பு. முந்திய மூன்றிலும் இல்லாத ஒரு தனிச் சிறப்பு இதற்கு உண்டு. அவற்றில் வெவ்வேறு காலத்தில் - பல வருஷங்களுக்கு முன்னும் பின்னும் - எழுதிய கதைகள் சேர்ந்திருக்கின்றன. இந்தத் தொகுதியிலோ அப்படி இல்லை; அத்தனையும் கடைசியில் எழுதிய கதைகளாகவே சேர்ந்திருக்கின்றன.

இந்தக் கதைகளில் 'மாய ஜாலம்' 'கண்ணன்' பத்திரிகையில் வெளியானது. மற்ற அனைத்தும் 'கலைமக'ளில் வெளியானவை. அந்தப் பத்திரிகைகளின் உரிமையாளர் ஸ்ரீ ந. ராமரத்தினம் அவர்களுக்கு என் நன்றி உரியதாகும்.

'முனியம்மா பந்தய'த்தில் வரும் பாடல்கள் என் சொந்தக் கற்பனைதான். இவற்றை யாரும் தங்கள் நாடோடிப் பாடல் திரட்டில் சேர்த்துக் கொள்ளாதிருக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்.

நண்பர் ஸ்ரீ பழனியப்பாவைப் பற்றியும் இரண்டு வார்த்தை சொல்ல வேண்டும். எடுத்த புஸ்தகத்தை அழகாகவும் வெகுவிரைவிலும் அச்சிட்டு வெளியிடுவதில் அவருக்கு இணை அவர்தான். இதைப் பத்தே நாளில் அவர் தயாரித்து விட்டார். உண்மையில் இது எனக்கு வியப்பைத் தருகிறது; மகிழ்ச்சியையும் தருகிறது.

வாசகர்களைப் பற்றி என்ன சொல்வது? அவர்கள் என் உள்ள மொத்த தோழர்கள். அவர்களுக்கு என் உபசாரமோ வேண்டுகோளோ தேவை யில்லை.

சென்னை-8.
28—9—'55

தி. ஜ. ர.

உள்ளுறை

மஞ்சள் துணி	1
தங்கச் சாமியார்	17
அந்தி வேளை	35
உடைந்த சிம்ணி	56
அந்தப் புஸ்தகம்	71
மாய ஜாலம்	83
பெட்டி வண்டி	90
பொரிவிளங்காய்	110
முனியம்மா பந்தயம்	128

மஞ்சள் துணி

சின்ன துரைக்குச் சின்ன வயசிலிருந்தே இந்தக் ‘கடவுள் - கிடவுள்’, ‘மதம் - மண்ணுங்கட்டி’ எல்லாம் அவ்வளவாகப் பிடிப்பதில்லை. அவன் கொஞ்சம் புத்திசாலி. கொஞ்சம் என்ன? ‘அபார’ புத்திசாலி. இது மற்றவர்களுக்குத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், அவனுக்கு நன்ருய்த் தெரியும். புத்தி உள்ளவர்களிடம் கடவுளேயானுலும் சற்றுப் பயந்து ஒதுங்கிப் பதுங்கத்தானே வேண்டும்? சின்னதுரை ‘பெரிய’ அறிவாளி. அதாவது அவனுடைய சொந்த அறிவு ஒன்றில்தான் அவனுக்கு நம்பிக்கை. குருட்டு நம்பிக்கை எதிலும் அவனுக்கு நம்பிக்கை கிடையாது. ஆனுல், வெறும் நம்பிக்கை என்ருல் என்ன? குருட்டு நம்பிக்கை என்ருல் என்ன? இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? இதைப்பற்றி அவன் அதிகமாய் ஆராய்ச்சி புரிந்ததில்லை. அறிவு மயங்கிக் குருடாகும் இடத்திலேதான் நம்பிக்கை ஆரம்பிக்கிறது - அது குருட்டு நம்பிக்கையோ? கண்ணை அகல விழிக்கும் நம்பிக்கையோ!? எதுவாக இருந்தாலும் சரி. நம்பிக்கையிலே குருட்டு நம்பிக்கை, கண் திறந்த நம்பிக்கை என்றெல்லாம் உண்டா என்ன?

"ஏ சின்னதுரை, நீ உன் பகுத்தறிவை மட்டுமே நம்பியிராதே. அதுதான் குருட்டு நம்பிக்கைகளுக் குள்ளே எல்லாம் பெரிய குருட்டு நம்பிக்கை" என்று அவனுடைய மனச்சாட்சி ஒருபோதும் அவனுக்குச் சொன்னது கிடையாது. தன் பகுத்தறிவைக் கேட்டுக் கொண்டா சின்னதுரை பிறந்தான்? அவனுடைய பகுத்தறிவைக் கேட்டுக்கொண்டு உலகந்தான் - அகிலப் பிரபஞ்சமுமேதான் - தோன்றியதோ? இரண்டும் இல்லை. ஆனாலும், அவனுக்கு என்னவோ அந்த அறிவு என்ற உரைகல்லிலே தேய்த்துப் பார்க்காத எதையும் ஒப்புக் கொள்ளக் கூடாது என்ற திட உறுதி இருந்தது. தெய்வம் - அல்லது இயற்கை என்று வைத்துக் கொள்ளுங்களேன் (ஏனென்றால், சின்னதுரைக்குக் கோபம் வரக்கூடாது) - எத்தனையோ பரீட்சைகளைச் செய்கிறது. சின்னதுரை மாதிரி பிறவிகளும் அந்தப் பரீட்சைகளில் ஒரு வகையாக இருக்கலாம். சின்னதுரை யின் வாழ்க்கை, சின்னதுரையின் சொந்தப் பரீட்சை அல்ல. அதுமாத்திரம் நமக்கெல்லாம் தோன்றக்கூடிய உண்மை.

எது எப்படியானாலும் நம் சின்னதுரை பிறந்தது இந்தக் குருட்டு நம்பிக்கை உள்ள ஒரு குடும்பத்திலே தான். அவன் அப்பா கட்டுக்கட்டாக விபூதி - அதாவது 'வெறும் சாம்பல் இருக்கிறது பாருங்கள், ஸார்; அதைத் தான்'-பூசிக்கொள்வாராம். அம்மா நித்தமும் பிள்ளை யார் கோவிலுக்குப் போய்க் குட்டுப்போட்டுக் கொள் வாளாம். சின்னதுரைக்கு அந்தப் பிள்ளையார் வெறுங் கல் என்று நிச்சயமாகத் தெரிகிறது; அவனுடைய பகுத் தறிவு அதை மிகவும் தெளிவாகத் தெரிவிக்கிறது. ஆனால், அவன் அம்மாவுக்கு என்னவோ அது சித்தி விநாயகாராகக் காட்சி யளித்தது. இது மட்டுமா? அந்தச்

சித்தி விநாயகர் அளித்த வரப் பிரசாதமாகவே சின்ன துரையை அவள் மதித்தளாம். எத்தனையோ காலம் பிறக்காமல் பிறந்த மகனும் சின்னதுரை. இந்த விவரமெல்லாம் சின்னதுரையே சொல்லித்தான் நமக்குத் தெரியும்.

அப்பாவும் அம்மாவும் போய் விட்டார்கள். இப்போது சின்னதுரையே ஓர் அப்பா ஆகிவிட்டான். ஓர் அப்பாதான். ஆனால், குழந்தைகள் ஐந்தாறு. சனியன் பிடித்த குழந்தைகள்! அவன் எந்தக் கல்லுப் பிள்ளையாரையும் வேண்டிக் கொள்ளவில்லை; வெண்கலக் கிருஷ்ணனையும் வேண்டிக் கொள்ளவில்லை. இதற்கு மாருக நூதன விஞ்ஞான 'ரிதும்' முறைகளையெல்லாம் கடைப்பிடித்துப் பார்த்தும் குழந்தைகள் பிறந்து கொண்டேயிருக்கின்றன. கல்யாணம் ஆகி ஏழெட்டு வருஷங்கள்தான் இருக்கும். இதற்குள்ளே ஐந்தாறு மக்கட்பேறு உண்டாகிவிட்டது.

அவள் ஒரு பழம் பசலி - சின்னதுரையின் மனைவி. அம்மா மாதிரியே இருக்கிருள் அவளும். கோயில் குளம், சாமி பூதங்களிலே அவளுக்கும் ரொம்பவும் நம்பிக்கை. யாரைச் சீர்திருத்தம் செய்தாலும் செய்யலாம், இந்தப் பெண்களை மட்டும் சீர்திருத்தம் செய்யவே முடியாது. இது சின்னதுரை, தன் சொந்த அநுபவத்திலே கண்ட பேருண்மை. இந்த ஏழெட்டு வருஷ காலமாக அவன் எவ்வளவோ பிரயாசை எடுத்துக்கொண்டும் மனைவியை மட்டும் அவனுல் மாற்றவே முடியவில்லை. அவளைக் கைவிடவும் முடியவில்லை. சாமியாராய்ப் போவதிலே அவனுக்கு நம்பிக்கை கிடையாது. மனைவியின் அபிப்பிராயங்கள்தான் அவனுக்குப் பிடிக்கவில்லையே தவிர, அவளை ரொம்பவும் பிடித்திருந்தது. அதுவும் வரவர அவள் இல்லாமல் வாழ்க்கையே அசாத்தியம் என்ற நிலைக்குப் பாசம் முற்றிவிட்டது.

இந்தக் கட்டத்திலே நான் சின்னதுரைக்கு ஏழாவது குழந்தை பிறந்தது. இதுவரைக்கும் பிறந்த குழந்தைகள் மாதிரி இந்தக் குழந்தை பிறக்கவில்லை. இந்தக் குழந்தையைக் கர்ப்பத்திலே சுமந்துகொண் டிருந்த போது, சின்னதுரையின் மனைவி நடந்துகொண்ட விதமே அலாதியாக இருந்தது. கணவனிடம் எந்நேரமும் புன்சிரிப்புடன் அகாரணமாக ஏதாவது பேசிக் கொண்டேயிருந்தாள். அவனை , ஒரு நிமிஷங்கூட விட்டுப் பிரிய மனமில்லாதவள்போல் தோன்றினாள். "இன்றைக்கு ஆபீஸில் லீவு போட்டுவிடுங்களேன்" என்று அடிக்கடி சொன்னாள். இதெல்லாம் ஏன் என்று சின்னதுரைக்குப் புரியவேயில்லை. விஷயம் அவன் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. என்றாலும், அவனுக்கும் என்னவோ அவளிடம் ஒருவித இரக்கம் கலந்த அன்பு கனிந்தது. அவள் மனம் துளிக்கூடக் கோணாதபடி அவளுக்கு வேண்டிய சௌகரியம் எல்லாம் செய்து கொடுக்க வேண்டும் என்று தோன்றியது.

ஒரு நாள் அவனும் அவளும் தனியே இருந்த போது, அவள் சிரித்துக்கொண்டே அவனுடைய மோவாய்க்கட்டையைப் பிடித்து நிமிர்த்தி, "இதோ பாருங்கள் ; நான் இந்தத் தடவை பிழைக்க மாட்டேன்" என்று வெகு லேசாகச் சொன்னாள்.

"சே அசடே! உளறாதே!" என்றான் சின்னதுரை. அவள் சொன்ன வார்த்தை அவனுக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

"இல்லை. உங்களுக்குத் தெரியாது. நான் போய் விட்டால், நீங்கள் என்ன பண்ணுவீர்கள்? அதுதான் எனக்குச் சங்கடமாக இருக்கிறது" என்று மறுபடியும் சொன்னாள் அவள்.

சின்னதுரைக்குக் கண்ணிலே நீர் வந்தது. தான் ஒரு குற்றவாளிபோல் அவன் மனம் தவித்தது. அவனுல் பேச முடியவில்லே.

"சரி, இன்றைக்கு ஆபீஸுக்குப் போகவேணு மில்லேயா ? சாப்பாடு தயாராகிவிட்டது. குளித்துவிட்டுச் சாப்பிட வாருங்கள்" என்று அவளாகவே பேச்சை மாற்றினுள்.

சின்னதுரை சாப்பிட்டுவிட்டு ஆபீசுக்குப் புறப் பட்டான்.

பஸ்ஸிலே போய்க்கொண் டிருந்தபோது, அவன் மனத்திலே சில எண்ணங்கள் எழுந்தன. அவளுக்கு எப்படி இந்த மாதிரி ஓர் எண்ணம் உண்டாயிற்று ? குழந்தை பெறுவது என்ருல், அது ஏதோ பெரிய காரியம் என்று அவனுக்கு இதுவரைக்கும் ஏன் தோன்றவில்லே ? இப்போதுந்தான் என்ன ? எந்த ஆணுக்கும் இல்லாத இந்த் அநுபவம் பெண்களுக்கு மட்டுமே தனி உரிமை யாக அமைந்திருப்பது என்ன ஆச்சரியம்! இது ஒன்றுமே புரியவில்லேயே! ஏன் அவள் இப்படிச் சொன்னுள் ? ஏன் சொன்னுள் ?

சின்னதுரை ஆபீசுக்குப் போனுன். அரையும் குறையுமாக அன்றைய வேலேகளேச் செய்து முடித்தான். நேரந் தாழ்க்காமலே வீடு வந்து சேர்ந்தான்.

வாசலிலே வழிபார்த்து நிற்கும் மனேவி அன்று அப்படி நிற்கவில்லே. ஐந்து வயசு மணி வந்து கதவைத் திறந்தான். மற்றக் குழந்தைகள் ஊரிலேயே இல்லே; எல்லாம் பாட்டி வீட்டுக்குப் போயிருந்தன.

"மணி, அம்மா என்ன செய்கிருள் ?" என்று கேட் டுக்கொண்டே உள்ளே நுழைந்தான் சின்னதுரை.

" கட்டிலில் படுத்திருக்கிருள்."

" சமைக்கவில்லையா ?"

" எனக்குத் தெரியாது."

" உனக்கு என்னதான் தெரியும் ? அசடு! அசடு!" என்று செல்லிக் கூடத்துக்குப் போனுன் சின்ன துரை.

கட்டிலில் படுத்திருந்த மனைவி மெல்ல எழுந்திருந் தாள். முகம் சற்று வாடியிருந்தது. ஆயினும் புன் சிரிப்பு ஒளி விட்டது. என்றுமில்லாத சோபை ஒன்று அவள் முகத்திலே பொலிந்தது.

" இன்று எனக்கு உடம்பு என்னவோ ஒருவிதமாக இருக்கிறது " என்ருள்.

" டாக்டரை அழைத்து வரட்டுமா? இல்லை என்ருல், வண்டி கொண்டு வருகிறேன் ; ஆஸ்பத்திரிக்குப் போக லாம் " என்று சொல்லித் திரும்பினுன் சின்னதுரை.

மனைவி 'கொல்' என்று சிரித்தாள். அந்தச் சிரிப்பே அவனுக்கு ஒரு தைரியத்தைக் கொடுத்தது.

" உங்களுக்கு என்ன தெரியும், இதெல்லாம் ? இப் போது ஒன்றும் வேண்டாம். இப்படித்தான் இருக்கும். வேண்டும் போது சொல்கிறேன் " என்ருள் மனைவி.

முன்னதாகவே சமையல் ஆகியிருந்தது. நேரத் தோடேயே 'சோற்றுக்கடை' முடிந்தது; அதாவது எல் லாரும் சாப்பிட்டாயிற்று. எல்லாருமாவது ; குழந் தையும் சின்னதுரையும் சாப்பிட்டார்கள். முத்தம்மாள்-சின்னதுரையின் மனைவிதான்-அவள் ஏதோ இரண்டு பருக்கை கொறித்தாளே தவிர, நன்ருய்ச் சாப்பிட வில்லை. ஆனுல் அது சின்னதுரைக்குத் தெரியாது.

குழந்தை தூங்கிவிட்டது.

மெத்தையைக் கீழே போட்டுக்கொண்டு சின்ன துரை படுத்துக்கொண்டான். அவனுடைய தலைமாட்டில், சற்றுத் தள்ளித் தலைவைத்து மறுபுறம் கால் நீட்டியிருக்கும்படிதான் முத்தம்மாள் படுப்பது வழக்கம். தலைப் பக்கத்தில் மின்சார விளக்கு, மின்சார விசிறி இரண்டும் இருக்கவேண்டும் சின்னதுரைக்கு. விசிறியை முடுக்கிவிட்டுப் பகுத்தறிவுப் போட்டி... இல்லை, இல்லை; பகுத்தறிவுப் பிரசுரமான 'ஆர். பி. ஏ.' (ரேஷனல் ப்ரெஸ் அஸோஸியேஷன்) புஸ்தகம் ஒன்றைப் பிரித்துப் படித்துக்கொண்டே இருந்தால்தான் சின்னதுரைக்குத் தூக்கம் வரும்.

இருவரும் படுத்துச் சற்று நேரமாயிற்று.

"என்ன ? தூங்கிவிட்டீர்களா ?"

முத்தம்மாளின் கேள்விக்குப் பதில் இல்லை. சின்ன துரை தூங்கத்தான் தூங்கிவிட்டான்.

முத்தம்மாள் எழுந்து உட்கார்ந்தாள். குழந்தையின் முகத்தை ஒருமுறை பார்த்தாள். பிறகு சின்ன துரையின் முகத்தை அன்பு ததும்பப் பார்த்தாள். அவள் முகத்திலே ஓர் ஏக்கம் படர்ந்தது. "தாயே...சீதா... தேவீ..." என்று ஏதோ முணு முணுத்தாள். சிறிது பெருமூச்செறிந்தாள். பிறகு விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தாள்.

சின்னதுரைக்கு இதெல்லாம் தெரியாது. அவன் தூங்கிக் கொண்டிருந்தான். ஆழ்ந்த தூக்கம் என்று சொல்ல முடியாது. ஏதேதோ தீய கனவு. உளறிக் கொண்டேயிருந்தான்.

"இன்று உளறல் கொஞ்சம் அதிகம்" என்று தனக்குத் தானே முனகினாள் முத்தம்மாள். சற்று நேரத்தில் அவளும் தூங்கிவிட்டாள்.

விளையாட்டுப் பிள்ளையாக இருந்த காலத்தில், இஸ்லாமியத் தெரு, கிறிஸ்தவ உபதேசியார் வீடு, ஆரிய சமாஜி ஒருவர் வீடு இங்கெல்லாம் சின்னதுரைக்குப் பழக்கம். இங்கெல்லாம் இருந்த பல சிறுவர்கள்தான் அவனுடைய விளையாட்டுத் தோழர்கள். சொல்லப் போனால், அந்தப் பையன்களிடமெல்லாம், 'யார் சாமி பெரிய சாமி?' என்று நடக்கும் தர்க்கங்களைக் கேட்டுக் கேட்டுத்தான், எந்தச் சாமியுமே உண்மையில்லை என்ற அபிப்பிராயம் அவனுக்கு ஏற்பட்டது. பிறகு பகுத்தறிவுப் பிரசுரங்களைப் படித்து, விஷயம் அவனுக்கு உறுதிப் பட்டுவிட்டது.

இப்போது, கனவிலே அந்தக் காட்சிகளெல்லாம் அவன் மனத்தில் திரும்பவும் சில மாறுதல்களுடன் நிகழ்ந்தன. ஜப்பார், அந்தோனி, தயானந்த் எல்லாரோடும்-இதென்ன இது, முத்தம்மாள் நின்றுகொண்டு தர்க்கம் செய்கிறாளே! மஞ்சள் துணி உடுத்து, துரோபதி மாதிரி கூந்தலை விரித்துக்கொண்டு தர்க்கம் செய்கிறாள்! அடேடே! திடீரென்று ஒரு வாள் அவள் கையிலே தோன்றுகிறது! ஐயையோ; அதை...அதை ஓங்குகிறாளே!

"ஏ முத்தா!"

சின்னதுரை உரக்கக் கத்திவிட்டான். அப்படியே விழிப்புற்றான்.

முத்தம்மாள் ஏதும் பதிலே சொல்லவில்லை. ஆனால், 'உம்...உம்' என்று அவள் முனகும் சப்தம் கேட்டது.

"முத்தா!"

இப்போதும் பதில் இல்லை.

விளக்கைப் போட்டு, அந்த ஒளியிலே பார்த்தால், முத்தம்மாள் அவள் படுக்கையிலே படுத்திருக்கவில்லை. சுவரிலே சாய்ந்து, 'உம்...உம்' என்று மூச்சுத் திணற, உதட்டை மடக்கிப் பல்லால் கடித்து முனகிக் கொண்டிருந்தாள்.

"என்ன இது, முத்தா ?"

மெல்லச் சிரமப்பட்டுச் சிரித்துக்கொண்டே, "ஒன்றுமில்லை. நீங்கள் சும்மா படுங்கள்; விளக்கை அணையுங்கள்" என்று மெல்லிய குரலில் அவள் சொன்னாள்.

இப்போதுகூடச் சிரிக்கிறாள் அவள் !

" நான் போய் டாக்டரை அழைத்து வருகிறேன்."

" ஏன் இப்படிக் கலாட்டா செய்கிறீர்கள் ? பொழுது விடிந்து பார்த்துக்கொள்ளலாம் " என்றாள் முத்தம்மாள்.

சின்னதுரைக்கு ஒரே பயமாக இருந்தது. மனைவி சொன்னதை அவன் கேட்கவில்லை. பக்கத்து வீட்டுப் பாட்டி ஒருத்தியை வீட்டுக்கு அழைத்து வந்து மனைவிக்குத் துணையாக உட்கார்த்திவைத்தான்.

அந்த இரவின் இருளிலே ஓடினான், டாக்டர் வீட்டுக்கு.

டாக்டர் அம்மாள் ஒரு நர்ஸை அழைத்துக்கொண்டு, வாடகைக் காரிலே இவர்களுடைய வீட்டுக்கு வந்தாள்.

கர்ப்பஸ்திரீயைப் பார்த்தாள் டாக்டர் அம்மாள். " சரி ; நீங்கள் கொஞ்சம் வாசல் பக்கம் போயிருங்கள் " என்று சின்னதுரையிடம் சொன்னாள்.

வீட்டின் முன்புற ஹாலிலே வந்து, நாற்காலியில் உட்கார்ந்தான் சின்னதுரை. கணநேரங்கூட இருப்புக் கொள்ளவில்லை.

குழந்தை மணி நல்லவேளையாக விழித்துக்கொள்ள வில்லை; கவலையில்லாமல் தூங்கிக் கொண்டிருந்தான்.

"மணி...மணி...உள்ளேதான் தூங்கிக் கொண் டிருக்கிறான்..."

இப்படி என்னவோ தனக்குத்தானே சொல்லிக் கொண்டே ஹாலில் இங்கும் அங்கும் நடந்தான் சின்ன துரை.

சற்று நேரத்தில் டாக்டர் அம்மாள் வெளியே வந் தாள்.

"கேஸ் கொஞ்சம் கடுமையானதுதான். ஆனால், இப்போது ஆஸ்பத்திரிக்கும் கொண்டுபோக முடியாது. 'ப்ரீவியா ப்ளெஸண்டா' "

"அப்படி என்றால் என்ன? கொஞ்சம் விளக்கிச் சொல்லுங்களேன்" என்று ஏங்கிய குரலில் கேட்டான் சின்னதுரை.

"விளக்கிச் சொன்னால் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? நஞ்சுக் கொடி முந்தப்பார்க்கிறது. போதுமா?" என்று முகத்தைச் சிணுக்கிக்கொண்டே டாக்டர் பதில் அளித்தாள்.

"அதற்கு...?"

"அதற்கு ஒரு டாக்டர் என்ன செய்ய முடியுமோ அதை நான் செய்கிறேன். பிறகு கடவுள் கருணை வைக்கவேண்டும். இஞ்செக்ஷன் போட்டிருக்கிறேன். போது விடிந்ததும் நான் மறுபடி வருகிறேன்" என்று சொல்லி டாக்டர் அம்மாள் கிளம்பிவிட்டாள்.

போது விடிவதா? மாளாத போது அது? மனிதனுக்குக் கவலை ஏற்படும் போது, இர

வும் பகலுங்கூட நின்று நின்று அவனை மிரட்டுகின்றனவே! அப்பாடா! கடைசியாக எப்படியோ ஒரு விதமாய் நல்லபடியாய்ப் போது விடிந்தது.

டாக்டர் அம்மாள் சொன்னபடி வந்தாள். முத்தம்மாளைப் பார்த்தாள்.

" பரவாயில்லை; போக்கு நின்றிருக்கிறது. ஒரு வண்டி வைத்து, மெல்ல ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்துவிடுங்கள் " என்று சொல்லிச் சென்றாள்.

வாடகைக் காரிலே ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்தாள் முத்தம்மாள்!

அவளை அங்கே கொண்டுபோய் விட்டுவிட்டு, குழந்தை மணிக்கு உணவளித்து, மற்றுமுள்ள வீட்டு வேலைகளைக் கவனித்தான் சின்னதுரை.

மறுநாள் காலை வரைக்கும் ஆஸ்பத்திரியிலே என்ன நடக்கிறதென்றே சின்னதுரைக்குத் தெரியாது. அங்கே போய் டாக்டர் அம்மாளைச் சுலபமாய் அடிக்கடி சந்திக்க முடியுமா? மற்றவர்கள் ஒன்றும் சரியாய்ப் பதில் சொல்லவில்லை. " கேஸ் கடுமையான கேஸ்தான் " என்று மாத்திரம் எல்லாரும் சொன்னார்கள்.

காலையில் நல்ல சேதி கிடைத்தது. மிகவும் கஷ்டமான பிரசவம். குழந்தையை உயிரோடு எடுத்தது பெரிய ஆச்சரியம். பிறக்கும்போதே எட்டரைப் பவுண்டு நிறை இருந்ததாம் குழந்தை. டாக்டரின் திறமையை எல்லாரும் மெச்சினார்கள்.

இப்படியெல்லாம் பெருங் கஷ்டம் கொடுத்துப் பிறந்த ஏழாவது குழந்தை, ஒன்றரை வயசு வரைக்கும் ஒரு நோய்நொடி இல்லாமல் சுகமாக வளர்ந்தது. முருகன் என்று அதற்குப் பெயர் வைத்தாள் முத்தாயி.

சின்னதுரைக்கு அந்தப் பெயர் பிடிக்கவில்லை. என்ருலும், மனைவியின் விருப்பத்துக்கு மாறு செய்ய அவனுக்கு இஷ்டமில்லை.

இதுவரைக்கும் எந்தக் குழந்தையினிடமும் இல்லாத வாஞ்சை முருகனிடம் சின்னதுரைக்கு உண்டாயிற்று.

யாரைக் கண்டாலும், " முருகு பிறந்தபோது என்ன நிறை இருந்தது தெரியுமோ? எட்டரைப் பவுண்டு" என்று பெருமையோடு சின்னதுரை சொல்லுவான். முருகனை எப்போதும் வாரி யெடுத்து முத்தமிட்டுக் கொஞ்சுவான்.

இப்படிப்பட்ட முருகனுக்குத் திடீரென்று நோய் வந்தது. உணவு செல்லவில்லை. வரவர இளைக்க ஆரம்பித்தான். தினந்தோறும் மாலையிலே காய்ச்சல்.

சின்னதுரை தவியாய்த் தவித்தான். குழந்தை வைத்தியத்திலே மிகவும் பிரபலமான பெரிய டாக்டர் ஒருவரிடம் முருகனைக் கொண்டு சென்ருர்கள்.

அந்த டாக்டர் வீட்டு வாசலிலேதான் எத்தனை குழந்தைகள்! எப்படியெல்லாம் நோய் அங்கே காட்சி அளித்தது! டில்லி, பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களிலிருந்தெல்லாம் குழந்தைகளைக் கொண்டு வந்திருந்தார்கள். மகா மோசமான நிலையில் இருந்தன சில குழந்தைகள். முருகனுக்கென்ன? சாதாரணக் காய்ச்சல்; சிறிது இளைப்பு—இவ்வளவுதானே! சின்னதுரையின் மனத்திலே தெம்பு பிறந்தது.

முருகனுக்கு டாக்டர் வைத்தியம் செய்யத் தொடங்கினுர். மாதம் இரண்டு சென்றன. குணத்தைக் காணவில்லை. டில்லி, பம்பாய், கல்கத்தா நகரக் குழந்தைக

ளெல்லாம் குணமடைந்து வந்ததைச் சின்னதுரை தன் கண்ணுல் கண்டான். அவை யெல்லாம் ஊருக்குக்கூடத் திரும்பிவிட்டன.

முருகன் மட்டும் தேறவில்லை. சின்னதுரை ஏங்கிஞன்.

"டாக்டர், இந்தக் குழந்தை..." என்று ஏதோ கேட்க வாயெடுத்தான்.

"மோர் மாத்திரம் கொடுங்கள். நான் காப்பாற்றுகிறேன், இந்தக் குழந்தையை" என்று அபயம் கொடுத்தார் டாக்டர்.

"காய்ச்சல் அடிக்கிறதே..."

"அதைப்பற்றி உங்களுக்கென்ன? நான் சொல்கிறபடி செய்யுங்கள்" என்ருர் டாக்டர்.

டாக்டர் சொல்கிறபடி யெல்லாம் செய்தாயிற்று. முருகன் தேறுகிற வழியாகத் தோன்றவில்லை.

ஒரு நாள் இரவு நிலைமை மகா மோசமாகிவிட்டது.

காய்ச்சல் கடுமையாகிவிட்டது. சின்னதுரை பதறிஞன். 'இதற்கு என்ன செய்வோம்? எதற்காக இந்தக் குழந்தை பிறந்தது? வேறு எந்தக் குழந்தையிடமும் வைக்காத வாஞ்சையை இந்தக் குழந்தையிடம் ஏன் வைத்தோம்?' என்றெல்லாம் நொந்துகொண்டான்.

முத்தம்மாள் ஒரு வார்த்தையும் பேசவில்லை. ஒரு துணித்துண்டை எடுத்தாள். மஞ்சள் நீரில் தோய்த்தாள். அரை ரூபாய் பணத்தை எடுத்து அதில் முடிந்தாள்.

இதையெல்லாம் பார்த்துக்கொண் டிருந்த சின்னதுரையின் மனத்திலே ஒரு போராட்டம் எழுந்தது.

தெய்வமாவது மண்ணாவது! அப்படியே தெய்வம் இருந்தாலும் இந்த மாதிரி வேண்டுதலை எல்லாம்... ஆமாம்; ஏன் கூடாது? ஏன் செய்யக்கூடாது? மனிதனுடைய நெஞ்சு வேதனைக்கு மாற்றே இல்லையா? முருகு இதோ சின்னதுரையின் முகத்தைப் பார்க்கிறான்; முத்தம்மாளின் முகத்தைப் பார்க்கிறான். "நீங்கள் எல்லாம் இருக்கிறீர்களே; இருந்து எனக்கு என்ன பயன்?" என்று அந்தச் சிறு முகம் கேட்பதுபோல் தோன்றுகிறது. டாக்டர் பெரிய நிபுணர்தான்; வைத்தியம் பெரிய விஞ்ஞானந்தான். நிபுணரையும் விஞ்ஞானத்தையும் இப்படித் தோற்கடிக்கிறதே, அது எது? எது?

சின்னதுரை என்ன என்னவோ எண்ணினான். மனத்தின் தாபம் மட்டும் துளியும் தீரவில்லை. மனைவியின் மஞ்சள் துணி முடிச்சுக் குழந்தையைக் காப்பாற்றட்டுமே - இப்படி ஓர் ஆசை அவனுக்கு ஏற்பட்டது. இந்த ஆசை ஏற்பட்டவுடனேயே அவன் மனத்தில் ஒரு மாறுதல் தோன்றியது.

தெய்வம் இருந்துதான் ஆகவேண்டும். யாராலும் எதனாலும் ஆகாத காரியங்கள் எத்தனையோ நடக்கின்றன உலகத்தில். அவற்றைச் சாதிப்பது தெய்வந்தான். 'அது என் முருகனைக் காப்பாற்றட்டுமே' என்று எண்ணினான் சின்னதுரை.

மெல்ல மெல்லத் திருப்பதி வேங்கடாசலபதிக்குத் தானும் ஒரு வேண்டுதலை செய்துகொள்ளும் நிலைக்கு அவன் வந்துவிட்டான்.

அப்போது அவன் மனத்திலே பரிபூர்ண நிம்மதி ஒன்று ஏற்பட்டது.

அப்பாடா! இந்த நிம்மதி போதும். மனத்திலே இருந்த பெருஞ்சுமை நீங்கியது. முருகன் பிழைப்பதோ சாவதோ வேங்கடன் அருளாலே. அதைப்பற்றிக்கூட இனி வேண்டுதலை செய்வது தவறு. 'எது எப்படி நடக்க வேண்டுமோ அது அப்படியே நடக்கட்டும்' என்ற முடிவுக்கு வந்தான் சின்னதுரை.

அவன் மனவேதனை அகன்றது. தூங்கினான்.

போது விடிந்தது. ஆனால், முருகனுக்குப் போது விடியவில்லை. ஒரே இருளிலே குழந்தை நிம்மதி பெற்று விட்டான்.

பிறகு பலநாள் வரைக்கும் எரியும் மெழுகுவர்த்தி மாதிரி சின்னதுரைக்குத் தெய்வ நம்பிக்கை தொடர்ந்து இருந்து வத்தது.

அப்புறம் ஒரு நாள் சிறிது சில்லறை தேவைப் பட்டது. அவ்வளவுதான்; கடவுள் நம்பிக்கை என்ற மெழுகுவர்த்தியின் கடைசி ஜ்வாலி மங்கிச் சுடர்விட்டு மினுமினுத்து அவிந்துவிட்டது. அப்போது அந்த மஞ்சள் துணி முடிச்சுச் சின்னதுரையின் கண்ணிலே பட்டது. அதை அவிழ்த்து அரைரூபாயைக் கையிலே எடுத்துக்கொண்டான்.

"ஐயோ! அந்தப் பணம் எதற்கு? ஏதாவது கோயிலுக்குக் காணிக்கை செலுத்திவிடலாம். சுவாமி கொடுத்ததைச் சுவாமி வாங்கிக்கொண்டார். அதற்காக நாம் மனசு மாறலாமா?" என்றாள் முத்தம்மாள்.

" இதோ பார். இதெல்லாம் பெரிய அசட்டுத்தனம்! சாமியாவது, பூதமாவது, துணி முடிச்சாவது! உன்னைப் பார்த்து நான்கூட..." என்று ஏதோ சொல்ல வந்ததை

முடிக்காமலே, சிரித்துக்கொண்டு வெளியே போய் விட்டான் சின்னதுரை.

கடவுள் படைத்த படைப்பை, மனிதன் மாற்ற முடியுமா? சின்னதுரையைப் பிறவியிலேயே ஒரு குணத் தோடு படைத்திருக்கிருர் கடவுள். அதை மாற்றிக் கொள்ள அவனே முயன்ருலும் கடவுள் விடமாட்டார் போல் இருக்கிறது! இதுதான் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய ரகஸ்யமா? அல்லது வேறு ஏதாவது தெய் விக ரகஸ்யம் இருக்குமோ இதில்?

தங்கச் சாமியார்

"பாவா, ஒரு பைஸா கொடு!"

சுருள் சுருளாகக் காற்றிலே அலையும் பரட்டைத் தலைமயிர். மார்பிலே புரளும் தாடி. கன்னம்வரையில் படர்ந்திருக்கும் மீசை. கம்பீரமான மூக்கு. அகன்ற நெற்றி. ஒளிவிடும் கண்கள். ஆஜானுபாகுவான மேனி. மொத்தத்தில் பழங்காலத்து ரிஷீசுவரர்களைப் போன்ற தோற்றம். இத்தகைய ஒரு மனிதரின் குரலே அது: ஒரு பைஸாவை அவர் யாசகந்தான் கேட்கிறார். ஆனால், அந்தக் குரல் யாசகக் குரலல்ல; கட்டளைக் குரலோ என்றால், அதுவும் அல்ல. அன்பு கனிந்த நட்புக் குரல்; உரிமையோடு கேட்கும் குரல்.

"பாவா, பைஸா கொடு."

ஊரில் உள்ள எவரை வேண்டுமானாலும் அவர் இப்படிக் கேட்பார். ஒரு நாளைக்கு ஒரே ஒரு தடவை தான். அன்று யாருக்கு முறை விழுகிறதோ அதைச் சொல்ல முடியாது. யாரைக் கேட்டாலும், அவருக்குப் பைஸா வந்துவிடும். கொடுப்பவர்கள் அதை ஒரு பெருமையாகவே நினைத்துக்கொண்டு கொடுப்பார்கள்.

தங்கச் சாமியார், யாரையும் ஒரு பைஸாவுக்குமேல் கேட்கமாட்டார். அதற்கு மேல் கொடுத்தால் வாங்கிக் கொள்ளவும் மாட்டார். அவருக்குக் கொடுப்பதற் கென்றே கழனியூரில் உள்ளவரெல்லாம் பைஸாச் சில்லறை மாற்றி வைத்துக்கொண்டிருப்பார்கள் என்ருல், கேட்பவருக்கு விநோதமாகத் தோன்றும். ஆனுல், உண்மை அதுதான். காரணம் உண்டு; அவர் சாதா ரணச் சாமியார் அல்ல.

அவரிடம் பைஸாவைக் கொடுத்ததும், வழக்கமாக ஓர் அற்புதம் செய்து காட்டுவார்.

"பாவா, நீ மகராஜனு யிருப்பாய். ஆண்டவன் உனக்குச் சகல பாக்கியமும் அளிப்பான். நீ கொடுத்த பைஸா, வெறும் பைஸா அல்ல; அப்படியே தங்கம்" என்று சொல்லுவார்.

பைஸாவை வாங்கி மூடிய கையைத் திரும்பவும் திறந்து காட்டுவார். என்ன ஆச்சரியம்! ஒரு சிறு தங்கத் துண்டாக அது மாறியிருப்பதை நாம் காண்போம். செப்புப் பைஸா தங்கம் ஆகிவிட்டது.

சாமியாரின் தங்கத் துண்டை, மாற்று உரைத்துக் கூடப் பார்க்காமலே, உள்ளூர் நகை ஆசாரி வழக்கமாக வாங்கிக் கொள்ளுகிருர். எதற்காகச் சாமியாரின் தங் கத்தை மாற்று உரைத்துச் சோதிக்கவேண்டும்? அது சுத்தமான தங்கம் என்று ஆசாரிக்கு நிச்சயமாய்த் தெரியும்.

முதல் முதல் சாமியார் இப்படித் தங்கம் செய்த போது, எல்லாருக்கும் சந்தேகமாகத்தான் இருந்தது; யாருக்கும் நம்பிக்கை ஏற்படவில்லை.

"ஏதோ சூது!" என்று சிலர் சொன்னுர்கள்.

"என்னவோ பச்சிலைச் சாறு கொண்டு தடவி விடுவான். அது தங்கம்போல் கொஞ்ச நாழிகை மின்னும்" என்றவரும் உண்டு.

"அப்படியானால் அந்தப் பைஸாவில் இருந்த எழுத்துக்கள் எங்கே போயின? தங்கத் துண்டில் அந்த எழுத்துக்களைக் காணவில்லையே! தவிர, பைஸா அளவைவிடத் தங்கத் துண்டு மிகச் சிறுத்திருக்கிறதே!"

"ஆம்; அதில்தான் இருக்கிறது ரகஸ்யம்."

"என்னவானாலும் சரி; இதெல்லாம் கண்கட்டு வித்தை. இந்தத் தங்கம் மாயத் தங்கம். மூன்றே முக்கால் நாழிகைதான் இது நிலைத்திருக்கும். பிறகு மண்ணாய்ப் போகும்."

இந்த மாதிரி என்ன என்னவோ பேசிக்கொண்டார்கள் ஊரார். ஆனால், அந்தத் தங்கத்தை, முதல்நாள் அன்று, ஆசாரி மாற்றுரைத்துப் பார்த்தார். சந்தேகமறத் தங்கந்தான்; பத்தரைமாற்றுத் தங்கம். பல மணி நேரம் வைத்துப் பார்த்த பிறகும், அது தங்கமாகவே இருந்தது.

பின்பு பலநாள் சோதித்தாயிற்று. துளியும் சந்தேகத்துக்கு இடம் இல்லை. தினமும் வரும் தங்கம் உண்மையான தங்கம்; சாமியார் தங்கச் சாமியார். அவருக்கு அந்தப் பெயர் ஏற்பட்டு நிலைத்துவிட்டது.

செம்பைத் தங்கமாக்குவதென்றால், என்ன ஆச்சரியம்! பல்லாயிரம் வருஷங்களாக எத்தனையோ பேர் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ரசவாத வித்தையே ரசாயன சாஸ்திரத்தின் தாய். ரசவாதம், ஜோஸ்யத்தைப் போன்றது; ரசாயனம், வானசாஸ்திரத்தைப் போன்றது. ரசவாதமும் ஜோஸ்யமும் எத்தனை பேரின் நம்பிக்கையில் ஊன்றியிருக்கின்றன! அந்த நம்பிக்கை

யால் எத்தனை பேர் ஏமாந்து வருகிறார்கள்! ரசவாதமும் ஜோஸ்யமும் போலி வித்தைகள் என்கிறார்கள் விஞ்ஞானிகள். ரேடியம் தங்கமாகுமாம்; தங்கம் ஈயமாகுமாம். இது இயற்கையாம். ஆனால், ஈயம் தங்கமாகாதாம். இப்படிச் சொல்லும் விஞ்ஞானிகள்கூட மிகப் பெருத்த செலவில், சிறிது பாதரஸத்தைச் சிறிது தங்கமாகச் செய்ய முடிகிறது. பத்துக் கோடி தோலா கடல் நீரிலிருந்து ஐந்து முதல் இருநூற்றைம்பது தோலா தங்கமும், ஒரு டன் நிலக்கரியிலிருந்து காலணா விலையுள்ள தங்கமும் எடுக்கலாம் என்று அவர்களே சொல்கிறார்கள். நினைக்க முடியாத செலவில் இப்படி அற்பத் தங்கம் எடுப்பதைவிட, ஒரு பைஸாவுக்கு மூன்று ரூபாய் மதிப்புள்ள தங்கத்தை ஒரு சாமியார் செய்வது எவ்வளவு அதிசயம்! ஆமாம்; சாமியார் வழக்கமாய்க் கொடுக்கும் தங்கத்துக்கு மூன்று ரூபாயைக் கண்ணை மூடிக்கொண்டு கொடுத்துவிடுவதென்பதை, ஆசாரி வழக்கமாக வைத்துக்கொண்டுவிட்டார்.

அன்றன்று கிடைக்கும் பணத்தை அன்றன்றே சாமியார் செலவழித்து விடுவார். யாரிடமிருந்தும் ஒரே ஒரு பைஸாவைத் தவிர, வேறு எதையும் - ஒரு கவளம் அன்னத்தைக்கூட - அவர் தானமாக வாங்கமாட்டார். அவருடைய ஒருநாள் சாப்பாடு, உயர்ந்தால் எட்டணாவுக்குள் அடங்கிவிடும். மீதி இரண்டரை ரூபாயையும் கொண்டு குழந்தைகளுக்கு இனிய தின்பண்டங்கள் வாங்கிக் கொடுப்பார்; பந்து, பம்பரம் முதலிய விளையாட்டுச் சாமான்கள் வாங்கி வழங்குவார். இதனால் பல குழந்தைகள் அநேக சமயம் அவரைச் சுற்றிக்கொண்டிருக்கும்.

எங்கிருந்தோ கழனியூருக்கு வந்து சேர்ந்தார் தங்கச் சாமியார். அவர் வந்து மூன்று வருஷத்துக்குமேல் ஆகி

விட்டது. அவரால் யாருக்குமே எந்தவித உபத்திரவமும் இல்லை. அவர் என்ன, பயங்கரப் புரட்சிக்காரரோ? கொள்ளைக் கூட்டத்திலிருந்து உளவறிய வந்தவரோ? 'மை, கிய்' போட்டு யாரையாவது வசியம் செய்து கெடுக்கவந்த மந்திரவாதியோ? இப்படியெல்லாம் ஆரம்பத்தில் ஊராருக்குத் தோன்றிய சகல சந்தேகங்களும் காலக்கிரமத்தில் மங்கி மறைந்தன. என்னவோ சித்தி கைவந்த ஒரு பெரியவர் என்றே ஊர்க்காரர்கள் மதித்தார்கள்.

சாமியார் எவருடனும் அதிகமாய்ப் பேசுவதில்லை. அதற்காக ஒரேயடியாய் மௌனம் சாதிப்பதும் இல்லை. ஏதோ சகஜமாக இரண்டு வார்த்தை பேசுவார். குழந்தைகளைக் கண்டால், சில சமயம் சிரிப்பார்; சில சமயம் கண்ணீர் விடுவார். அவர்களிடங்கூட அதிகமாய்ப் பேச மாட்டார்.

சாமியாரின் ஊர் எது? பேர் எது? பாஷை எது? இந்த விவரங்களை யாரும் அறிந்ததில்லை; யாரிடமும் அவர் சொன்னதில்லை. கேட்டால், புன்சிரிப்பு அரும்பிய முகத்துடன், "ஏதோ ஊர், ஏதோ பேர், ஏதோ பாஷை! அதெல்லாம் எதற்கு, பாவா?" என்று மழுப்பிவிடுவார். தமிழ் நன்ருய்ப் பேசுவதால், தமிழராய்த் தான் இருக்க வேண்டும். ஆனால், 'பாவா, பாவா' என்கிருரே, அது ஏன்? தவிர, தெலுங்கு, இங்கிலீஷ், ஹிந்தி இவைகளிலும் அது அது தெரிந்தவரிடம் அவர் பேசுவதுண்டு. என்ருலும், பிரமாதமாய் அவர் அப்படி என்ன பேசி விடுகிருர்? ஏதோ யோகக்ஷேம விசாரணையாக ஓரிரு வார்த்தைதானே பேசுகிருர்!

தெருக்கோடியில் ஒரு பிள்ளையார்கோயில் இருக்கிறது. பிள்ளையார் மிகவும் ஏழைப் பிள்ளையார். ஆனல்,

பெயர் சக்தி விநாயகர். உண்மையிலேயே பிள்ளையார் சக்தி மிக்கவர் என்பது ஊராரின் நம்பிக்கை. அந்தப் பிள்ளையார் கோயிலின் மண்திண்ணையில்தான் எந்நேரமும் தங்கச் சாமியாரின் வாசம். இரவு பகல் பெரும்பாலும் அங்கேதான் உட்கார்ந்திருப்பார்; அல்லது படுத்திருப்பார்.

கோயிலுக்கு இரண்டு பக்கமும் இடைவெளி விட்டு வீடுகள் தொடங்கும். தென்பக்கத்து இடைவெளி சொற்பம்; வட பக்கத்து இடைவெளி அதிகம். வட பக்கம் வழியாகவே எல்லாரும் குளிக்கத் தோய்க்கப் பாத்திரம் தேய்க்கக் குளத்தங்கரைக்குப் போவார்கள்.

கோயிலைத் தாண்டினதும் குளம். குளத்தின் மேலக் கரையோடு கப்பி ரஸ்தா போகிறது. அதன் வழியாக பஸ்களும் வண்டிகளும் ஓடும். ஒரு டவுன் மூன்றே மைல் தூரத்தில் இருக்கிறது. மறு டவுன் பதினைந்து மைல் தூரத்தில் இருக்கிறது. 'டவுன்' என்றால், கிட்ட இருப்பதைத்தான் கழனியூர்க்காரருக்கு ஞாபகம் வரும்.

தென்சாரியின் முதல் வீட்டு ராமநாதர் அடிக்கடி டவுனுக்குப் போவார். "பாவா, வரும்போது கொஞ்சம் கொடி முந்திரிப்பழம் வாங்கிவா" என்று சொல்லி இரண்டணாக் காசைக் கொடுப்பார் தங்கச்சாமியார். ராமநாதரும் அப்படியே வாங்கி வருவார். இது ஒரு வழக்கமாகி விட்டது. முன்னாலேயே காசை வாங்கிக்கொண்டு போகாவிட்டாலும், பழத்தை அவர் வாங்கிவந்து விடுவார். வந்ததும் சாமியார் காசு கொடுத்துவிடுவார்.

பல நாள் இப்படிப் பழம் வாங்கிக் கொடுத்திருக்கிறார் முதல் வீட்டுக்காரர். இதில் ஒரு சின்ன விநோதத்தைப் பல நாள் கழித்து அவர் கண்டார். பழத்தைப் பெற்றுக் கொள்ளும்போதெல்லாம் சாமியாரின் கை நடுங்கும்.

ஒரே ஒரு பழத்தை வாயிலே போட்டுக்கொண்டதும், சாமியாரின் முகம் பரம வேதனைப்படும். மீதிப் பழத்தை யெல்லாம் சாமியார் ஒரு புறம் வைத்து விடுவார்; யாருக்கும் கொடுக்க மாட்டார். பழம் முற்றும் அப்படியே அழுகிவிடும்.

அன்று இதைக் கவனித்த ராமநாதர், விசாரிக்க எண்ணினர்.

"ஏன் சாமி? பழத்தை ஏன் சாப்பிடாமல் எப்போதும் வீணடிக்கிறீர்கள்?"

'குப்' என்று சாமியாரின் கண்ணில் நீர் ததும்பி நின்றது. அவருடைய தாடைகளும் உதடுகளும் நடுங்கு வதைத் தாடி மீசைகளின் அலையசைவு எடுத்துக் காட்டியது. சாமியார் பேசவில்லை; ஒரு கணம் கண்ணை மூடிக் கொண்டார்.

அவருடைய சங்கடத்தைக் கண்டு, 'ஏனடா இந்தக் கேள்வியைக் கேட்டோம்?' என்று ராமநாதருக்குத் தோன்றிவிட்டது. அதற்குமேல் இந்த விஷயத்தை அவர் விட்டுவிட்டார்.

இதற்குப் பின்பும் டவுனுக்குச் செல்லும்போதெல் லாம் ராமநாதர் பழம் வாங்கிவருவது மட்டும் நிற்க வில்லை.

ஊருக்குள்ளேயே ராமநாதருக்கும் சாமியாருக்குந் தான் சற்றுப் பேச்சு வார்த்தை அதிகம் என்று சொல்ல வேண்டும். அதற்குக் காரணம் வேறொன்றும் இல்லை. ராமநாதர் வீடு முதல் வீடு. அதன் காம்ரா உள் ஜன்ன லும் பிள்ளையார்கோயில் திண்ணையும் மிக நெருங்கி யிருந்தன. அந்த உள்ளே இரவில் ராமநாதர் படுக்கும் அறை. கோயில் திண்ணையிலேயே சாமியாரின் படுக்கை.

இருவரும் படுத்தபடி ஒன்றிரண்டு வார்த்தை பேசிக் கொள்வார்கள்.

ராமநாதர் மிகவும் கண்ணியம் வாய்ந்தவர். அநாவசியமாய்ப் பிறர் விவகாரங்களில் துளியும் தலையிட மாட்டார். அவருடைய மனைவியும் அவரைப் போன்றவளே. அவர்களுக்குப் பிள்ளை குட்டி இல்லை. ராமநாதருக்கு வயது நாற்பது; மனைவிக்கு வயது முப்பத்திரண்டு. 'இது வரைக்கும் குழந்தையே பிறக்கவில்லையே' என்று தம்பதிகளுக்கு மனத்துக்குள் வருத்தம் உண்டு. ஆனால், ஒருவர் வருத்தத்தை மற்றவரிடம் சொல்லிக்கொண்டதே இல்லை.

ராமநாதரின் மனைவி ஒவ்வொரு நாள் மாலையும் சக்தி விநாயகருக்கு விளக்கேற்றி நமஸ்கரித்து விட்டு வருவாள். வெளியில் வந்ததும் சாமியாரையும் நமஸ்கரிப்பாள். அப்போதெல்லாம் என்னவோ சாமியார் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொள்வார். அந்த முகத்திலே கண்ணீர் மல்கும். ஏதோ முணுமுணுப்பார். இதையும் ராமநாதர் கவனித்திருக்கிறார். சாமியார் விஷயம் அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. 'இந்தப் பெரியவருக்கு உள்ளூற ஏதோ வருத்தம் இருக்கிறது' என்று மட்டும் அவருக்குப் புலப்பட்டது. ஆனால், சாமியாரை ராமநாதர் எதுவும் கிண்டிக்கேட்பதில்லை; தங்கம் செய்யும் ரகஸ்யத்தைப்பற்றிக் கூடக் கேட்பதில்லை. வேறே யார் யாரோ அந்த ரகஸ்யத்தைச் சாமியாரிடமிருந்து அறிந்துகொள்ள முயன்றதுண்டு. உளவெல்லாம் பார்த்தார்கள்; பச்சிலை, கிச்சிலை வைத்திருக்கிறாரோ என்று கூடச் சாமர்த்தியமாய்ச் சோதித்துப் பார்த்தார்கள். அப்படியெல்லாம் ஒன்றும் புலன் அகப்படவில்லை.

ஒரு நாள் இரவு பத்து மணியிருக்கும். ராமநாதர் வீட்டுக் காம்ரா உள் ஜன்னல் வழியாக ஹரிக்கன் விளக்குப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. வெளியே தெருவில் நிலவெறித்துக் கொண்டிருந்தது. பிள்ளையார் கோயில் திண்ணையில் தமது தென்னோலைக் கீற்றின் மீது சாமியார் படுத்துக் கொண்டிருந்தார்.

படுத்தபடியே, "பாவா, பாவா, தூங்கிவிட்டாயா? விழித்துக்கொண் டிருக்கிறாயா?" என்று தங்கச்சாமியார் கேட்டார்.

"விழித்துக்கொண் டிருக்கிறேன், சாமி. விளக்குத் தெரியவில்லையா?"

"சரி. அதனால்தான் கேட்டேன். ஒரு விஷயம், உனக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும்."

"என்ன விஷயம்?" என்று வியப்புடன் கேட்டார் ராமநாதர்.

"உன் சம்சாரம் ஏதோ ஒரு விதமாய் இருமுகிறாள். இது அபாயம், அப்பா; அபாயம்" என்றார் சாமியார். அப்போது அவர் குரலில் ஒரு விதக் கரகரப்பும் நடுக்கமும் தோன்றின.

"ஒன்றுமில்லை, சாமி, அது. ஏதோ சற்று நீர்க் கோத்துக்கொண் டிருக்கும். ஒன்றிரண்டு நாளில் சரி யாய்ப் போகும்."

"இப்படி அசட்டை செய்யாதே. அவளைக் கேள். தினம் சாயங்காலம் அவளுக்குக் காய்ச்சல் வருகிறதோ? வந்தால் அபாயம்."

அந்நிய புருஷர் யார் இருந்தாலும் - சாமியார் இருக்கும் போதுகூடத்தான் - ராமநாதரின் மனைவி இரைந்து பேசமாட்டாள். அறைக்குள் ராமநாதர் தம் மனைவி

யுடன் மெல்லிய குரலில் ஏதோ பேசிவிட்டு, "அப்படி ஒன்றும் இல்லையாமே?" என்று சாமியாரிடம் சொன்னார்.

பேச்சு இதனோடு முடிந்தது.

ஒரு மாதம் கழித்து ராமநாதரின் மனைவி எங்கோ உறவினர் குடும்ப விசேஷம் ஒன்றுக்குப் போய்விட்டாள்.

அன்றிரவு வீட்டிலே ராமநாதர் தனியாக இருந்தார்.

இருமல் விஷயத்தை மறுபடியும் பிரஸ்தாபித்தார் சாமியார் :

" உன் சம்சாரம் வரவர இளைத்து வருகிருள். இரண்டொரு நாளைக்கு முன் மறுபடியும் இருமினுள்."

ராமநாதர் பலவந்தமாய்ச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, " அவளுக்கு வேறு கவலை, சாமி. எங்கள் ராஜ்யத்தின் இளவரசுப் பட்டத்துக்கு யாரும் இல்லையே என்ற கவலை !" என்று தமாஷாகச் சொன்னுர்.

இதற்கு மேல் பேச்சுத் தொடர்ந்தது. என்றும் இல்லாதபடி மிக நீண்ட பேச்சு. சாமியார் தம் கதையைச் சொன்னுர்; இதை யாரிடமும் சொல்லவேண்டாம் என்று பல வார்த்தைகளில் எச்சரித்து விட்டே சொன்னுர்.

சாமியாரின் அநுபவம் அபாரமானது ; வார்த்தைகளில் சொன்னுல் அந்தக் கதை மிகவும் சுருக்கமானது.

ஒரு மனிதனைப் போல் மறு மனிதன் இல்லை ; ஒருவன் மனத்தைப் போல் மற்றவன் மனம் இல்லை. மனிதனின் மனம் மகா விசித்திரமானது. ஏதோ ஒரு பிடிவாதத்தால், இரண்டு மாதம் உபவாசம் கிடந்து ஒருவன் உயிரையே துறந்துவிடுகிருன். 'என்ன பைத்தியக்காரன் !' என்று நாம் நினைக்கிறோம். இன்னொருவ

னுக்கு ஒரு வேளைப் பசியையும் தாங்க முடிவதில்லை; துடிக்கிறான். இதைக் கண்டாலும், நமக்கு ஆச்சரியமா யிருக்கிறது. கணித மேதையாகிறான் ஒருவன்; கவிதை பொழிகிறான் இன்னொருவன். ஒரே விதச் சந்தர்ப்பம், ஒரே வித வயது, ஒரே வித வசதி - இத்தனை இருந்தும் இரண்டு மனிதர்களின் மனம் ஒன்றுக்கொன்று பிரமாத மாய் மாறுபட்டு விடுகின்றன. 'என் மனத்தைப் போலவே உலகத்தில் உள்ள அத்தனை பேர் மனமும் எண்ணும்' என்று ஒருவன் நினைக்க முடியுமா ?

சாமியாரின் மனம் அலாதியானது. அவர் மிகப் பெருஞ் சீமானாக இருந்தார். வடக்கே எங்கேயோ ஊர். அதைப்பற்றி நமக்கென்ன? தங்கக் கிளிபோல் ஒரு மனைவியை மணந்தார். இரண்டு பேரும் மிக நேசமாய் இருந்தார்கள்.

“அவள் எப்படிக் கோலம் போடுவாள்! எப்படிப் பாடுவாள்! எப்படிச் சமைப்பாள்! வேண்டாம்; இந்த ஒன்றுமே வேண்டாம். அவளைப் பார்த்துக்கொண்டே இருந்தால் போதும். ஊண், உறக்கம் ஒன்றும் வேண் டாம்; கிரிக்கட் தேவையில்லை; ஸினிமா தேவையில்லை; நாடகம் தேவையில்லை; நாவல் தேவையில்லை . .” இப்படியெல்லாம் வர்ணித்தார் சாமியார்.

“ஐயோ! பிறகு அந்த உடம்பு எப்படி வாடியது! அந்தக் குரல் எப்படி மங்கியது! அது பெரிய வேதனை! வேதனை! ஆனால் உடல்தான் இளைத்தது. முகத்தின் ஒளி என்றும் குன்றவில்லை; கடைசி வரைக்கும் குன்ற வில்லை” என்று பிரலாபித்தார்.

அவள் உடம்பு ஏன் இப்படி இளைத்தது? காரணம் என்ன ?

அவளுக்கு ஒரு குழந்தை பிறக்கவில்லை; இதுவே அவளுக்குப் பெரிய மனக்குறை.

நோன்பு, விரதம், அது, இது என்று உடலை வாட்டிக் கொண்டாள் மனைவி. குளிரிலும் பனியிலும் குளத்துக்கும் கோயிலுக்கும் போய், பட்டினியும் பசியுமாய்த் தவ வாழ்வு வாழ்ந்தாள். ஐயோ! அவள் அழகெல்லாம் வாடியது. தூசும் துப்பையும் அவளுக்குத் தீராத நோய் தந்தன. பிறகு மாளாத வைத்தியம். ஊர் ஊராய் அலைச்சல். ஆரோக்கிய ஸ்தலங்களை ஒன்று விடாமல் பார்த்தாயிற்று. கடைசியில் அவள் கண்ணை மூடிவிட்டாள். மண்ணைச் சொர்க்கமாக்கிய அவள் போய்விட்டாள்.

அந்தத் துயரத்தை இவரால் தாங்க முடியவில்லை. சகல சொத்தையும் விற்றார். சாமியாராகக் கிளம்பிவிட்டார். ஊர் பேர் தெரியாமல் வாழ எங்கெங்கோ ஓடினார். எங்கே போனால் என்ன? நிம்மதியில்லை. அவளைப்பற்றிய ஞாபகம் மறக்கவில்லை. இங்கே கடைசியாக வந்திருக்கிறார். வெளிக்கு ஞானிபோல்தான் இருக்கிறார். உள்ளத்திலே ஓயாத வேதனை இருக்கிறது. இதுதான் விஷயம்.

"பாவா, துயரத்தை யாரிடமாவது சொல்லி ஆற்றிக் கொண்டால்தான் தீரும் என்கிறார்களே, அது உண்மையா? என்னவோ, உன்னிடம் எனக்கு ஒரு கவர்ச்சி ஏற்பட்டது. சொல்லிவிட்டேன்" என்று முடித்தார்.

ராமநாதர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். அவருக்கு மிகவும் பரிதாபமாயிருந்தது. மேலே என்ன பேசுவது என்று தெரியவில்லை. எப்படியோ சமாளித்துக் கொண்டு ஏதாவது பேசவேண்டுமே.

"ஆமாம், சொத்தை யெல்லாம் விற்ற பணத்தை என்ன செய்தீர்கள், சாமி?"

சாமியார் தமக்குத் தாமே சொல்லிக் கொள்வது போல, "பணம்! பணம்! பணம்!" என்றுரே யொழிய வேறு ஒன்றும் சொல்லவில்லை.

ராமநாதருக்கு இதற்கு மேல் துளைத்துக் கேட்க இஷ்டம் இல்லை.

ஆனுல், சாமியார் தாமாகவே, "எவ்வளவு பெரும் சொத்தையும் ஒரு கைக்குள் அடக்கிவிடலாம், தம்பீ. போன உயிர்தான் திரும்பி வராது" என்ருர்.

ராமநாதருக்குச் சட்டென்று ஒரு விதச் சந்தோஷம் வந்தது. தம்மிடம் சாமியார் அந்தரங்க விசுவாசம் கொண்டதற்கு அடையாளமே தம்மைத் 'தம்பி' என்று அவர் விளித்தது என்று எண்ணினுர்.

"ஒரு விஷயம் உங்களைக் கேட்கலாமா? ஏன் எல்லாரையுமே 'தம்பி' என்று அழைக்கக் கூடாது? 'பாவா' என்று அழைக்கிறீர்களே, ஏன்?"

"ஒன்றும் இல்லை, அப்பா. என்னவோ உருமாறியதும் அப்படித் தோன்றியது; நான் தமிழனே அல்ல என்று பிறர் நினைக்கும்படி நடிக்கத் தோன்றியது. முதலில் நான் நன்ருய்த் தமிழே பேசாததை நீ கவனித்ததில்லையா?"

பிறகு, சற்று நேரம் பேச்சு ஒன்றும் அப்படி விசேஷமில்லை.

அப்புறம் "தூக்கமா?" என்று கேட்டார் சாமியார்.

"இல்லை."

"உன் மனைவியைக் கவனி. அவள் கண்டபடி உடம்பை அலட்டிக் கொள்ளாதபடி பார்த்துக்கொள்."

"அப்படியே செய்கிறேன்."

கடைசியில், ஏதோ சிறிது தயக்கத்துடன், "தம்பி, என் உடம்பு வரவர க்ஷீணித்து வருகிறது. சில நாளில் நான் இறந்துவிடுவேன்" என்றார் சாமியார்.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. வீண் பிரமை. இன்னும் பல காலம் வாழ்வீர்கள். தூங்குங்கள்."

"எனக்கு நீ சமாதானம் சொல்ல வேண்டாம். சாவைப்பற்றி எனக்குத் துளியும் பயமில்லை. என் உடம்பை எனக்குத் தெரியும். நான் செத்ததும், எனக்காக நீ ஒரு காரியம் செய்வாயா?"

"சொல்லுங்கள்; செய்கிறேன்."

"என் சொத்துக்களை விற்ற நிதியை நீ அடைய, அந்தச் சமயத்தில் நான் வழி சொல்லுகிறேன். அதைக் கொண்டு, இந்தச் சித்தி விநாயகரின் கோயிலைப் புதுப்பி; அதோடு, சுகுணா என்ற பெயரால் ஓர் ஆஸ்பத்திரி கட்டு. அவள் பெயர் சுகுணா என்பதுதான், அப்பா."

"உங்கள் பெயர்?"

"அது மண்ணோடு மறையட்டும். அந்த அழகு விக்கிரகத்தை இழந்தபின் இத்தனை நாள் உயிரை வைத்துக்கொண்டிருந்து விட்ட என் பெயருக்கு எதற்கு ஞாபகச் சின்னம்?" என்று சாமியார் வேதனைக் குரலில் சொன்னார்.

இனிச் சாமியாருடன் இந்த விஷயத்தைப் பற்றித் தொடர்ந்து பேசுவது தவறு என்று எண்ணினார் ராமநாதர்.

"நீங்கள் சொல்லுகிறபடி செய்கிறேன். நிம்மதியாய்த் தூங்குங்கள்."

இருவரும் சிறிது நேரத்தில் தூங்கிவிட்டார்கள்.

பதினைந்து, இருபது நாள், சென்றன. ராமநாதரின் மனைவி திரும்பி வந்துவிட்டாள். அன்று பழையபடி மாலையில் சித்தி விநாயகருக்கு விளக்கேற்றி விட்டு, வழக்கப் படி சாமியாரை நமஸ்கரித்தாள்.

என்றும் போல் இல்லை; அன்று சாமியார் முகத்தைத் திருப்பிக் கொள்ளவில்லை. "பெண்ணே, மாங்கல்ய பாக்கியத்தோடு நெடு நாள் வாழ். உனக்குப் பகவான் வெகு சீக்கிரம் புத்திர பாக்கியத்தை அளிக்கட்டும்" என்று ஆசீர்வதித்தார்.

மறுநாள் காலையில், சாமியார் தமது கீற்றுப் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தாரே யொழிய, திண்ணையிலிருந்து இறங்கி நடமாடவில்லை. யாரையும் பைஸா கேட்கவில்லை. மாலைவரைக்கும் ஒன்றும் உண்ணவில்லை. ராமநாதரின் மனைவியிடம் சிறிது வெந்நீர் மட்டும் வாங்கி, வாயைக் குழப்பிக் கொப்புளித்துவிட்டு சிறிது குடித்தார். மீண்டும் படுத்தார்.

மாலையில் ராமநாதர் டவுனுக்குப் போக வேண்டியிருந்தது.

"சாமி, பழம் வாங்கி வரட்டுமா?"

"வேண்டாம், பாவா; வேண்டாம். ஒரே ஒரு பழம் தின்ன முடியாமலேதான் அவள் உயிர்விட்டாள், அப்பா. அது வேண்டாம்; வேண்டாம்."

ராமநாதருக்கு மிகவும் சங்கடமாய்ப் போயிற்று.

"சரி, நான் போய்வரட்டுமா?"

"எனக்கு என்னவோபோல் இருக்கிறது. இன்று ராத்திரி இங்கேயே தங்க முடியாதா? அவசரமான ஜோலியோ?"

“ஆமாம். போய் ராத்திரியே அடுத்த பஸ்ஸில் திரும்பி வந்துவிடுகிறேன்.”

சாமியார் சற்று அசதியோடு தலையைச் சாய்த்துக் கொண்டார். “அப்படியானால் போய்வா. கட்டாயம் வந்துவிடு. உனக்குச் சொன்னேனே, அந்த விஷயம்...” மறுபடியும் களைப்பு.

ராமநாதருக்கு என்ன செய்வதென்று தோன்ற வில்லை. போகாதிருந்து விடலாமா என்று எண்ணினார். சாமியார் மறுபடியும் கண்ணைத் திறந்து, “போய்வா, அப்பா; போய் வா. சட்டென்று வந்துவிடு” என்றார்.

ராமநாதருக்குச் சற்றுத் தைரியம் வந்தது; புறப் பட்டுவிட்டார்.

டவுனுக்குப் போனவர் அன்றிரவு திரும்பிவர முடிய வில்லை. கடைசி பஸ் தப்பிவிட்டது. மறுநாள் காலையில் பல்லுத் தேய்த்து ஓட்டலில் காபிகூடக் குடிக்காமல் முதல் பஸ்ஸிலே பறந்தோடி வந்தார் ராமநாதர்.

இனி என்ன பயன்? அதற்குள்ளே எல்லாம் முடிந்துவிட்டது. குருவி பறந்தோடிவிட்டது; கூண்டு தான் மிச்சம்.

சாமியாரின் சடலத்தை ஊரார் முழுக்கச் சேர்ந்து, தேர்த் திருவிழாப்போல் வெகு விமரிசையாக அடக்கம் செய்தார்கள்.

ராமநாதருக்குத்தான் தாங்காத துக்கம். “ஐயோ, அவருக்கு நான் பொய்யனாகி விட்டேனே. அவருக்குக் கொடுத்த வாக்கை எப்படி நிறைவேற்றுவேன்? அவர் சொத்தைப் பெற வழி சொல்வதாகச் சொன்னாரே. அது என்ன வழியோ?” என்றெல்லாம் பரிதவித்தார்.

சாமியாரின் ரகஸ்யம் அவர் ஒருவருக்குத் தானே தெரியும் ; பிறருக்கெல்லாம் என்ன தெரியும் ?

கொஞ்சநாள் வரைக்கும் ராமநாதருக்கு இதே கவலையாக இருந்தது. பிறகு அவருக்கு ஒரு யோசனை தோன்றிற்று. 'முதலில் எப்படியும் இந்தச் சித்தி விநாயகர் கோயிலை என் சொந்தச் செலவில் புதுப்பித்துக் கட்டலாம் ; ஆஸ்பத்திரி விஷயத்தைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம்' என்று எண்ணினார்.

தங்கச்சாமியார் தங்கியிருந்த கோயிலின் திருப்பணிக்கு ஊரில் உள்ள எல்லாருமே சந்தோஷத்தோடு சம்மதம் அளித்தார்கள்.

திருப்பணி வேலை தொடங்கியது. அப்போது ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது.

சித்தி விநாயகர் கோயில் மண் திண்ணையை இடித்து மண்ணைத் தோண்டியபோது, அங்கே முன்னெல்லாம் சாமியார் படுத்திருந்த இடத்துக்குக் கீழே சிறுசிறு தங்கத் துண்டுகள் ஏராளமாகக் கிடந்தன.

" ஆஹா ! இது சாமியாரின் மகிமை" என்று எல்லாரும் வியந்தார்கள்.

ராமநாதருக்கு மட்டும் உண்மை தெரிந்துவிட்டது. ஆனால், அதை யாரிடமும் அவர் சொல்லவில்லை.

மெல்ல ஊராரின் சம்மதத்தைப் பெற்று, அந்தத் தங்கத் துண்டுகளை விற்றார் ; சித்தி விநாயகர் கோயிலை அழகாய்க் கட்டினார். 'சுகுணா' ஆஸ்பத்திரியும் உள்ளூரிலே அமைத்தார்.

மும்தாஜ்மகல் என்ற பேரழகிக்குத் 'தாஜ்மகல்' அமைந்ததுபோல், கட்டழகி 'சுகுணா'வுக்கு ஆஸ்பத்திரி ஞாபகமாய் அமைந்தது. ஷாஜஹானுக்கு அதிலேயே

இடங்கிடைத்தது. தங்கச் சாமியாருக்கு ஒரு ஞாபகச் சின்னமும் கிடையாதா ?

அதுவும் தோன்றிவிட்டது. அற்புதமான ஞாபகச் சின்னம் ; ஓர் உயிரோவியம் !

சாமியாரின் வாக்குப் பொய் போகாமல், ராமநாதரின் மனைவி கருவுற்றுத் தந்தப்பதுமைபோல் ஒரு புத்திரனைப் பெற்றெடுத்தாள். அவனுக்குத் ‘ தங்க ராஜன் ’ என்ற பெயரைத் தம்பதிகள் அன்போடு சூட்டினார்கள்.

அந்தி வேளை

ஊருக்கு மேறுக்கே ஆறுண்டு, குளமுண்டு; சந்தியே, சந்தியே' என்ற பாட்டு இப்போது சின்னப்பனுக்கு ஞாபகம் வருகிறது. ஆலமரத்தடியில் அம்மன் தேருக்குமுன் நடக்கும் தெருக்கூத்தில், 'மகன் லோகிதாசனுக்குத் தாகம்; தண்ணீர் வேண்டும்' என்பாள் சந்திரமதி. அதற்குப் பதிலாக நட்சத்திரையன் இந்தப் பாட்டைப் பாட ஆரம்பித்து விடுவான். வீட்டிலே லோகிதாசன் தண்ணீர் குடிக்கக்கூடாதாம். ஆற்றிலும் குளத்திலும் ஒரு கை - ஒரே ஒரு கைதான் - அள்ளிக் குடிக்கச் சொல்லி உத்தரவு போடுவான் அந்த வேதியன்.

தாடியும் மீசையும் கோலும் கூனல் நடையுமாக வேதியன் வேஷம் போட்டுக்கொண்டு, அந்தக் காலத்திலே வருஷத்துக்கு வருஷம் பெரியவீட்டு முத்துக்கருப்பன்தான் நட்சத்திரத் தரகனாக விளங்குவது வழக்கம். இவனே எப்போதும் சந்திரமதி வேஷம் போட்டுக் கொண்டு, அழுவதில் ஈடு இணை இல்லாதவன். இவனுடைய முகாரி ராகம் அக்கம் பக்கத்திலே எட்டூருக்குப் பிரசித்தம்.

முத்துக்கருப்பனுக்கும் சின்னப்பனுக்கும் சமவயசு. நல்ல மிடுக்கான வாலிபம். ஆனால், முத்துக்கருப்பன் வேஷம் கட்டினால் குடுகுடு கிழவனாகத்தான் தோன்று வான். இவனைப் பற்றியோ கேட்க வேண்டியதில்லை. பெண் வேஷம் பூண்டுவிட்டால் அழகு கொஞ்சும். 'வால வயசுக்கார' ரதிப் பெண்போலவே துலங்குவான். இவனைப் 'பஞ்சவர்ணக்கிளி' என்றுகூடச் சொல்வார்கள். அவ்வளவு எழிலோடு, ஒயிலாக, ஸொகுஸாக இருக்கும் இவன் வேஷம். அதனாலே 'பஞ்சவர்ணச் சின்னப்பன்' என்ற பெயர் வந்து, பிறகு 'பஞ்சவர்ணம்' என்று திரிந்து, கடைசியில் அதுவே நிலைத்துவிட்டது. வீட்டிலே சின்னப்பன்; வெளியிலே பஞ்சவர்ணம்.

அது ஒரு காலம். கூத்து என்றால், சாமானியக் கூத்தா? விடிய விடிய எட்டு நாள் ஆடுவார்கள். அரிச்சந்திர நாடகம் மட்டுமா? நல்லதங்காள் சரித்திரம், கிருஷ்ணலீலை, ராம நாடகம், பிரஹ்லாத சரித்திரம் எல்லாம் ஆடுவதுண்டு. சில ஊர்களிலே கூத்தாடி ஜாதி என்று தனியாக இருக்குமோ, என்னவோ; இவர்கள் ஊரில் அப்படி இல்லை. இருபது வேலிக் குடித்தனக்கார வீட்டு முத்துக்கருப்பனும், அதற்கு ஈடு ஜோடியான வீட்டுச் சின்னப்பனுமே கூத்தில் சேர்ந்தார்கள் என்றால், மற்றவர்களைப்பற்றிச் சொல்வானேன்? ஊருக்கு ஊர் 'வளமை' வேறே. 'கூத்தாடி' என்று இழிவாகப் பேசுவது இவர்கள் ஊர் 'வளமை' இல்லை.

இரண்டு பேரும் - முத்துக்கருப்பன், சின்னப்பன் இரண்டு பேரும் - ஒன்றாக நாடகம் படித்தார்கள். முத்துக் கருப்பனுக்குப் பாட்டு வரவில்லை; 'அகட விகடம்' தான் வந்தது. நரிக்குறவன், எண்ணெய்ச் செட்டியார், முத்து வியாபாரி, வேதியன், ஹநுமான், நரசிங்கம்

இந்த வேஷமெல்லாம் போட்டு நடிக்க அவன் கற்றான் சின்னப்பனுக்கோ குயிலைப்போலப் பாட்டு வந்தது. மெல்லிய பெண்குரல். ஒல்லியான உடம்பு. நல்ல தங்காள், சந்திரமதி, யசோதம்மா, சீதாதேவி இந்த வேஷமெல்லாம் இவனுக்கு வாய்த்தன.

முத்துக்கருப்பனின் தங்கச்சி செங்கமலத்துக்குச் சின்னப்பனிடம் மிகுந்த இஷ்டம். இவனையே கல் யாணம் கட்டிக்கொள்வதென்று அவள் உறுதிகொண்டு விட்டாள். அவளுடைய இஷ்டத்தைப்பற்றி யாரும் அன்னிதாச் சொல்லவில்லை. அப்பா பழநிச்சாமி, அம்மா அமிர்தம், அண்ணன் முத்துக்கருப்பன் எல்லாருக்கும் அதிலே ஒரு சந்தோஷங்கூட உண்டு.

சின்னப்பன், ஒருத்திக்கு ஒரு மகன். இவனுடைய அப்பா, அம்மா இரண்டு பேரும் போய்விட்டார்கள். வீட்டிலே கூட்டி மெழுக - சோறாக்க - அத்தைக் கிழவி தான் இருந்தாள். செங்கமலத்தைக் கல்யாணம் கட்டிக் கொள்ள இவனுக்கு ஒரு தடையுமில்லை. அப்படியிருந் தும் இவன் என்னவோ ஏனோ சாக்குப் போக்குச் சொல் லிக்கொண்டே யிருந்தான். "கடலை விற்கட்டும்", "மிளகாய் விற்கட்டும்" என்றெல்லாம் சாக்குப்போக்கு. உண்மையில் சின்னப்பனுக்கு இஷ்டமில்லையா, என்ன? அன்னம்போல் அழகாயிருந்த செங்கமலத்தை வீட்டுக் காரியாய் அடைய எவனுக்கும் கொடுத்துவைக்க வேண் டுமே! இல்லை, பரிசுப் பணம் பத்து ரூபாய்க்கும் கல் யாணச் செலவு நூறு ரூபாய்க்கும் கடலையும் மிளகாயுமா விற்றாகவேண்டும்? அதெல்லாம் இல்லை. கல்யாணம் என்றாலே இவனுக்கு என்னவோ ஒரு கூச்சமாயிருந் தது. கல்யாணத்தில் - அதுவும் செங்கமலத்தை அடை வதில் - ஆசைதான். ஆனால் கூச்சம் காரணமாக அதை நாலைந்து வருஷம் தள்ளிப் போட்டுக் கொண்டே

வந்துவிட்டான். முட்டாள்தனம்; பெரிய முட்டாள் தனம்! அப்புறம் வீணே விவகாரம் வந்தது; பெரும் பகை மூண்டது. அது தீருமோ - என்ருவது தீருமோ - என்ற நிலையும் ஏற்பட்டது.

செங்கமலத்தை வேறு இடத்தில் கொடுக்கப் பேச் செல்லாம் நடந்தது. அவள் உறுதியான பெண்; துணிச்சலான பெண். "நான் வெறுங்கழுத்தியாக இருந்தாலும் இருப்பேனே தவிர, வேருெருத்தன் என்னைத் தொட்டுத் தாலி கட்டச் சம்மதிக்க மாட்டேன்" என்று பிடிவாதம் பிடித்துவிட்டாள். வீட்டுக்குச் செல்லப் பெண் அவள். யாருக்கும் அவளை வற்புறுத்திக் கல்யாணம் கட்டிவைக்க இஷ்டமில்லை. ஆனுல், சின்னப்பனை மணக்க மட்டும் இடமே இல்லாமல் போய் விட்டது. அண்ணனையும் பெற்ருேரையும் மீறி இவனை மணக்க, அவ்வளவு துணிச்சல் அவளுக்குத்தான் வருமா? இல்லை, அப்படி வற்புறுத்தி மணந்துகொள்ள இவனுல்தான் முடியுமா? ஆனுல் ஒன்று: இவனும் வேறு பெண்ணை மனத்தாலும் நினைக்கவில்லை; கல்யாண எண்ணத்தையே விட்டுவிட்டான்.

இதோ இன்று இந்த அந்திவேளை எவ்வளவு மனோகரமாயிருக்கிறது! ஆனந்தமான இந்த அந்திவேளையில், அன்றைய அந்திவேளையைச் சின்னப்பனுக்கு நினைவு வருகிறது. அப்பாடா! என்ன பயங்கரமான அந்திவேளை! இதோ தீபம் வைத்தாயிற்று. மனம் பூரிக்கச்செய்யும் தீபம். அதைக் கையெடுத்துக் கும்பிட்டுக் கடவுளை வழிபடுகிருனே இன்று; இந்த மாதிரியா இருந்தது, அன்றைய அந்திவேளை? சந்திரன் இதோ பரிபூரணமாய் மாசற்ற வானத்தில் உதிக்க ஆயத்தமாகிருனே, இந்த மாதிரியா அன்று இருந்தது?

இடியும் மின்னலும் சோனுமாரியுமா யிருந்த அந்த அந்திவேளையை நினைத்தாலே, உடம்பு சிலிர்க்கிறது. ஆனாலும் என்ன ? அன்று இவனுக்கு அந்த யோசனை - முள்ளும் வேலியும் சப்பாத்திக் கள்ளிப்பத்தையும் சூழச் சங்கிலிக் கறுப்பனின் கூந்தல் பனைக்குப் பக்கத்திலே அகப்பட்டுக் கொள்ளும் யோசனை! - எப்படித்தான் தோன்றியதோ ? அதுவும் ஒரு நல்ல காலத்துக்குத் தான். நல்லதும் சரி, பொல்லாததும் சரி, உலகத்திலே சாமி துணையால்தான் நடக்கின்றன. அந்தக் கூந்தல் பனைதான் இப்போது எவ்வளவு உயரம் வளர்ந்து விட்டது ! கைக்கெட்டும் உயரத்தில் அன்றிருந்த அது, இன்று 'எட்டேணி வெச்சாலும் எட்டாத' உயரத்துக்கு வளர்ந்துவிட்டதே ! ஊரிலே எங்கேயிருந்து பார்த் தாலும் கோபுரம்போல் அது தெரிகிறது. இருபது வருஷத்துக்குள் எவ்வளவு உயரம் !

ஆமாம் ; இருபது வருஷத்துக்கு முன்தான் அதெல் லாம் நடந்தது. சொக்காயி அம்மனுக்குத் தேர்த்திரு விழாத் தொடங்கியது.

இவர்கள் ஊரிலே எல்லாமே ஒரு விசித்திரம். சொக்காயிக்குப் பிரம்மாண்டமான சட்டத் தேர் கட்ட வேண்டும். அதற்குத் திரைச்சீலை போர்த்திப் பூக்குஞ்ச மெல்லாம் தொங்கவிட்டு அலங்காரம் செய்ய வேண்டும். பிறகு அந்தத் தேரை இழுக்கலாமா ? அதுதான் கூடாது. இழுத்தால், யார் பேரிலாவது அம்மனுக்கு ஆவேசம் வந்துவிடும் ; 'காலிலே புரியைக் கட்டிக் கட கடன்னு இழுக்கிறானே' என்று அவள் கத்துவாள். தேருக்கு வடம் கட்டினால், தன் காலுக்குப் புரி கட்டிய தாக எப்படித்தான் நினைக்கிறாளோ அந்த அம்மன் ! இந்த ஊர் ஆட்களுக்கு ஏற்றபடி ஓர் அம்மனும் வாய்த்

திருக்கிறுள் ! இவர்கள் ஒரு வழிக்கும் ஒருவனைப் போக விடமாட்டார்கள் இல்லையா ?

அம்மனுடைய பெருந்தேருக்கு, மலைப்பாம்புபோல் நீண்ட இரண்டு வாரைகள் : ஒன்று, நெட்டிவாரை ; ஒன்று, கல்வாரை. நெட்டி என்றுல், நெட்டி இல்லை ; கல் என்றுல், கல் இல்லை. இரண்டும் மரந்தான். ஒன்று அதிகமாய்க் கனக்கும் ; ஒன்று சற்று லேசாயிருக்கும். அவ்வளவுதான். அந்த வாரைகளைக் கட்டி, நாலு பக்கத்திலும் பக்கத்துக்கு முப்பது நாற்பது பேர் இருந்து கொண்டு, தேரைச் சுமக்கவேண்டும். ஒரு பக்கத்திலே ஓரையடித்தால், மறுபக்கத்து ஆள் எவனுவது இந்தப் பக்கத்துக்கு வரலாமா ? வருவானு ? மாட்டான் ; வரக் கூடாது. நாலு தெருக்காரனுக்கும் வாரைகளின் நாலு மூலையும் பங்கு. இரண்டு வாரைக்கு நாலு மூலை ; நாலும் நாலு தெருவுக்குப் பாத்தியம். தேரை ஒவ்வொரு தெருவுக்கும் கொண்டுபோய்த் திரும்ப வேண்டும். அவன் அவன் தெருவுக்குக் கொண்டுபோகும் போது அவன் அவனுக்கும் வெகு குஷி. 'ஜம், ஜம்' என்று அப்போது விம்மிக்கொண்டு அந்தத் தெரு ஆட்கள் தோள் கொடுப்பார்கள். மறு வாரையின் எதிர் மூலை தாழ்ந்துவிடும். தேர் எங்கே சாய்ந்து விடுமோ என்று தோன்றும். சாயாது ; சமாளித்து விடுவார்கள். இப்படி எத்தனையோ வருஷம் எத்தனையோ தடவை நடந்திருக்கிறது. சின்னஞ் சிறு குழந்தையாயிருந்தது முதல் பல வருஷம் இதைச் சின்னப்பன் பார்த்திருக்கிறுன். ஆனுல் என்னவோ அந்த வருஷம் அந்தத் தடவை அது சாய்ந்தே விட்டது. என்ன கோளாறே ! அம்மனுக்கு என்ன கோபமோ !

"மனிசங்களுக்குப் புத்தியும் ஒத்துமையும் இல்லாட்டி, அம்மன் என்ன செய்யும்?" என்று ஏளனமாய்ப் பேசினான் முத்துக்கருப்பன்.

அதிலிருந்து தொடங்கியது பெரிய சச்சரவு. வடக்குத் தெரு ஆட்களின் மேல் குற்றம் இல்லை என்பது அவன் எண்ணம். அவன் வடக்குத் தெருக்காரன்.

"ஈதுவும் கடவுள் செயல்தாம்ப்பா. மனிசனுக்கு ஏன் புத்தியும் ஒத்துமையும் இல்லாமெப் போகுது? தானிங்கிற அகம்பாவத்தினாலேதான்" என்றான் இவன். சாதாரணமாகத்தான் இதை இவன் சொன்னான். இவன் தெற்குத் தெருக்காரன் என்றதனால் அல்ல.

"தானும் தன் பரிசனமும் செய்யறது சரியாய்த்தான் படுமப்பா எவனுக்கும். தன் குத்தம் தெரிஞ்சவன் உலகத்தைக் குத்தம் சொல்லமாட்டான்." இது முத்துக்கருப்பனின் பதில்.

பேச்சு வளர்ந்தது. மனிதனுடைய தர்க்கங்களின் போக்கே வெகு விநோதம். உணர்ச்சி தெளியாதபோது, அறிவும் தெளியாது. நியாய அநியாயங்களை அறிவு மாத்திரம் தனித்தியங்கிக் கண்டுகொள்ளாது. காரண காரியங்களைத் தர்க்கமே நிலைநாட்டி விடுவதாக எண்ணுகிறார்களே, எவ்வளவு மதியீனம்!

இவனுக்கும் முத்துக்கருப்பனுக்கும் நேர்ந்த விவகாரம் எங்கெங்கோ தாவியது. அம்மன் தேர் சாய்ந்தபோது, நல்லவேளையாக எவருக்கும் எந்தவித விபத்தும் நேரவில்லையே, அதைப் பற்றி இருவரும் சந்தோஷப்படவில்லை. அம்மன் தேர் சாய்ந்ததோ, இல்லையோ! இவர்கள் மனம் சாய்ந்துவிட்டது; கோணிவிட்டது. அது தெற்குத் தெருவில் வந்தா சாயவேண்டும்?

இதற்கேற்றாற்போல் அந்த வருஷம் ராஜாவேஷ ராமலிங்கம் திடீரென்று காலமடைந்து விட்டான். ஆல மரத்தடியில் அம்மன் தேருக்குமுன் சத்தியநெறி அரிச் சந்திர நாடகம் போடுவதாக ஏற்பாடு நடந்திருந்தது. ராஜா ராமலிங்கந்தான் போய்விட்டானே ? யார் இப் போது அரிச்சந்திர வேஷம் கட்டுவது ? இவனே ராஜா வேஷம் கட்டினால் போகிறது என்று எவனோ சொன் னான். இவனும் சரி என்றான். ராஜா வேஷத்திலும் பெயர் எடுப்பதில் இவனுக்குக் கொஞ்சம் ஆசையும் தட் டியது.

" ஒரே நாள் மயான காண்டம் மட்டுந்தானே ஆடப்போறம் ? அதிலே ராஜா வேஷம் பெரிசா வேண் டியதில்லே. பேருக்கு ஓர் ஆள் இருந்தாப் போதும் " என்றான் முத்துக்கருப்பன்.

" ஏன் ? அதில் சந்திரமதி - அரிச்சந்திரன் தருக்கம் நடக்க வேணுமா ? அரிச்சந்திர வேஷத்துக்கு நல்ல ஆள் இருந்தாத்தானே அது சோபிக்கும ? " என்றான் இவன்.

" அது சரிதாம்ப்பா. முக்காவாசி நேரம் சந்திரமதி புலம்பல் இருக்குது. அதெக் குறைக்க முடியாது. தருக்கத்தைச் சுருக்க முடிச்சுப்பிடுவம் " என்றான் முத்துக்கருப்பன்.

இவன் பிடி கொடுக்காமல், "பாக்கலாம். இப்ப என்ன அதுக்கு?" என்று மையமாகப் பதில் சொல்லி வைத்தான்.

அம்மன் தேர் சாய்வதற்கு முன் நடந்தது இந்தப் பேச்சு. இதற்கும் இப்போது அம்மன் தேர் சாய்ந்த தற்கும் ஏனோ முத்துக்கருப்பன் முடிபோட்டான்.

"குத்தம் செஞ்சவன் யாரு? நியாயத்தெக் கண்டவன் யாரு?" என்று இவன் சொன்னதற்குப் பதிலாக, "நீதாம்ப்பா குத்தமே செய்யாதவன்; நியாயத்தெக் கண்டவன். 'ராஜா வேஷமா? நானே கட்டறேன்; ராணி வேஷமா? நானே கட்டறேன்' என்கிறே பாரு. அதனலே" என்று கிளிக்கோடு பாய்ந்தான் முத்துக் கருப்பன்.

அது என்னவோ இவன் மனத்தை உறுத்திற்று. "திறமை இருக்கிறவன் எந்த வேஷமும் கட்டலாம். நாக்கெச் சுட்டுப் போட்டாலும் பாட வராதவன் இல்லே அதுக்குப் பயப்படணும்?" என்று இவனும் கொஞ்சம் குத்தலாகவே பேசினன்.

"என்னமோ பொம்பிளெ வேஷம் போட்டுட்டா, எல்லாம் முடியும்னு நெனச்சிட்டையோ? ராஜா வேஷம் லேசில்லே, தம்பி. அம்மன் தேரெத் தூக்கிக்கிட்டு எம்பிக் குதிக்கிறமாதிரி இல்லே அது!" என்று துடுக்காய்ச் சொன்னன் முத்துக்கருப்பன்.

இப்படியே மேல் ஸ்தாயிக்குப் போய்விட்டது பேச்சு. ஆண்டவன் புண்ணியத்தாலே அடிதடிதான் நேரவில்லே. இந்த ஊர் ஆட்களுக்குள் அடிதடி என்றல், மண்வெட்டியும் அரிவாளும் வந்துவிடுமே. "ஒரே வெட்டாய் வெட்டுவேன்; ஒரே குத்தாய்க் குத்துவேன்" என்றெல்லாம் ஆவேசம் வந்தது போல் குதிக்கத் தொடங்கிவிடுவார்களே! இவனும் இந்த ஊர்க்காரன் தான். ஆனல், இந்த அநாகரிகத்தைக் கண்டாலே, இவனுக்கு எரிச்சலாயிருக்கிறது. முத்துக்கருப்பன் அப்படியில்லே. அடிதடி வரைக்கும் அவன் வந்திருப்பான். அதுவும் சிலம்ப விளையாட்டிலே நாலடி போட்டு அவனுக்கு ரொம்பப் பழக்கம். ஆனல் இரண்டு கையும்

தட்டினால்தானே சத்தம் கேட்கும்? இவன் சண்டைக்குத் தயாரில்லை. வந்த சச்சரவு பேச்சோடு நின்றது. ஆனால் சாதாரணப் பேச்சில்லை. ஒருவன் முகத்தில் மற்றவன் விழிப்பதில்லை என்ற சபதம் வரைக்கும் போய்த்தான் நின்றது.

அந்த வருஷத்து நாடகம் நின்றது. முத்துக் கருப்பன் குடும்பத்துக்கும் இவன் குடும்பத்துக்கும் உள்ள நேசம் அடியோடு அறுந்தது. செங்கமலத்தை இவன் கல்யாணம் கட்டிக்கொள்ளலாம் என்ற ஆசையிலும் மண் விழுந்தது.

அவள் நினைப்பை இவன் மறக்க முடியவில்லை. மறக்க முழு முயற்சியும் செய்தான். அது எப்படி முடியும்?

சின்னப்பனின் மனம் ஒரேயடியாய் ஒடிந்து போயிற்று. ஒரு வேலையும் ஓடவில்லை.

இதற்கு முன்னெல்லாம் டவுனிலே என்ன டிராமா நடந்தாலும் தவறாமல் போய்ப் பார்த்து வருவான். பெரிய பாட்டுக்காரர் யாரவது பாடுகிறார் என்றால், எல்லா வேலையையும் போட்டுவிட்டு ஓடுவான். ஒரு பாட்டை ஒரு தடவை கேட்டால் அதை அப்படியே மனத்தில் முடி போட்டுக்கொண்டு விடுவான். புதுப் புதுப் பாட்டு, புதுப் புது மெட்டு, அபூர்வ ராகங்கள் இவற்றிலெல்லாம் இவனுக்குப் பெரிய மோகம். இப்போதோ ஒன்றிலும் இவன் மனம் செல்லவில்லை. பழைய பாட்டுக்கள்கூட மறந்து வந்தன.

செங்கமலத்தின் ஞாபகத்தைக் கைவிட எவ்வளவுக்கு எவ்வளவு முயன்றானோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவள் ஞாபகம் வர வர அழுத்தமாக அவன் மனத்தில் வளர்ந்தது. எந்நேரமும் அவள் நினைப்புத்தான்.

சற்றுப் பித்துப்பிடித்தவன் போலானான். கொஞ்சம் அசடு தட்டியது. வேறொருவனாயிருந்தால் முழு அசடாகி யிருப்பான்; பைத்தியமே பிடித்திருக்கும். இவனா யிருக்கக்கொண்டு சமாளித்துக் கொண்டான். என்ன இருந்தாலும் நாலெழுத்துப் படித்த பிள்ளை இல்லையா?

ஆனால், ஒன்று: ஒவ்வொரு நாளும் செங்கமலத்தை எட்ட இருந்தாவது ஒரு முறை கண்ணால் பார்த்தாக வேண்டும். நாள் தவறாமல் வடக்குத் தெருவுக்குப் போவான். அக்கம் பக்கம் நாலு வீடுகள் தள்ளி நின்று கொண்டு, ஏதோ பெரிய விஷயம் பேசுவதுபோல யாருடனாவது வம்பளப்பான். உண்மையில் இவன் கண் பெரிய வீட்டு வாசலிலே பதிந்திருக்கும். இவன் வந்திருப்பது தெரிந்துதானோ என்னவோ, அவள் வெகு நேரம் வரைக்கும் வாசல் பக்கமே வரமாட்டாள். தவறி ஒரு முறை வந்தாலும் சுடர்விடும் கண்களால் இவனைக் குடித்து விடுவதுபோலப் பார்த்து, உடனே உள்ளே ஓடிவிடுவாள். அவளுக்கு இவனைக் கண்டாலே பிடிக்கவில்லையோ? 'இவனைத் தவிர வேறு யாரையும் மணக்கமாட்டேன்' என்று அவள் சொல்வதாக ஊரார் சொல்வதெல்லாம் வெறும் பேச்சோ? அது, எப்படி யானாலும் அவளைப் பார்த்தது போதும்; அது போதும் இவனுக்கு. அன்றைத் தினம் பலன் பெற்றுவிட்டது. இப்படியே பல நாள் போய்க்கொண்டிருந்தது. பைத்தியக் காரன்! பிறருக்கு இவன் விஷயம் தெரியாதென்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்தான். ஆனால், ஊர் முழுவதும் இது தெரிந்துவிட்டது.

இப்படிக் காலத்தை இவன் ஓட்டிக்கொண்டிருந்த போதுதான் ஒரு நாள் அது நடந்தது—இவன் வாழ்க் கையிலே ஒரு நாளும் மறக்க முடியாத அது. ஒவ்

வொருவனுக்கும் வாழ்க்கையிலே அது மாதிரி ஒன்றிரண்டு நிகழ்ச்சிதான் நேரும். வாழ்க்கையிலேயே மிகக் குதூகலமான அளவற்ற ஆனந்தம் அளித்த பரபரப்பு நிறைந்த ஒரு நிகழ்ச்சியோ - எந்நாளும் மறவாத இன்பம் நல்கிய ஒரு நிகழ்ச்சியோ - பயமும் அதன் நடுவே தீரமும் தோன்றிய ஒரு நிகழ்ச்சியோ - ஒவ்வொருவனுக்கும் ஒன்றிரண்டுதான் நேரும். இந்த அத்தனை உணர்ச்சிகளும் சேர்ந்தாற்போல இவனிடம் ஊறச் செய்த நிகழ்ச்சி அது.

பெரிய வீட்டுப் பழநிச்சாமிக்கு வயசு ஐம்பதுக்கு மேல் ஆகியிருந்தது. அப்போது அவருக்கு மாலைக் கண் வந்துவிட்டது. சூரியன் மலைவாயில் விழுந்தால், அவருக்குக் கண் தெரியாமல் போய்விடும். ஆனால், தேகத்திலே நல்ல தெம்பு இருந்தது. பரபர என்று ஏதாவது வேலை செய்துகொண்டே யிருப்பார். குடுகுடு என்று எங்கேயாவது நடப்பார். துறுதுறு என்று அலை வார். ஆனால், எதற்கும் கைக்குக் காவலாக ஒரு கோலைப் புதிதாக எந்நேரமும் இப்போது வைத்துக் கொண்டார்.

அன்று வெயில் சாயும் தருணம். வடக்குத் தெரு வுக்கு இவன் போனான். வழக்கப்படி வம்பு பேசிக் கொண்டிருந்தான். திடீரென்று பெருங்காற்றொன்று வீசி மண்ணை வாரித் தூற்றியது. வானம் ஒரேயடியாய்க் கறுக்கத் தொடங்கியது. கடலை உலர்த்தியவர், வரகு உலர்த்தியவர், எண்ணெய்க்குக் கொப்பரை உலர்த்திய வர் எல்லாரும் பரபரவென்று அவற்றை அள்ளத் தொடங்கினார்கள். பெரிய வீட்டு வாசலில் செங்கமல மும் அவள் தாயும் வந்து நின்று, இப்படி எதையோ வாரியபடி ஏதோ பேசிக்கொள்ளத் தொடங்கினார்கள்.

அவர்கள் குரலிலே கவலை தொனித்தது. பராமுகமாக அந்தப் பக்கம் ஏதோ காரியமாய்ச் செல்வதுபோல் பாசாங்கு செய்தபடி இவன் அவர்கள் பேச்சைச் சற்று நெருங்கிக் கேட்டான்.

“அப்பா வயல் வெளிப்பக்கந்தான் போனுங்க. நான்தான் சொல்றேனே!” என்ருள் செங்கமலம்.

“கருப்பனும் அங்கேதானே போயிருப்பான்?” என்று கேட்டாள் தாய்.

“இல்லேம்மா, இல்லே. அண்ணன் எங்கேயோ மாடு பாக்கப் போறேன்னு அடுத்த ஊருக்குப் போச்சு.”

“அப்படின்ஞ அவுங்களெ இப்ப யார் போய் அழச்சு வரது? இந்த வயசுக் காலத்திலே, இப்பிடிப் பண்ருங்க. சூரியன் மறெஞ்சாக் கண்ணே தெரியாது. மழையோ எட்டூருக்குக் கறுத்து வருது. பொழுதிருக்கச்சே வீட்டுக்குப் போவோம்ஞவது வருவாங்களா? போன எடமோ காடும் புதரும் கறுப்பண்ண சாமியும் சூழ்ந்து கிடக்கும். எங்கே அகப்பட்டுக்கிட்டுத் தவிக்கிருங்களோ! தவிக்கட்டும். நாம்ப என்ன பண்றது? அவுங்க அவுங்க தலையிலே பிரமன் எழுதியதுக்கு அவுங்க அவுங்க தானே அநுபவிக்கணும்?”

இவனுக்கு விஷயம் புரிந்துவிட்டது. ‘ஐயோ பாவம்!’ என்று ஒரு கணம் நினைத்தான்.

அஸ்தமித்தால் அந்தக் கிழவருக்குக் கண் தெரியாது. இவனுக்கோ அஸ்தமித்தால், இருட்டிலே மிகுந்த பயம். அறிவாளிதான்; நல்ல பாட்டுக்காரன்தான்; நாலு பேர் புகழும் நடிகன்தான். ஆனால், மிக மிகப் பயந்தாங்கொள்ளி.

'யார் எக்கேடு கெட்டால் நமக்கென்ன ?' என்று ஒரு கணம் எண்ணினான். அடுத்த கணமே, இந்த எண்ணம் மாறியது. இவர் செங்கமலத்தின் அப்பா இல்லையா ? செங்கமலத்தின் கண்ணிலிருந்து ஒரு சொட்டு நீர் உதிர்ந்தால், அது இவனுக்குத் தாங்காத வேதனை தரும். அதற்கு இவன் இடங் கொடுக்கலாமா? கூடாது ; கூடாது.

தன்னை மறந்த சிந்தனையோடு நடந்தான்.

பெரிய வீட்டு வயல்வெளிப் பக்கம் போகவேண்டும் என்று நினைத்து இவன் நடக்கவில்லை. ஆனால், அந்தத் திசை இவன் காலுக்குத் தெரியும். அது தானாகவே அந்தத் திசை நோக்கி நடந்தது.

கறுப்பண்ணசாமி கோயிலைத் தாண்டியாயிற்று. சுடு காட்டைக் கடந்தாயிற்று. காட்டாற்றங் கரையை அடையும்போது, வெள்ளெழுத்து மறையும் நேரம். இன்னும் ஒரே ஒரு தூற்றல்கூட விழா விட்டாலும், வானம் குமுறத் தொடங்கிவிட்டது. இரண்டு பாகை தூரத்தில் உள்ளவர்களை ஆரோக்கியமான கண்ணுள்ள வர்களே அடையாளம் கண்டுகொள்ள முடியாதபடி வெளிச்சம் மங்கிவிட்டது.

எட்டுத் திசையிலும் ஆளரவம் துளிக்கூட இல்லை. காக்கை குருவிகளின் சந்தடியும், ஆடு மாடுகளின் மணி யோசையும் முற்றும் மங்கிவிட்டன. இடியின் குமுறலும், காற்றின் சீறலுந்தான் கேட்டன.

மற்ற நாளாயிருந்தால் இப்படித் தன்னந் தனியே காட்டுப் பக்கத்தில் அகப்பட்டுக் கொண்டதற்கு இவன் பெருந் திகில் அடைவான். இன்று இந்த அந்திவேளை யில் இவனுக்குப் பயமே இல்லை ; துளியும் பயமில்லை.

நரசிம்மமூர்த்தி இந்த மாதிரி அந்திவேளையிலே தான் அவதரித்திருப்பார். அப்படி இருந்தது இது. ஆனாலும் என்ன? நரசிம்மத்தைக் கண்டு இரணியன் தான் பயப்படவேண்டும். பிரஹ்லாதனுக்கு ஏது பயம்? ஏன் பயம்?

'பழநிச்சாமி எங்கேயாவது தென்படுகிறாரோ?' என்று கவனிப்பதற்காக, இடமும் வலமும் முன்னேயும் இவன் திரும்பிப் பார்த்தான். அவர் இவன் கண்ணுக்குத் தென்படவில்லை. மார்பளவு தண்ணீருள்ள ஆற்றைக் கடந்து, மறு கரைக்குப் போனால், கூப்பிடு தூரத்தில் பெரிய வீட்டு வயல் வெளி. 'அங்கேயும் போய்ப் பார்த்து விடலாம்' என்று இவன் எண்ணி, நீரில் இறங்கினான்.

"யார் அங்கே? யார் அது?"

சின்னப்பன் திடுக்கிட்டுத் திரும்பினான். "இது அவர் குரல்தானே? அது மாதிரிதான் இருக்குது. இந்தப் பெரியவங்களே இப்படித்தான். நீரில் ஆள் இறங்கும் சலசலப்பு, காலடியின் அரவம், எட்டத் தோணும் நிழல் ஆட்டம், பேச்சுக் குரல் எதையும் உத்துக் கேட்டு, கூப்பிடத் தொடங்கிடுவாங்க!"

ஆனால், அந்தக் குரல் வந்த இடத்தை இவன் சட்டென்று கண்டுபிடிக்க முடியவில்லை.

கைக் கோலைக் கீழே பட் பட் என்று தட்டிக் கொண்டே, மறுபடியும் அவர், "யார் அது? கூப்பிட றது காதிலே விழல்லே?" என்று கம்பீரமாகக் கேட்டார்.

ஆற்றங்கரையில் ஒரு மண்மேட்டுக்கு அருகே அவர் உட்கார்ந்துகொண்டிருந்ததை இவன் கண்டு கொண்டான்.

" நான்தான் " என்ருன். அது என்னவோ வழக்க மான குரல் இல்லை. இவன் தொண்டையிலே ஏதோ ஒரு கரகரப்பு ஏற்பட்டது. அதுவும் ஒரு நன்மைக்குத்தான்.

கண்ணே தெரியவில்லை; ஆள் பேர் இல்லாத காட்டுப்பக்கத்திலே தனியாக இருக்கிருர். ஆனல் அவ ருடைய கம்பீரம் மாத்திரம் போகவில்லை.

" நான்தானின்ன ? கோடி வீட்டுக் குப்பன, மேலத் தெரு மருதையா ?"

" இல்லை. நான்தான் "

" அட எளவு! நம்ம கருப்பன்தான ?"

இவன் அதற்குப் பதில் சொல்லாமல், " வாங்க போவோம். கோலை இப்பிடிக் கொடுங்க. ஒரு முனையெ நீங்க பிடிச்சுக்குங்க " என்ருன்,

" அடேயப்பா ! நான் இன்னும் அப்பிடிக் குருடாப் போகல்லே, நீ முன்னலே நட. நான் பின்னலே வர்றேன்."

இருவரும் ஊரை நோக்கி நடக்கத் தொடங்கினர் கள். இரண்டெட்டுப் போவதற்குள், சடசட என்று மழை பொழியத் தொடங்கியது. மழை என்ருல் இப்படி அப்படிப்பட்ட மழையல்ல. சிறு சிறு கூழாங்கற்களைக் கூடை கூடையாக வாரி யிறைப்பதுபோன்ற மழை. ஒவ்வொரு மழைத் துளியும் சுள்ளென்று உடம்பிலே சரம்போல் தைத்தது. எங்கும் ஒரே காரிருள் சூழ்ந்தது. தடமே தெரியவில்லை. முள்ளையும் கல்லையும் பாராமல் கறுப்பண்ணசாமி தோப்பையே இலக்காக வைத்துக் கொண்டு இவன் நடந்தான். பின்னலே வந்த கிழவர், " காலைக் கொஞ்சம் எட்டிப்போடு, தம்பி " என்று

சொல்லி, கைத்தடியை டப் டப் என்று தட்டிக்கொண்டே நடந்தார்.

எதிரே ஒரு பெரிய கள்ளி வேலி வந்து சேர்ந்தது. அதில் வழி எங்கே என்று தெரியாமல் இவன் தியங்கி நின்றான்.

"என்ன, தம்பி, தியங்குறே? வேலியா? செத்தெ ஒதுங்கிக்கோ. வழி பண்றேன்" என்றார் கிழவர். இவன் நகர்ந்தான். கோலைப் படீர் படீர் என்று வேலியிலே அவர் இரண்டு போடு போட்டார். கள்ளி நொறுங்கிச் சிதறி வழி பிறந்தது.

"நட" என்றார் கிழவர்.

வைரம் மங்கிய வானச்சேலை பளார் என்று இரண்டாகக் கிழிந்ததுபோல ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்கு ஒரு மின்னல் பாய்ந்தது. உடனே சீறிய சிங்கம்போல் கரமுர கரமுர என்று பேரிடி ஒன்று உறுமியது.

மின்னல் ஒளியை வேறு சமயங்களில் கண்டால், இவன் நடுங்குவான். இப்போது, அதைக் கண்டு இவன் மகிழ்ந்தான். மின்னல் தோன்றிய கணத்தில், பளிச் சென்று வெகுதூரம் தடம் தெரியும். மின்னலை 'ஆண்டவன் போட்ட விளக்கு' என்றே இவன் எண்ணினான். திரும்பத் திரும்பச் சிறிது நேரத்துக் கொருதரம் மின்னிக் கொண்டே யிருந்தது. கிழவரின் கோலுதவியால் வேலிகளை முறித்துக்கொண்டும் மின்னலொளியிலே வழி கண்டுகொண்டும் இவன் நடந்தான்.

வழிநெடுகக் கிழவர் ஏதாவது பேசிக்கொண்டே வந்தார்.

"ஏண்டா தம்பி, அந்தச் சின்னப்பனோடே இன்னும் ஏதுக்குடா வருமம் ?"

"நாடகமே நின்னுபோச்சே. உன்னாலே தானே ?"

"செங்கமலத்தெ நெனச்சாத்தான் மனசுக்குச் சங்கடமா இருக்குது. அதெக் கன்னிப் பொண்ணவே வெச்சிடுவதா ?"

"அது என்னவோ அவனெத் தவிர வேறே யாரையும் கட்டிக்கமாட்டேன்னு பிடிவாதமா நிக்கிது !"

இவன் சரியாய்ப் பதிலே சொல்ல வில்லை. 'உம்' 'ஆம்' என்று முனகிப் பூசி மெழுகினான். தன் குரல் தெரிந்துவிடக் கூடாதே என்று ஒரு புறம் பயம்; அவருடைய உள்ள நிலையை அறிந்து இவன் அடைந்த உள்ள நெகிழ்ச்சியால் ஏற்பட்ட தொண்டையடைப்பு மறுபுறம்.

கிழவரை இன்று இவன் போய் அழைத்து வராவிட்டால், அவர் கதி என்ன ஆகியிருக்குமோ ?

இருவரும் உடம்பெல்லாம் சொட்டச் சொட்ட மழையில் நனைந்துவிட்டார்கள். இவனுக்கு வெடவெட என்று நடுங்கியது. இந்த நிலையிலும் இவனுக்கு ஓர் ஆனந்தமே ஏற்பட்டது.

இப்போது சங்கிலிக் கறுப்பனின் கூந்தல் பனையருகே வந்தாயிற்று.

பளீர் என்று ஒரு மின்னல் மின்னியது. பக்கத்திலே புளியமரத்தில் கட்டித் தொங்கிய இரும்புச் சங்கிலி அறுந்து விழுவதுபோல் தோன்றிற்று. "ஐயோ ! சங்கிலி விழுந்தால், ஊரைக் கறுப்பன் அதம் பண்ணிவிடுவானே" என்று சின்னப்பன் வாய்விட்டுக் கத்தி விட்டான்.

"யாரப்பா நீ ? முத்துக்கருப்பன் இல்லே போலிருக்குதே !" என்றார் கிழவர்.

"ஊம்! ஊம்!" என்றே இவன் முனகினான்.

இனி வழியைப்பற்றிப் பயமில்லை. இரு புறமும் தேர்க்கள்ளிகள் அணிவகுத்த வீரர்கள் போல் நிற்கும் பெரிய வண்டிச் சுவட்டுக்கு வந்தாயிற்று. நடந்தார்கள் இருவரும்.

"ஊருக்குள்ளே வந்திட்டோம் போலிருக்கே."

"ஆமாம்."

"வண்டிச் சுவடா?"

"ஆமாம்."

கொஞ்ச நேரத்தில் எதிரே யாரோ விளக்கோடு வருவது சிறிது தூரத்தில் தெரிந்தது.

இவன் சட்டென்று பின்வாங்கி ஒரு மரத்தடியில் பதுங்கிக்கொண்டான்.

வந்தவன் முத்துக்கருப்பன்தான். தகப்பனை "வாங்க அப்பா!" என்று சொல்லி அழைத்தான்.

"ஓ நீதானா?"

"ஆமாம், வாங்க."

'நல்ல வேளையாய்ப் போயிற்று!' என்று இவன் நினைத்தான். 'தான் செய்த காரியம் அவர்களுக்குத் தெரியாமல் போனதே நல்லது' என்று எண்ணினான். தனியே வீடு போய்ச் சேர்ந்தான்.

அன்று அந்த அந்திவேளையில், அவன் செய்த காரியம் மட்டும் நினைக்கும்போதெல்லாம் அவனுக்குப் பெரிதும் இன்பம் அளித்தது. அதை யாரிடமும் சொல்வதில்லை என்று உறுதி பூண்டான்.

அடுத்த நாளே இவனுக்குக் குளிர் எடுத்துக் காய்ச்சல் அடித்தது. இரண்டு மூன்று நாளில் ஜன்னிகூடக்

கண்டுவிட்டது. அப்போது என்ன என்னவோ உளறியிருக்கிறான்.

" ஏ செங்கமலம்! உங்க அப்பனைக் காப்பாத்தினது யாரு? நான்தானே! சங்கிலிக்கறுப்பன் சங்கிலி அறுந்து போச்சு! ஊரை அதம்பண்ணப் போறான், பாத்துக்கோ. நீ என்னெக் கலியாணம் கட்டிக்கமாட்டே, செங்கமலம்?" இப்படியெல்லாம் பிதற்றல்.

யார் செய்த புண்ணியமோ? காய்ச்சல் ஒன்றிரண்டு நாளில் குறைந்தது. நல்ல தூக்கம் வந்தது. தூங்கினான்.

செங்கமலத்தைப் பற்றியே என்னவோ கனவு. " ஏ செங்கமலம், நீ...நீ...நீ...எங்கே? எங்கே இருக்கே!" என்று உளறிக்கொண்டே விழித்தெழுந்தான்.

என்ன ஆச்சரியம்! பக்கத்திலே செங்கமலம் இருந்தாள். " இதோ இருக்கேனே. மனசெ அலட்டிக்காதிங்க. தூங்குங்க" என்றாள்.

" நீயா? நீயா?"

" ஆமாம். நான்தான். இதோ அண்ணன் நிக்குதே! பாருங்களேன்!"

முத்துக்கருப்பன் கண்களிலே நீர்ததும்ப, " சின்னப்பா, நான் இல்லே பெரிய வீட்டுப் புள்ளெ; நீதான்! பெரியவரெக் காப்பாத்தியவன் நீ. இனிமே நீ எங்க வீட்டுப் புள்ளெ" என்றான்.

உணர்ச்சி மிகுதியால், சின்னப்பனுக்குச் சிறிது களைப்பு ஏற்பட்டது. மீண்டும் தூங்கிவிட்டான்.

இந்த விதமாகச் சமரசம் ஏற்பட்டது. சில நாளில் சின்னப்பன் பரிபூர்ண குணம் அடைந்தான். அடுத்த

மாதம் முகூர்த்த மாதம். அதில், சின்னப்பனுக்கும் செங்கமலத்துக்கும் திருமணம் நடந்தது.

இதோ வீட்டிலே இந்த அந்திவேளையில் இன்பம் தோன்றத் திருவிளக்கேற்றி வைத்திருப்பவள் அந்தச் செங்கமலந்தான். சற்று நேரத்தில் முத்துக்கருப்பன் வரப்போகிறான், 'இந்த வருஷம் என்ன நாடகம் போடுவது?' என்று கேட்பதற்காக!

நரசிங்க நாடகந்தான் போடவேண்டும். நரசிங்கம் தோன்றியது போன்றது அந்த அந்திவேளை. பிரஹ்லாத வரதர் காட்சியளிப்பது போன்றது இந்த அந்திவேளை. அந்த மூர்த்தியின் இரண்டு கோலங்களையும் விமரிசையாகக் காட்டிவிடவேண்டும் அந்த நாடகத்திலே.

உடைந்த சிம்ணி

அதோ இடுப்பிலே குடத்துடன் தெருக்கோடியில் வருகிருளே, அவள்தான் துர்ப்பாக்கியவதி குமுத வல்லி. அவள் அணைப்பில் பளபளவென்று மின்னுகிற அது தங்கக்குடம் அல்ல; சாதாரணப் பித்தளைக் குடந் தான். அவளுக்கு இந்தச் சின்னஞ்சிறு பருவத்தி லேயே இன்பமில்லை; ஆனால், அவளை அண்டியவரெல் லாம் - அண்டிய பொருள்களுங் கூட - அதிருஷ்டசாலி கள். யாரிடமும் அவள் இங்கிதமாய் நடந்து கொள் வாள். எந்தப் பண்டத்தையும் கண்ணுங் கருத்துமாய்ப் பாதுகாப்பாள். அதற்கு இந்தக் குடமே ஓர் அத்தாட்சி. பாத்திரம் பண்டங்களை அவள் வெறும் ஜடப் பொருள் களாக மதிப்பதில்லை; ஜீவனுள்ள பிறவிகள் போலவே பாவித்துச் சீராட்டுவாள். புஸ்தகத்தைப் படித்தால் நேரே ஸரஸ்வதி தேவியுடன் சல்லாபம் செய்வதுபோல வும், திருவிளக்கைக் கண்டால் லட்சுமி தேவியின் தேஜ ஸிலே குளிப்பது போலவும், காய்கறி நறுக்கும் கத்தி யிலே உமையவளின் சக்தியைத் தரிசிப்பது போலவுமே அவள் உணர்ச்சி கொள்வாள்.

கழுத்தில் உள்ள மாங்கல்யத்தைத் தவிர, காதிலே சிவப்புத் தோடு, கையிலே தங்கக் காப்பு, மூக்கிலே

பேஸரி இவ்வளவுதானு அவளுடைய நகைகள்? ஊரிலே ஓரளவு பணக்கார மிராசுதாரின் ஒரே பெண் ஆவாளே அவள்! நாளுங்கிழமையுமாய், மற்றப் பெண்களெல்லாம் பட்டுச் சேலை உடுத்து, பல நகைகள் அணிந்து, வண்ணாத்திப் பூச்சிகள்போல் தெருவிலே குறுக்கும் நெடுக்குமாய்த் திரியும்போது, குமுதவல்லி மட்டும் ஏன் இப்படி இருக்கிருள்?

குமுதத்துக்கு லட்சாதிபதி வீட்டுப் பெண்ணைப் போல் நகைகள் இல்லாவிட்டாலும் பத்துப் பவுனில் கடிகாரச் சங்கிலி, ஐந்து பவுனில் அட்டிகையும் அதற்குரிய பதக்கமும், கைக்குச் சில வளையல்கள், இடுப்புக்குத் தங்க ஒட்டியாணம், இன்னும் இரண்டொரு நகைகள் இவையெல்லாம் உண்டு. பட்டுச் சேலைகளும் ரவிக்கைகளும் போதிய அளவு அவளுக்கு இருக்கின்றன. அவளைக் கல்யாணம் செய்து கொடுக்கும்போது, அவள் அப்பாவுக்கு ஆருயிரம் ரூபா செலவு. இதை இந்தக் காலத்திலுங்கூட அற்பம் என்று சொல்ல முடியாது. கல்யாணம் விமர்சையாகவே இருந்தது. மிகவும் விதரணை தெரிந்த ஒரு புத்திமான் நடத்தும் எந்த வைபவமுமே சிறப்பாயிருப்பதற்குக் கேட்க வேண்டியதில்லை. குமுதவல்லியின் அப்பா அப்படிப்பட்ட ஒருவர். தவிர அவருடைய சொத்து முழுவதும் யாரைச் சேரப் போகிறது? அவருடைய ஒரே மகள் குமுதத்தைத்தானே?

கல்யாணமாகியும் கன்னியாகவே வாழ்கிருள் குமுதம்; அப்படி அவளை வாழச் செய்துவிட்டாள் அவள் மாமி. குற்றம் யார் மேல்? அவள் மேலா? மாமி மேலா? கணவன் மேலா? யார் மேலும் இல்லை; தெய்வத்தின் மேல்தான்.

" இந்தப் பெண்ணை இப்படி வாழவொட்டாமல் செய்கிறாளே ஒருத்தி. அவளுக்கும் ஒரு பெண் இல்லையா? அது வளர்ந்து வாழ்க்கைப்பட்டு வாழுமா? தெய்வத்துக்குக் கண்ணிருந்தால், அது அவளைக் கேட்காமல் விடாது" என்று ஒரு நாள் குமுதத்தின் அம்மா பொருமினாள்.

"அம்மா, இப்படிச் சொல்லாதே" என்றாள் குமுதம்.

"பின்னே என்னடி? பெற்ற வயிறு எரிகிறதே!" என்றாள் அம்மா.

"தெய்வமே குற்றவாளியாக இருக்கும்போது அது எப்படி, அம்மா, நமக்கு உதவும்? இல்லை; தெய்வத்துக்குச் சர்வ சக்தியும் இருந்தால், பிறருக்குக் கெடுதல் செய்ய அதை ஏன் நாம் பிரார்த்திக்க வேண்டும்? பிறருக்கும் நல்லது செய்து நமக்கும் நல்லது செய்யட்டுமே அது?" என்று சமாதானம் சொன்னாள் குமுதம்.

" ஆமாம்; இவள் வேதாந்தம் பேசக் கிளம்பி விடுவாள்" என்று சலிப்புடன் சொன்னாள் அம்மா.

அச்சில் வார்த்த விக்கிரகம்போல் இருக்கும் குமுதத்துக்கு, மூன்று வருஷத்துக்குமுன் கல்யாணம் நடந்தது. அவள் அப்போது பதினாறு வயசுப் பால குமாரி. இந்த நாளில் பெண்ணுக்குப் பருவம் வருமுன் யார்தான் கல்யாணம் செய்து வைக்கிறார்கள்? கல்யாணப் பையன் ராஜத்துக்குப் பெண்ணிடம் பரம மோகம். அவன் தாயுமே அன்று குமுதத்திடம் பேரன்பு செலுத்தினாள். ராஜத்துக்கு அப்பா இல்லை; அவர் தவறிச் சில வருஷங்கள் ஆகிவிட்டன. அம்மா சொல்லை அவன் சிறிதும் தட்ட மாட்டான். அவர்கள் நகரவாசிகள். ஒரு பெரிய

கம்பெனியில் ராஜத்துக்கு நூற்றிருபது ரூபா சம்பளம். மிகவும் முன்னுக்கு வரக் கூடிய பையன். சொத்து அதிகம் இல்லை. என்றாலும் லட்சணம், அறிவு, படிப்பு மூன்றும் நிறைந்தவன். ஆனால், ரஸிகன் அல்ல.

“அருமையான ஜோடி!” என்று கல்யாணத்தின் போது எல்லாரும் கொண்டாடினார்கள்.

“ஐயோ! கண் பட்டு விடப் போகிறதே!” என்று குமுதத்தின் அம்மா அந்த நாளிலே தவித்தாள். அதற் கேற்றாற்போல, ஒன்றரை வருஷத்துக்கெல்லாம் அந்தச் சம்பவம் நேர்ந்தது!

குமுதம் புருஷன் வீட்டுக்கு முதல் முதலாகச் சென்று சில வார காலங்கூட வாழவில்லை. அந்தச் சம்பவத்தின் பலனாகத் தாய் வீட்டுக்குத் திரும்பி வந்துவிட்டாள். என்ன துரதிருஷ்டம்! உடைந்த சிம்ணி ஒன்றால் என்ன விபரீதம் நேர்ந்துவிட்டது!

அப்பாதான் அவளைப் புக்ககத்தில் கொண்டுபோய் விட்டு வந்தார். அம்மாவும் கூடவே புறப்படுவதாகத் தான் இருந்தாள். ஆனால், பார்த்திருந்த நல்ல நாளில் ஏதோ அசௌகரியத்தால் அம்மா பின் தங்க நேர்ந்தது. புறப்படும்போது அம்மா பெரிதும் புத்திமதி சொன்னாள். “கண்ணே குமுதம், ஜாக்கிரதை. பையன் பெயருக்கு ஏற்றபடி ராஜா மாதிரி இருக்கிறான். மாமியும், சின்னஞ் சிறு நாத்தியும் ரொம்ப நல்லவர்கள்தான். என்றாலும், வீட்டிலே புதுப் பெண் நுழைந்தால், பையனின் அம்மாவா யிருந்தாலுங்கூடக் கொஞ்சம் அசூயை உண்டாகி விடுவது சகஜம். வெகு எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். சமர்த்தாயிரு; சமர்த்தாயிரு” என்று குழந்தைக்குச் சொல்லுவதுபோல் சொன்னாள்.

அப்போது, அம்மா, பெண் இரண்டு பேர் கண்ணிலும் ஜலம் துளும்பியது.

நகரத்தில் குமுதத்தின் பக்கம் தனி வீடு. சின்ன வீடுதான் ; என்றாலும் சொந்த வீடு. மாமி கொஞ்சம் முன் கோபி ; படபடப்புக்காரி. ஆனாலும் ரொம்ப நல்லவள். நாத்தி சகுந்தலை சிறிசு. அவளுக்குப் பத்துப் பன்னிரண்டு வயதுக்கு மேல் இராது. வீட்டுக்குக் குமுதம் வந்ததுமே, "மன்னி, மன்னி" என்று அவளிடம் அந்தப் பெண் வந்து ஒட்டிக் கொண்டாள். அவளுக்கு அழகழகாய்த் தலை பின்னி விடுவாள் குமுதம். ஒரு நாள் தாழம்பூ வாங்கிக் கத்தரிக்கோலால் நறுக்கி நாத்திக்கு ஜடையிலே வைத்துத் தைத்து அதற்கு நடுவே கொறநாப்பட்டை பதித்து விட்டாள். "இதென்ன கர்நாடகம்!" என்று கேலி செய்தான் ராஜம்.

"போடா போ! இந்தக் காலத்துப் பெண்களுக்குக் கனகாம்பரப் பூவும் ரிப்பனுந்தான் தெரியும். கிராமத்திலே வாழ்ந்தவள் என் மாட்டுப் பெண். அருமையாய்ப் பின்னக் கற்றிருக்கிறாள். உனக்குப் பிடிக்கா விட்டால், கண்களைப் பொத்திக் கொள். எனக்கு ரொம்பப் பிடிக்கிறதப்பா" என்றாள் மாமி.

அவள் தனக்காகப் பரிந்து பேசியதில் குமுதத்துக்குச் கொஞ்சம் சந்தோஷந்தான். ஆனால், பாராட்ட வேண்டியவன் யாரோ, தன் திறமையை யார் வியந்தால் தனக்குப் பரவசம் உண்டாகுமோ அந்தக் கணவன், பாராட்டாததுமன்றிப் பரிகசித்தது குமுதத்துக்குச் சொல்ல முடியாத வருத்தத்தைத் தந்தது.

ராஜம் இதை உணரவில்லை. இதெல்லாம் சின்ன விஷயம் என்பது அவன் எண்ணம். இன்ப துன்பங்

களைத் தருவதில் சின்ன விஷயம் பெரிய விஷயம் என்ற வித்தியாசம் உண்டா?

குமுதவல்லியின் குரல் வீணையினிமை வாய்ந்தது. அவளுக்குப் பழமையான பல பாட்டுக்கள் தெரியும். நலுங்கு, லாலி, பத்தியம், ராம நாடகக் கீர்த்தனை, நந்தனர் சரித்திரக் கீர்த்தனை இப்படிப் பல உருப்படிகளை அவள் கற்றிருந்தாள். தமிழிசை இயக்கத்தைப் பற்றி அவளுக்கு ஒன்றும் தெரியாது. அப்படி யிருந்தும் அவள் அறிந்தவை யெல்லாம் தமிழ்ப் பாட்டுக்களே. தன் கல்யாணத்தின் போது கூச்சத்தால் அவள் ஒன்றும் சரியாய்ப் பாடவே இல்லை. ஊரெல்லாம் கொண்டாடும் தன் பாட்டை இப்போது கணவன் ராஜம் கேட்க வேண்டும் என்பது அவள் ஆசை. அதற்கு ஒரு சந்தர்ப்பத்துக்காக அவள் காத்திருந்தாள்.

ராஜத்துக்குத் 'தமிழிசை' ரொம்பப் பிடிக்கும். ஆனால், சங்கீதம் பிடிக்காது. ஸினிமாவிலே என்ன என்னவோ கதம்பமெட்டுகளில் பாடுகிறார்களே, அந்த உருப்படிகளில் பலவற்றின் இரண்டரை அடியோ மூன்றே முக்காலடியோ அவனுக்குப் பாடமாகி விட்டன.

சாளரத்தில் வந்துநின்று
ஜாடை காட்டிக் கண்சிமிட்டிச்
சாயந்திரம் வந்தழைத்த
சாச்சச் சாச்சச் சாச்சச்சா...

இப்படி ஒரு பாட்டு! அடி மறந்தாலும் மெட்டுக் கள கச்சிதமாக ராஜத்துக்குப் பாடம். அந்தப் பாட ஞாபக விசேஷத்தில் உரு மாறியது தானே இதன் நாலாவது அடி? இருக்கலாம். ஆனால் அப்படியும் நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. சில சமயம் சில அடி களைச் சொல்ல ராஜத்துக்குக் கூச்சமா யிருக்கும்; அதற்

காக அவனுகவே இப்படி உருமாற்றி மழுப்புவதும் உண்டு.

> சாளரத்தில்...
> சாளரத்தில்...
> சாளரத்தில் வந்து நின்று...

என்று ஒரு நாள் அவன் வெகு சுவாரஸ்யமாக ஆரம்பித்தான். குமுதத்துக்கு இதைக் கேட்கச் சகிக்கவில்லே. தன் வெறுப்பை வெளியே காட்டாமல் மனத்துக்குள்ளே வெதும்பினுள். இப்படிப்பட்ட கணவன் தன் பாட்டைக் கேட்காமல் இருப்பதே மேல் என்று அவள் எண்ணினுள். இத்தனேயும் இரண்டொரு வாரத்தில் நடந்த நிகழ்ச்சிகள்.

குமுதத்தின் மனம் என்னவோ வெறிச்சென்று போயிற்று. ராஜம் மாத்திரம் தேன் குடித்த ஈயைப் போல் மிக்க உற்சாகமாய்ப் பாடிக்கொண்டும் கேலி செய்துகொண்டும் இருந்தான். அவனுடைய உற்சாகத்தைக் காணக் காணக் குமுதத்துக்கு எரிச்சல் எரிச்சலாய் வந்தது. இந்த நிலேயில், அவளுக்குச் சிறு சிறு காரியங்களெல்லாம் தட்டுக் கெட்டன. அப்போதே தெரிந்து விட்டது மாமியின் குணம். இன்று இதோ குளத்திலிருந்து குடத்தில் குடி தண்ணீர் கொண்டு வருகிருளே, இதே போலத்தான் அன்றும் மாமி வீட்டுக் கொல்லேக் குழாயிலே தண்ணீர் பிடித்து வந்தாள். அதில் துளி நீர் ததும்பிக் கூடத்திலே சிந்தியது. அடேயப்பா! அதற்கு மாமி எப்படிப் பொரிந்து தள்ளினுள்! இதிலிருந்து துவஜாரோகணம் ஆகிவிட்டது. எடுத்ததற்கெல்லாம் வெடுக்கு வெடுக்கென்று மாமி தூற்றினுள். அந்த வாண்டு சகுந்தாவும் உடனே அவளுக்கேற்றுற் போல் 'டான்ஸ்' ஆடிக்கொண்டு 'ஒத்தான்ஸ்' பாடத் தொடங்கிவிடும். ராஜத்துக்கோ கண்ணுங் காதும் - ஏன்,

இருதயமே - இல்லை போல் தோன்றியது. கொலுப் பொம்மைக்குச் சாவி கொடுத்தது மாதிரி சகுந்தா ஆடுவதையோ, கிராமபோன் பிளேட்டு வைத்தது மாதிரி மாமி 'பாடு' வதையோ கண்டும் காணுதவனுய், கேட்டுங் கேளாதவனுய் அவன் பாட்டுக்கு எல்லாவற்றையும் கேலி செய்துகொண்டும் சிரித்துக் கொண்டும் இருந்தான். தன்னந் தனியே மெல்லிய குரலில், " இது அம்மாவின் குணம். நீ வருத்தப் படாதே" என்று அவன் இரண்டு வார்த்தை சொல்லி யிருந்தால், குமுதத்தின் மன வேதனை யெல்லாம் பறந்தோடி யிருக்கும். அந்தப் 'பரம் பிரம்மத்'துக்கு அது சொல்லத் தோன்றவில்லை.

என்ன வாழ்வு! இது என்ன வாழ்வு! இந்த நிலை யில்தான் அந்தச் சிம்ணி உடைந்தது. அதிலிருந்து ஒன்றுக்குப் பின் ஒன்ருக என்ன என்னவெல்லாம் நடந்துவிட்டன! ஐயோ! அவற்றைப்பற்றி இப்போது நினைத்தாலே குமுதத்துக்கு மனம் பதறுகிறது. பன்னிப் பன்னிச் சொல்லியென்ன ? சிம்ணி உடைந்தது. அதன் விளைவாகக் குமுதத்தின் மனமே உடையச் செய்து விட்டார்கள். உடைந்த சிம்ணி ஒட்டாது ; மனித மனங் கூட அப்படியா ? ஒரு நாளும் ஒட்டாதா ? ஒட்ட வழி இல்லையா ?

சிம்ணி உடைந்ததும், பல சம்பவங்கள் ஊசிப் பட்டாசு வெடிப்பது போல ஒன்றன்பின் ஒன்ருக நிகழ்ந்துவிட்டன. அத்தனைக்கு நடுவிலேயும் ராஜம் பாடுகிருன் சினிமாப் பாட்டு !

ஆசையாலுல்—என்மேல்
ஆசையாலுல்—நல்ல
தோசை தருவாய்—முறுகல்
தோசை—தருவாய்.

அடடா ! சங்கீதம் பொழிகிருன், சங்கீதம் !

ஆனுல், துர்க்குறித்தனமாக அவன் பாடிய பாட்டுப் போலவே நடந்ததே! 'சாளரத்தில் வந்து நின்று...!' என்ன பாட்டு! அந்தப் பாட்டுத்தான் குமுதத்தை அறியாமலே அவளுடைய அசட்டுத்தனத்துக்குக் காரணமாயிற்றே?

கடைசியிலே மாமி மகா கிராதகத்தனமாக நடந்து கொண்டாள். என்ருலும் அதிலும் ஒரு நாணயம்! குமுதத்தின் சர்வாபரணங்களையும் அவளுக்கு அணிந்து விட்டு,வாரிப் பின்னிப் பூச் சூட்டிவிட்டு,தன்னந் தனியே ரெயிலில் ஏற்றித் தாய் வீட்டுக்கு அனுப்பிவிட்டாள்.

வீடு வந்து சேர்ந்த மகள் தாயைக் கண்டதும், "அம்மா!" என்று கதறி அதற்குமேல் ஒன்றும் பேச முடியாமல் கண்ணீர் விட்டாள்.

"அடி என்னடி நடந்தது?" என்று கண்கலங்கிக் கொண்டே கேட்டாள் தாய்.

விவரம் முழுவதும் குமுதத்தால் சொல்ல முடியவில்லை. "என்னை விரட்டிவிட்டார்கள். எனக்கு இனிப் புக்கக வாழ்வு கிடையாது" என்று சுருக்கமாகச் சொன்னுள். பிறகும் ஒரு போதும் முழு விவரமும் அம்மாவிடம் தெரிவிக்க அவளால் முடியவில்லை. தன் கையால் ஒரு சிம்ணி உடைந்ததன் பலனுகவே இந்தக் கதி நேர்ந்தது என்று மட்டும் சொன்னுள்.

குமுதத்துக்கு ஆத்மார்த்தமான ஒரு தோழி உண்டு. அவளிடம் குமுதத்தால் எதையும் ஒளிக்க முடியாது.

தோழி கங்கா ஒரு நாள், "யாருக்கடி காது குத்துகிருய்? சொல்லுகிறவர் சொன்னுல் கேட்பாருக்கு மதி எங்கே போயிற்று? ஒரு சிம்ணியை உடைத்ததற்காக உன்னைத் தள்ளி வைப்பார்களா? வேறே என்னவோ

சூது இருக்கிறது. ஒளிக்காமல் சொல்லு; நான் வழி செய்கிறேன்" என்ருள்.

"வேறு ஒன்றும் இல்லையடி; அதுதான் மூல காரணம்."

"அப்படி வழிக்கு வா. அது மூலகாரணம் என்ருல், உடனடியான வேறு காரணமும் இருக்கவேண்டும். அது என்ன?"

மண்ணுங்கட்டிக் காரணம்! சிம்ணி உடைந்ததற்குக் காரணமே அவள் கைப்பதறல்தான். நினைத்ததற்கெல்லாம் மாமி 'துசுக்கு'ச் சொல்லிக்கொண்டிருந்ததால், நரம்புக் கோளாறு போல எந்த நேரமும் ஒரு பயம் ஏற்பட்டது. சிம்ணி கை தவறி உடைந்தது. மாமி அறிந்தால் என்ன சொல்லுவாளோ என்று நடுங்கினுள். அதற்குப் பர்த்தியாக ஒரு சிம்ணி எப்படியாவது வாங்கி வைத்துவிட்டால் நல்லது என்று தோன்றியது. ஆனுல் கடைக்கு யாரை அனுப்புவது? சகுந்தாவோ, 'தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினுறடி பாயும்' என்பது போல் குதிக்கிறது! ஜன்னலிலே வெட்ட வெளியை வெறிச்சென்று குமுதம் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்போது, அங்கே ஒரு பையனின் தலை தெரிந்தது. அவனை அடிக்கடி அங்கே பார்த்திருக்கிருள். அக்கம் பக்கத்துப் பையனுகத்தான் இருக்கவேண்டும். என்னவோ புத்திப் பிசகு! ஒரு சிம்ணி வாங்கித் தரும்படி சிறு நறுக்கெழுதி அவனிடம் போட்டாள். அவ்வளவுதான்; அது பெரிய அனர்த்தமாய்ப் போய்விட்டது. மாமி எங்கேயிருந்து அதைப் பார்த்தாளோ, தெரியவில்லை.

"என்னடி, என்ன? காகிதப் போக்கு வரத்தெல்லாம் நடக்கிறதா? போதும்; போதும். மானமாய்

இருக்கிற குடும்பத்துக்கு, இந்த அபக்யாதி எல்லாம் வேண்டாம். உங்கள் அப்பன் வீட்டிலே கொட்டிக் கிடக்கலாம். புகுந்த வீட்டிலே அதற்காக ஒழுக்கங் கெட்டு நடத்தை கெட்டு நடக்கக்கூடாது. உன் இஷ்டப்படி யெல்லாம் நடக்க உன் வீட்டுக்கே போய்விடு" என்று ஒரேயடியாகக் கர்ஜித்தாள்.

"இல்லை, மாமி. இல்லை, மாமி. சிம்ணி உடைந்து போச்சு..." என்று இவள் வீரிட்டுக் கெஞ்சிக் கதறினாள்.

"சரிதானடி, நீலி. உன் முகாலோபனம் பண்ண முடியாது இனிமேல். அவன் ஆபீஸிலிருந்து வரட்டும். முதல் காரியமாக உன்னை வண்டியேற்றி ஊருக்கு அனுப்பச் சொல்லுகிறேன். இல்லை; அவனுக்கு உன் போக்கெல்லாம் சம்மதம் என்றால், நீயும் அவனும் சுகமாகத் தனிக் குடித்தனம் பண்ணிக்கொண்டிருங்கள். அவ்வளவுதான்."

"இல்லை, மாமி. இல்லை, மாமி. இல்லை, மாமி."

மாமி அதைக் காதில் போட்டுக்கொள்ளவேயில்லை.

அம்மா எடுத்துப் போட்ட துரும்பைத் தாண்ட மாட்டான் மகன் ராஜம். குமுதத்தை ஒரு வார்த்தையும் கேளாமல் ஊருக்குத் துரத்திவிட்டான்.

இந்த விவரத்தைக் கேட்ட தோழி கங்கா குறும்புத்தனமாகச் சிரித்துக் கண்ணடித்துக்கொண்டே, "ஓஹோ! சுண்ணும்பிலே இருக்கிறது சூட்சுமம். வயசுப் பெண்ணுக்கு...இஸ்ஸ்ஸ்..." என்று சொல்லிச் சூள் கொட்டினாள்.

"அடி கங்கா, நீயுமா அப்படிச் சந்தேகிக்கிறாய்? தெய்வ சாட்சியாய்ச் சொல்லுகிறேன்: என் மனத்தில் ஒரு கல்மஷமும் நினைக்கவில்லை. தெரியாத்தனமாகச்

செய்த தப்பு அது. அந்தப் பையனின் முகத்தைக்கூட நான் சரியாகப் பார்த்ததில்லை..." என்று சொல்லும் போதே, குமுதத்தின் கண்களிலிருந்து பொல பொல என்று முத்துப்போல் நீர் சொரிந்துவிட்டது.

"போடி, அசடே! உன்னைத் தெரியாதா எனக்கு? வேடிக்கைக்குச் சொன்னால், நிஜம் என்று நம்பி வருத் தப்படுகிருயே! நீ பத்தரை மாற்றுத் தங்கம். நீயே நெறி பிசகினல், அப்புறம் அருந்ததியைக்கூட நம்ப முடியாது. உன் மாமி ஓர் அசடு; உன் புருஷன் செய் தது மடத்தனம். ஒன்று, அவன் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாக வேண்டும்; அல்லது திருந்த வேண்டும். பார், அவனை நான் என்ன செய்கிறேன் என்று."

"ஐயோ! என்னடி செய்யப் போகிருய்? என்ருவது விடியுமோ என்று இன்னும் நம்பிக்கொண்டிருக்கிறேன். அதைக் கெடுத்து விடாதே."

கங்கா சிரித்தாள். "என்ன செய்யப் போகிறேன் என்ரு கேட்கிருய்? மந்திரம் செய்யப் போகிறேன். அப்புறம் பாரேன்" என்ருள்.

இப்போதும் இதோ அந்தக் கங்காதான் சிரித்துக் கொண்டே எதிரே வந்தாள். "என்னடி இது? குட முங் கையுமாய் இன்றுங்கூட இந்த நேரத்தில் இப்படிப் பழம்புடைவை யுடுத்து அலைகிருய்! அடி ஒரு நாள் கிழமைதான் வேண்டாம். சந்தோஷமான நேரத்திலே கூட, வாரி முடிக்காமல் பரட்டைத் தலையுடன இருக்க வேண்டும்?" என்று அவள் குமுதத்தைக் கேட்டாள்.

"எனக்கென்ன அப்படிப் புதிய சந்தோஷம் வந்தது?"

"புதிய சந்தோஷமா வேண்டும்? பழைய சந்தோ ஷம் திரும்பினல் போதாதா?"

"என்னவோ புதிர் மாதிரி பேசுகிருயே; என்ன தான் சொல்லுகிருய்?"

"ஒன்றுமில்லே. உன் கணவர் வந்துவிட்டார்."

குமுதத்துக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவள் உள்ளத்திலே கூச்சமும் ஏக்கமும், களிப்பும் சந்தேகமும் கலந்த ஒரு பரபரப்பு உண்டாயிற்று.

"என்ன கேலி இது, கங்கா?" என்ருள்.

"கேலி இல்லேயடி. இப்போது உன் வீட்டிலிருந்து வருகிறேன். மாப்பிள்ளேக்கு வழி தெரிந்ததா என்று அவரைக் கேட்டுவிட்டும் வருகிறேன். அந்நிய ஆணுடன் பேசவாவது என்கிருயா? உன் மாமிபோல் அல்ல என் மாமி. மடியிலே கனம் இருந்தால் வழியிலே பயம். எனக்கென்னடி வந்தது!"

"கங்கா, நிஜமா?"

"நிஜம்."

"அவர் என்ன சொன்ஞர்?"

"தலேயைத் தொங்கப் போட்டுக் கொண்டார்."

குமுதத்துக்கு நம்பிக்கை வரவில்லே. என்ருலும், ஆசை மனத்தைப் பிடித்து உந்தியது. ஓடிப்போய்க் கணவனேப் பார்க்க விரும்பினுள். ஆனுல், கால் அதற்கு இணங்கினுல்தானே. அது இந்த நேரம் பார்த்துத் தெம்பிழந்து தள்ளாடியது. மெல்ல மெல்ல நடந்தாள். வீட்டை அடைந்தாள்.

உண்மை; கங்கா சொன்னது உண்மை! கணவன் ராஜம் அவள் வீட்டுத் திண்ணேயிலே உட்கார்ந்திருந் தான்.

என்ன சொல்லுவது அவரிடம் என்று அவளுக்குத் தோன்றவில்லை. சற்றுத் தியங்கித் தியங்கி நின்றாள். பிறகு, பேசாமலே, பேச நா எழாமலே, மெல்ல உள்ளே நிலைப்படியிலே அடி எடுத்து வைத்தாள்.

"என்ன குமுதம்? பேசக்கூடாதா?" என்றான் ராஜம்.

குமுதம் அப்படியே திரும்பி நின்று, நிமிர்ந்து ராஜத்தின் முகத்தைப் பார்த்தாள். அந்த விழியிலே ஒளி நிறைந்திருந்தது.

"ஏன் திண்ணையிலே உட்கார்ந்திருக்கிறீர்கள்? உள்ளே வாருங்கள். அம்மா, அப்பா யாரும் பார்க்க வில்லையா?"

"இல்லை...வருகிறேன்......" என்று ஏதோ இழுத் தாற்போல் சொல்லிக்கொண்டே எழுந்திருந்தான் ராஜம்.

பிறகு, சட்டென்று குமுதத்தின் அருகே வந்து, அவளுடைய இரண்டு கன்னங்களையும் தன் கைகளால் பிடித்துக்கொண்டு தன் முகத்துக்கு நேரே திருப்பி, "என் மூடத்தனத்தை மறந்துவிடு. அம்மாவும் இப்போது மனம் மாறிவிட்டாள். நாளைக்கே என்னோடு நீ வர வேண்டும். என்னைவிட அம்மாதான் உன்னை உடனே பார்க்க வேண்டுமென்று துடிக்கிறாள். வருகிறாயா?" என்றான்.

"ஆகட்டும்" என்றாள் குமுதம்.

"அதிருக்கட்டும், குமுதா. சற்று முன் இங்கே வந்தாளே ஒரு குறும்புக்காரப் பெண். அவள்தான் உன் தோழி கங்காவா?"

"ஆமாம். அவள் பெயர் எப்படி உங்களுக்குத் தெரிந்தது ?"

ராஜம், "அதுவா.? அது அவள் கடிதத்திலிருந்து. அவள் கடிதந்தான் எனக்குக் கண் திறந்துவிட்டது. என் மனத்தை மட்டும் அல்ல; அம்மாவின் மனத்தையும் அது உருக்கிவிட்டது" என்ருன்.

"கங்கா, கங்கா, இதுதான் உன் மந்திரமா ?" என்று கனிவுடன் முணு முணுத்துக்கொண்டே நகர்ந்தாள் குமுதம்.

அந்தப் புஸ்தகம்

கோடாநு கோடி மைல்களுக்கு அப்பால் கோடாநு கோடி நட்சத்திரங்கள் இருப்பதால், தெய்வம் இருக் கத்தான் வேண்டும் என்று வக்கீல் சபேசன் நினைத்தார். உடனே அவருக்கு நகைப்பு வந்தது. கண் எதிரே ஒரு புல் பத்தை நிற்பது மட்டும் தெய்வ உண்மையைச் சுட்டிக் காட்ட வில்லையா ? சபேசனுடைய ' நான் ' என்ற உணர்ச்சிக்கு எதிராக எத்தனை கோடி கோடிப் பொருள்களும் ஜீவன்களும் கணக்கிலடங்காக் காலமும் வெளியும் இருக்கின்றன ! சபேசன் ஒரு நாள் பிறந்தார் ; சில காலம் வாழ்ந்தார் ; இன்று வாழ்கிறார் ; இன்னொரு நாள் சாகப்போகிறார். இது நிச்சயம். ஆனால், இந்தப் பரந்த பிரபஞ்சம் அவருக்கு முன்னும் பின்னும் நிலை பெற்றிருக்கும் விந்தையை எண்ணும்போது, ஏதோ தெய்வம் இருக்கத்தான் வேண்டும் என்று தோன்று கிறது.

ஏதோ என்ன ? இதோ அவர் மனைவி அவருடைய புஸ்தகங்கள் சிலவற்றையும் ஸ்தோத்திரப் புஸ்தகங்கள் சிலவற்றையும் பூஜைக்கு அடுக்கி வைக்கிறாளே, இதி லும் தெய்வம் இருக்கத்தான் வேண்டும். யாரோ நினைத் துச் சொன்ன பொருளெல்லாம், அவர்கள் மாய்ந்த

பின்னும் இங்கே ஞானமயமாக விளங்குவது தெய்வ விந்தைதானே !

வக்கீல் சபேசனுக்குத் திடீரென்று இப்படி ஞானேதயம் ஏற்பட்டு விட வில்லை. பால்ய வயதிலே அவருக்குப் பரம சந்தேகம். 'தெய்வமாவது, மண்ணுவது !' என்று சொல்லுவார். தெய்வம் என்று யார், எதைச் சொல்லுகிருர்கள் ? ஏன் சொல்லுகிருர்கள் ? இவை பற்றியெல்லாம் அவர் அப்போது சிந்தித்ததே கிடையாது. பெரும்பாலான மக்களுக்குத் தெய்வம் என்பது கிளிப்பிள்ளைப் பாடம் ; சபேசனுக்கு நாஸ்திகம் என்பது கிளிப்பிள்ளைப் பாடம். அவர் அன்றிருந்த நிலை அவ்வளவே.

இளமையில் அவருக்கிருந்த அகங்காரம், ஆத்திரம், ஆசை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மங்கி விட்டன. அப்போதிருந்த சபேசனு இப்போதிருப்பவர் ? அன்று சீறிச் சுழன்ருடிய நாகமாயிருந்த அவர், இன்று பெட்டிப் பாம்பாகி விட்டார். ஒவ்வொரு கணமும் மெள்ள மெள்ளக் கிட்டக் கிட்ட நெருங்கிவரும் எமனை உணர்ந்த அவர், அவனை நிம்மதியாய் வரவேற்க மனம் பண்பட்டு விட்டார். எமபயம் போனபின், உலகத்திலே எல்லாம் அவருக்குத் துச்சமாகி விட்டன.

இன்று சரஸ்வதி பூஜை. இப்போது பழைய ஞாபகங்களெல்லாம் அவருக்கு வருகின்றன. எவ்வளவு மூடத்தனம்! பழைய கால வாழ்வைப்பற்றி நினைக்கும் போது...? நினைத்த தெல்லாம் மூடத்தனம் ! சொன்ன தெல்லாம் மூடத்தனம் ! செய்ததெல்லாம் மூடத்தனம் ! ஆனுல் அவற்றைப்பற்றி யெல்லாம் அவருக்கு இப்போது வருத்தம் வரவில்லை ; சிரிப்புத்தான் வந்தது. தம் செயல் எல்லாம் தம் செயல் அல்ல போல் அவருக்குத் தோன்றின. அன்று இருந்த சபேசனே இன்று

இல்லை. ஆனால், அந்தப் பழைய நிகழ்ச்சிகள் பற்றிய ஞாபகம் மட்டும் இருக்கிறது. ஞாபகந்தான் என்ன? பிறந்தது முதல் ஒவ்வொரு கணமும் நிகழ்ந்ததனைத்தும் அவருக்கு ஞாபகம் வருகிறதா? செய்தது போய்விட்டது; சொல்லியது போய்விட்டது; நினைத்தது போய்விட்டது. அவர் மட்டுமே மிச்சம்! அதுவும் இந்த ஒரே கணம் யுகசந்தி போல அவருக்குத் தெரிகிறது. முன்னும் பின்னும் உணர்வில் இல்லை. என்ன வேடிக்கை!

"தாத்தா, நீ பூஜை செய்யப் போவதில்லையா? வெந்நீர் போட்டாச்சு, ஸ்நாநம் பண்ணேன்!"

பேத்தி அமுதவல்லியின் மழலைக் குரல் அவர் காதில் விழுந்தது. அவரை யறியாத ஆனந்தப் பரபரப்பு ஒன்று அவர் உள்ளத்திலே எழுந்தது.

அவருடைய பாலியத்திலே யாராவது அவரிடம் இப்படிச் சொல்லத் துணிவார்களா? மனைவி, மக்கள், உற்றார், உறவினர் அத்தனை பேரும் அவரிடம் பேச நடுங்குவார்கள்.

இருபது வயதிலே அவருக்குக் கலியாணமாகி விட்டது. இருபத்தோராவது வயதில் அவர் வீட்டுக்கு அவள் வந்து விட்டாள். வந்தது முதல் சில வருஷ காலம் அவளுக்கு ஒரே உதைதான். அவள் செய்ததெல்லாம் அவருக்கு இடைஞ்சலாகத் தோன்றின. அவள் அவரிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று அவர் விரும்பினார்? அது அவருக்கே தெரியாது. எதிரே வந்து அவள் நின்றாலும் கோபம்; எட்டிப் போனாலும் கோபம். படித்தாலும் கோபம்; படிக்கா விட்டாலும் கோபம். பாடினாலும் கோபம்; பாடாவிட்டாலும் கோபம். அத்தனைக்கும் அவளா காரணம்?

அவளிடம் மாத்திரமா அவர் இப்படி நடந்துகொண்டார்? உலகத்தில் உள்ள சகல ஜீவன்களும், சகல பொருள்களுமே அவருக்கு இடையூறே புரியும் சத்ருக்கள் என்பதுபோல அவர் நடந்துகொண்டார்.

அவர் ஒரு கோம்பை நாய்க்குட்டி வளர்த்தார். ஒரு நாள் மாலையில் உலாத்துவதற்கு அதைச் சங்கிலி போட்டுப் பிடித்துக்கொண்டு போக விரும்பினார். அது சண்டித்தனம் செய்தது. வந்தது கோபம். பளார், பளார், பளார் என்று அதற்குப் பல அறைகள் கொடுத்தார். சங்கிலியை அவிழ்த்து அதை வாசலிலே உதைத்துத் தள்ளினார். அன்று வெளியே ஓடிப்போன அது எட்டு நாள் கழித்துத்தான் வீட்டுக்கு வந்தது. ஐயோ பாவம்! எப்படி வந்தது? அதை இன்று நினைத்தாலும், அவர் உள்ளம் பதைக்கிறது! நாய்க் குட்டியின் வாயிலே எவனோ பாவி அரிவாளை வீசியிருக்கிறான். வாயில் ஒரு பகுதி, சீவிய பென்ஸிலைப்போல் சரிந்து, பல் வரிசையைக் காட்டியது. ஏதோ பயிர்ப்புலத்தில் நுழைந்துதான் இந்தக் கதி அடைந்திருக்கிறது! சோளக் கொல்லையில் பால் கொண்டைகளைக் கடித்துத் தின்பதிலே நாய்களுக்கு எவ்வளவு ஆசை! அப்படித்தான் ஏதோ செய்து, அந்தக் குட்டி இந்தத் தண்டனை பெற்றிருக்கவேண்டும். அதன் வாய்க் காயத்தில் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. சபேசனைக் கண்டதும் வாலைக் குழைத்து, 'ஊள், ஊள்' என்று ஓலமிட்டுப் பயத்துடன் அது சமீபித்தது. அவருக்கு மகா பரிதாபமாயிருந்தது. இருதயத்திலே ஒரு வேதனை உண்டாயிற்று. ஆனால், அதே சமயம் அதனிடம் அவருக்கு ஓர் அருவருப்பும் ஏற்பட்டது. "இந்தா, இந்த மூதேவியை விரட்டு. கண்காணாத எங்கேயாவது கொண்டுபோய்த் தொலைத்து முழுகிவிட்டு வா" என்று

வேலைக்காரச் சின்னப் பயலுக்குக் கட்டளை யிட்டுவிட்டு, கச்சேரிக்குப் புறப்பட ஆயத்தம் செய்தார்.

சனியன்! அந்தப் பேனா என்ன அக்கிரமம் செய்கிறது! அது இந்தச் சமயம் பார்த்து எங்கேயோ ஒளிந்து கொண்டது. அதற்குக்கூடப் பயம்போல் இருக்கிறது. தேடித்தேடிச் சலித்த சமயத்தில், அவர் அணிந்திருந்த சட்டை ஜேபிக்குள் இருந்தே அது அகப்பட்டது. இத்தனை நாழிகையும் ஏமாற்றிய அதன் மென்னியை ஒரே முரியாய் முரித்துவிடலாம் போலிருந்தது அவருக்கு. பிறகு எப்படியோ புறப்பட்டுக் கச்சேரிக்குப் போய்ச் சேர்ந்தார்.

மாலையிலே திரும்பி வந்ததும், நாயைப் பற்றிச் சிறிது ஆதங்கத்துடன் சின்னப் பயலை விசாரித்தார். "எங்கேயடா கொண்டுபோய் விட்டாய்? சோறு தண்ணீருக்கு எங்கே எப்படித் தவிக்கிறதோ?" என்றார்.

"அதைத் துரத்தவில்லை. வெட்டரினரி ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் விட்டிருக்கிறேன்" என்றான் வேலையாள்.

எஜமானருக்கு இதைக் கேட்டதுமே வந்துவிட்டது ஆக்ரோஷம். நாயிடம் இருந்த ஆதங்கமெல்லாம்பறந்தது.

"அடே கழுதை! உன்னை யாரடா அங்கே கொண்டு போய் விடச் சொன்னது? உங்களப்பன் பணம் கொடுப்பானா? உன் சம்பளத்தில்தான் பிடிக்கப்போகிறேன்" என்று உறுமினார்.

சின்னப்பயல் வாய்திறக்கவில்லை. அம்மாள் சொன்னாள் என்றால், அம்மாளுக்கும் பூசை விழும்; அவனுக்கும் பூசை விழும். இப்படித்தான் சம்பளத்தைப் பிடிக்கிறேன் என்பார். பிடிக்கமாட்டார்; கொடுத்துவிடுவார்.

அவர் கொடுக்காவிட்டால்தான் என்ன? அம்மாள் கொடுத்து விடுவாள். ஆனால், அவர் இதோடு விட வில்லை.

"ஏ நாயே, ஏன் பேசாமல் இருக்கிறாய்? அம்மாளா சொன்னாள்?" என்று கேட்டார்.

'ஆம்' என்றோ 'இல்லை' என்றோ தெரியாத விதத்தில் அவன் தலையை அசைத்தான்.

"சரி; இனி அவளும் இந்த வீட்டில் இருக்கக் கூடாது; நீயும் இந்த வீட்டில் இருக்கக் கூடாது. கிளப்புக்குப் போய்விட்டு நான் திரும்பி வருவதற்குள், நீ அவளை இழுத்துக்கொண்டு எங்கேயாவது போய்விடு" என்று சொல்லி வெளியே கிளம்பிவிட்டார் சபேசன்.

அவருக்குக் கோபம் வந்தால், 'இன்ன வார்த்தைதான் சொல்லலாம்; இன்னது சொல்லக்கூடாது' என்பதே கிடையாது.

நல்ல வேளையாக அந்தச் சம்பவம் இதோடு முடிந்தது. ஏன்? இதைவிட மோசமான வேறு எத்தனையோ விபரீத சம்பவங்கள் அவருடைய வாழ்க்கையில் நடந்திருக்கின்றன. அத்தனையும் நல்ல விதமாகத்தான் முடிந்தன.

ஒரு சமயம் கிராமத்தில் அவரும் அவருடைய மைத்துனனும் இன்னும் சிலரும் சீட்டாடிக் கொண்டிருந்தார்கள். மைத்துனனும் மகா கோபிஷ்டிதான். ஆனால், தமக்கையை உத்தேசித்துச் சபேசனிடம் மட்டும் மகா ஜாக்கிரதையாக நடந்து கொள்வான். அப்படிப்பட்டவனே என்னவோ சற்று அசதி மறதியாக, "எந்த மூடனுங்கூட இப்படி இஸ்பேட் ஒன்பதாம் பந்தைப் போட்டிருக்க மாட்டான்" என்று சொல்லிவிட்டான். போச்சு!

அப்படியே துள்ளி யெழுந்தார், சபேசன். மைத்துனனின் கன்னத்திலே விட்டார் ஓர் அறை. அவன் மட்டும் விடுவானே? வாசலிலே சாந்து அறைப்பதற்காகக் கிடந்த கல் உரல் குழவியை எடுத்து உயர்த்தி ஓங்கிக் கொண்டு, சபேசனைத் துரத்தினன். அவன் ஓட இவர் ஓட இரண்டுபேரும் பக்கத்து டவுனுக்குள் ஓடிவிட்டார்கள். அங்கே போய் இரண்டு பேரும் ஒரே காபி ஓட்டலில் நுழைந்து காபி சாப்பிட்ட பின்புதான் இரண்டு பேரின் வேகமும் குறைந்தது.

வேகந்தான் குறைந்தது; சபேசனின் கோபம் தீரவில்லை. அன்றைக்கு மறுநாளும் சரஸ்வதி பூஜைதான். வேட்டகத்தில் இனி ஒரு கணமும் தங்குவதில்லை என்று தீர்மானித்தார். மூர்த்தன்யமாக வண்டியைக் கட்டிக் கொண்டு, மனைவியை அழைத்துக்கொண்டு, பத்து மைல் தூரத்தில் உள்ள தம் வீட்டுக்கு இரவோடு இரவாக வந்து சேர்ந்தார்.

பூஜை புரஸ்காரமெல்லாம் அவர் செய்யும் வழக்கமில்லை. மனைவி மிகவும் பக்தியுடையவள். சபேசன் வழக்கப்படி காலையில் உலாத்தப் போயிருக்கும்போது, சில புஸ்தகங்களை எடுத்து அடுக்கத் தயார் செய்து கொண்டிருந்தாள். அவள் தம்பி கொடுத்த ஒரு ஸ்தோத்திரப் புஸ்தகம் என்னவோ தவறிப்போய், சபேசனின் மேஜை மேல் அப்போது தங்கிவிட்டது.

சபேசன் திரும்பி வந்து மின்சார விசிறியின் காற்றை வாங்கிக்கொண்டு, 'உஸ்ஸ்ஸ்' என்று தம் நாற்காலியில் உட்கார்ந்தார். அப்போது அந்தப் புதிய புஸ்தகம் அவர் கண்ணிலே தென்பட்டது. "இதென்ன புஸ்தகம்?" என்று சொல்லிக் கொண்டே அதன் முதல் பக்கத்தைப் புரட்டியபோது, "கிருஷ்ணன்" என்ற

பெயர் தென்பட்டது. அவருடைய மைத்துனனின் பெயர்தான். ரௌத்திராகாரமான கோபம் வந்தது அவருக்கு.

அப்புறம் கேட்க வேண்டுமா ? வண்டி, மாடு, மோட்டார் பைக் எது சண்டித்தனம் செய்தாலும் கையில் எது அகப்பட்டதோ அதைக் கொண்டு அடி அடி என்று அடித்து நொறுக்கிவிடுவது அவர் வழக்கம். பெட்ரோல் அடைத்துக் கொண்டு அவருடைய மோட்டார் பைக் ஒரு சமயம் நடு ரோட்டிலே நின்று விட்டபோது, அதை அவர் கால் ஜோட்டைக் கழற்றிக் கொண்டு அடித்த அடியைக் கண்டு, வழிப்போக்க ரெல்லாம் அவரை எவனோ பைத்தியமென்றே நினைத்துவிட்டார்கள்.

மைத்துனனின் புஸ்தகம்! முதல்நாள் கல்லுரல் குழவியைத் தூக்கிக் கொண்டு அவரை அடிக்க வந்தானே அவன் புஸ்தகம்! அதை எடுத்துத் தரையிலே வீசி எறிந்தார். ஸ்டாண்டில் மாட்டியிருந்த கைப் பிரம்பை எடுத்தார். புஸ்தகத்தை அடி அடி என்று அடித்துத் தள்ளிவிட்டார்.

அன்று தினம் பக்கத்துக் கதவருகே மனைவி நின்று, கையைப் பிசைந்துகொண்டு வாய்பேசாமல் கண்ணீர் விட்ட காட்சி இன்று சபேசனுக்கு ஞாபகம் வந்தது. அவளுக்கு அது இப்போது எங்கே ஞாபகம் இருக்கப் போகிறது !

"தாத்தா, ஸ்நாநம் பண்ணவில்லையா ?" என்று ஐந்து வயது அமுதவல்லி மறுபடியும் கேட்டாள்.

"இந்தாடி, தாத்தாவைத் தொல்லை செய்யாதே. அவர் பூஜை செய்யமாட்டார். அவர் சகலகலா வல்லவர். அவருக்குச் சரஸ்வதி பூஜை கிடையாது" என்று சபேசனின் மனைவி சிரித்துக்கொண்டே சொன்னாள்.

இப்போதெல்லாம் இந்த மாதிரி பேசும் துணிச்சல் அவளுக்கு வந்துவிட்டது. அவள் என்ன பேசினுலும் திட்டினுலுங்கூடத்தான் - வாய்பேசாமல் வாங்கிக் கட்டிக் கொள்ளும் பொறுமை சபேசனுக்கும் வந்துவிட்டது.

“தாத்தா பூஜை செய்யமாட்டாரா? அப்படியாளுல் பட்சணம், பாயசம் எல்லாம் சாப்பிடமாட்டாரோ?” என்று கேட்டாள் குழந்தை.

பட்சணம், பாயசம், சரஸ்வதி பூஜை....ஒன்றுக் கொன்று குழந்தையின் மனத்திலே எவ்வளவு சம்பந்தம் ஏற்பட்டுவிட்டது!

சபேசனின் மனைவி சிரித்தாள். “கேட்டீர்களா அப்பா உங்கள் பேத்தியின் பேச்சை?” என்று கேட்டாள் மகள் புஷ்பம்மாள்.

“அவள் கேட்பது நியாயம்” என்று, சிரிக்காமலே அவர் சொன்னுர்.

“இந்தா, புஷ்பா. வெந்நீர் சுட்டுவிட்டதா?” என்று அவர் கேட்டார்.

“கொதிக்கிறது.”

சபேசன் ஸ்நாநம் செய்தார். மடி உடுத்தினுர். நெற்றிக்கு அணிந்தார். புஸ்தக அடுக்கின் பக்கத்திலே வந்தார். “நானும் பூஜை செய்யப்போகிறேன்” என்ருர்.

முந்தியே மனைவி, மகள், குழந்தை எல்லாரும் பூஜை செய்துவிட்டார்கள். அத்தி பூத்தாற்போலச் சபேசன் பூஜை செய்யப்போவதை யார் கண்டார்கள்?

“இதென்ன அதிசயம்!” என்று கேட்டாள் மனைவி.

"அதிசயந்தான். என்ன என்ன புஸ்தகங்கள் வைத்திருக்கிறாய்? என் புஸ்தகங்களில் எவையாவது இருக்கின்றனவோ?" என்று கேட்டுக்கொண்டே புஸ்தகங்களை உற்றுப் பார்த்தார் சபேசன்.

புஸ்தக அடுக்கிலே அந்தப் புஸ்தகம் தென்பட்டது. மனைவிக்கு மைத்துனன் கொடுத்த புஸ்தகம்; அவரிடம் பிரம்படிபட்ட புஸ்தகம்; சகல கலாவல்லி மாலை!

சந்தனம், புஷ்பம், அட்சதைகளை எடுத்துப் போடப் போகும்போது, அவர் கை நடுங்கியது. சபேசன் கண்ணை மூடிக்கொண்டார். "என்ன மூடத்தனம்! என்ன மூடத்தனம்!" என்று வாய்க்குள்ளே முணுமுணுத்துக் கொண்டார்.

பூஜை முடிந்தது. சாப்பிட மகளும் பேத்தியும் தாமுமாக உட்கார்ந்தார்.

"தாத்தா, நீங்கள் பூஜை செய்யும்போது, சுவரில் இருந்த சரஸ்வதி என்ன செய்தாள் தெரியுமா?" என்று குழந்தை கேட்டாள்.

"என்ன செய்தாள், கண்ணு?"

"கீழே இறங்கினாள். கையிலே வைத்திருந்த புஸ்தகத்தினால் உங்கள் முதுகிலே அடி அடி என்று அடித்தாள்..."

சபேசன் திடுக்கிட்டார்.

'இப்படியும் ஒரு குழந்தை பேசுமோ? இது தெய்வ சக்திதான் போலிருக்கிறது!' என்று எண்ணினார். "'எங்கள் தாத்தாவை அடிக்காதே, தேவி. தாத்தா எங்களுக்கு வேண்டும்' என்று நான் கெஞ்சிய பிறகுதான் உங்களை விட்டாள்" என்றாள் அமுதம்.

"இந்தாடி அசடு. உளறுதே" என்றாள் சிரித்துக் கொண்டே சபேசனின் மனைவி.

என்றோ ஒரு நாள் "சரஸ்வதியைத் தாத்தா அடித் தார்" என்று மகள் புஷ்பா ஒரு வேளை குழந்தையிடம் சொல்லியிருக்கக்கூடுமோ, என்னவோ? அதன் பலனா கவே குழந்தைக்கு இந்தக் கற்பனை ஏற்பட்டிருக்கலாம். ஆனால் சபேசனுக்கு அப்படித் தோன்றவேயில்லை. தேவி தர்சனம் குழந்தைக்குக் கிட்டியது, தமக்குக் கிட்டவில்லை என்றுதான் அவர் நினைத்தார். அன்று மாலை யெல்லாம் கண்ணீர் மல்க, சகலகலாவல்லி ஸ்தோத்திரத்தை உருப் போட்டுக்கொண்டே யிருந்தார். அவர் மனத்திலே யிருந்த பழைய மூடத்தனச் சுமையெல்லாம் பறந்தது.

"ஆம்; தெய்வம் உண்டு. நிச்சயமாய் உண்டு. வேறு எதிலே இருந்தாலும் இல்லாவிட்டாலும், வாக் கிலே, சொல்லிலே, சொல்லின் ஒலி நுணுக்கத்திலே உண்டு" என்று ஜபித்தபடி உறங்கிவிட்டார். மறு நாள் காலையில் எழுந்தபோது, உலகமே ஒரு புதிய ஒளி பெற்றுத் துலங்கியதை அவர் கண்டார்.

மாய ஜாலம்

இது இட்டுக் கட்டிய கதை அல்ல; நிஜக் கதை. நிஜமாக இருந்தாலும் அப்பட்டமாகச் சொல்லலாமா? சொன்னுல் ருசிக்குமா? ருசிக்காது. இங்கே கொஞ்சம் நகாசு, அங்கே கொஞ்சம் நகாசு செய்யவேண்டும். செய்தால்தான் ருசிக்கும். பச்சையாகச் சொன்னுல், நிஜத்திலே பொய் கணக்காகக் கலக்க வேண்டும். அதுதான் சுகம். தனி நிஜம் சப்பென்று இருக்கும்; தனிப் பொய் வெறுப்பைத் தரும். நிஜத்திலே பொய் கணக்காகச் சேரட்டும்; உப்பும் புளியும் சேர்ந்ததுபோல் 'ஜம்' என்று இருக்கும்.

இது நடந்து எத்தனையோ வருஷம் ஆச்சு. சின்னச் சின்ன விவரம் எல்லாம் எனக்கு ஞாபகம் இல்லை. அவற்றை நான் இட்டு நிரப்ப வேண்டாமா? அதற்காகவும் நகாசு செய்ய வேண்டியிருக்கிறது.

அப்போது நான் ஒரு வாரப் பத்திரிகை ஆபீஸில் வேலை பார்த்தேன். துணையாசிரியன் வேலை.

ஆபீஸில் மேலண்டைச் சுவர் ஓரம் ஒரே வரிசையாக எங்கள் நாற்காலிகள் கிடந்தன.

தென்னண்டைக் கோடியில் குமாஸ்தா; அடுத்தாற்போல் மானேஜர்; பிறகு ஆசிரியர், நான், எனக்கு

அடுத்த உதவி ஆசிரியர். இந்தக் கிரமத்தில் நாற்காலி கள் போட்டிருந்தன. ஓ! இரண்டை மறந்து விட்டேனே! ஆசிரியருக்கு இரண்டு பக்கத்திலும் 'பாடி கார்டு' போல இரண்டு உருப்படிகள் உண்டு: தென்னண்டைப் பக்கம் ஒரு பெரிய தட்டி; வடவண்டைப் பக்கம் ஒரு சாய்மான நாற்காலி.

ஆசிரியரின் சாமான்கள் எல்லாம் வெகு சுத்தமாகவும் இருக்கும்; உயர்ந்த ரகமாகவும் இருக்கும். அவருடைய நாற்காலி சுழலும். மேஜைக்கு ஆறு டிராயர்கள் உண்டு. மேஜைமேல் இருந்த விசிறி மண்ணெண்ணெயால் ஓடும். அந்த ஊரில் அப்போது பைக்காரா மின்சாரம் வரவில்லை; அதனால்தான் இந்த எண்ணெய் விசிறி. இது காற்றைக் குளுகுளு என்று வீசாது; திகுதிகு என்று வீசும்: அனல் காற்று! ஆசிரியருக்கு நேர் எதிரே, கீழண்டைச் சுவரில் ஒரு பெரிய நிலைக் கண்ணாடி மாட்டியிருக்கும். அவருடைய மேஜை டிராயர் ஒன்றில் வாசனைத் தைலம், தந்தச் சீப்பு, ஸெண்ட் எல்லாம் ஒரு ஸெட் எப்போதும் இருக்கும்.

ஆசிரியர் ஆபீஸுக்கு வந்தாரோ இல்லையோ, நாற்காலியில் உட்காருவார்; ஒரு சுழல் சுழலுவார். பிறகு, அந்தக் கண்ணாடிக்குப் பல்லைக் காட்டுவார். கேலியாக அல்ல; கண்ணாடியை யாராவது கேலி செய்வார்களா? தம் பல்வரிசை பளபள என்று இருக்க வேண்டும் அவருக்கு. அதற்காகத்தான் கண்ணாடிக்கு அதைத் திறந்து காட்டுவார். அது அதை ஆசிரியருக்கே திருப்பிக் காட்டி விடும். பின்பு, ஆசிரியர் சந்தோஷமாக மறுபடியும் ஒரு சுழல் சுழலுவார். அப்புறம் தலையிலே தைலம் தடவி வாரிக்கொள்வார். வழுக்கைத் தலை; அங்கொன்று இங்கொன்றுதான் மயிர் உண்டு. என்றாலும் வாசனை வேண்

டாமா? தைலம் தடவுவார். தைலம் தடவினுல், வாராமல் சுகப்படாது. வாரிக் கொள்வார். பிறகு கைக்குட்டைக்கு 'ஸெண்ட்' போட்டுக் கொள்வார். இந்தச் சடங்கெல்லாம் முடிந்த பின், வேலையைக் கவனிப்பார்.

ஆசிரியர் ரொம்பவும் நல்லவர். தமிழ் நன்ருகப் படித்தவர். விசால மனம் படைத்தவர். ஆனுல், மெத்தப் பிடிவாதம் உள்ளவர். ஒன்றைப் பிடித்தால் விடமாட்டார். தமக்குத் தெரியாத ஒன்றும் உலகத்தில் இருக்க முடியும் என்று அவர் நினைப்பதேயில்லை. எல்லாம் தெரிந்துவிட்டது போல் மனமயக்கம் கொண்டவர். "கடவுளா? அவர் இல்லவே இல்லை" என்று சாதிப்பார். பிரபஞ்சம் முழுவதும் உள்ளும் புறமும் தேடித் துருவிப் பார்த்துவிட்டவர் போல்தான்! மந்திரம், மாயம் என்ருலே, அவர் நம்பமாட்டார். ஆனுல், எல்லாரிடமும் மிக்க அன்பாக நடந்துகொள்வார்; உண்மையே பேசுவார்; பெருந்தன்மை காட்டுவார்.

எனக்கு ஆசிரியரிடம் அளவற்ற மதிப்பு. ஆனுல், மானேஜரிடந்தான் நெருங்கிய நட்பு. மானேஜர் ஒரு தினுசுப் பேர்வழி. எதைக் கண்டாலும் கிண்டல் செய்வார். ஆசிரியரிடம் அன்புள்ளவர்; என்ருலும், மதிப்பு இல்லாதவர். ஆசிரியருக்கு முன்பு பயபக்தி உள்ளவர் போல் பாசாங்கு மட்டும் செய்வார். ஆசிரியர் ஓர் அப்பாவி என்பது மானேஜரின் கருத்து. ஆசிரியரை ஏதாவது நையாண்டி செய்வதில் மானேஜருக்கு ஆசை. சில சமயம் என்னையும் தமக்குத் துணை சேர்த்துக் கொள்வார். சின்னச் சின்ன விஷயங்களில் தினம் ஏதாவது கிண்டல் நடக்கும்.

ஒரு நாள் மானேஜர் ஓர் அருமையான யுக்தியைக் கண்டு பிடித்தார். கண்டு பிடிக்கவாவது! அவர் உட்

கார்ந்த நிலையிலும், நான் உட்கார்ந்த நிலையிலும் அது தானுகவே அவருக்கும் உதயமாயிற்று; எனக்கும் புரிந்தது. அதன் பலனுக,

" இன்று ஆசிரியரைத் திகைக்க வைக்கவேண்டும்" என்ருர் மானேஜர்.

" சரி" என்றேன் நான்.

" நீங்கள்தான் ஆரம்பிக்க வேண்டும். "

" சரி."

" தபால்காரன் வந்ததும். "

" சரி. "

" நான் உட்கை என்று முதலில் தெரிவிக்கவே கூடாது. "

" சரி. "

" மை வேலே, "

" சரி. "

அன்று ஆசிரியர் வந்து நாற்காலியில் உட்கார்ந்தார்; சுழன்ருர்; கண்ணுடிக்குப் பல் காட்டினுர்; தலேக்குத் தைலம் பூசி வாரினுர்; கைக்குட்டைக்கு ஸெண்ட் போட்டுக் கொண்டார்.

பிறகு, என்னேப் பார்த்து, " எனக்கு ஏதாவது வேலே இருக்கிறதா ? " என்று கேட்டார்.

" இல்லே ; தலேயங்கம்கூட நானே எழுதிவிட்டேன். புரூப் எல்லாம் பார்த்து விட்டேன். சற்று நேரத்தில் பத்திரிகையே வந்துவிடும்" என்றேன்.

" அப்படியானுல், இன்று ஜோராய்ச் சீட்டு விளேயாடலாம் " என்ருர்.

“ஆஹா! அது மட்டுமா? நான் இன்று ஒரு மை போட்டுக்கொண்டு வந்திருக்கிறேன். மாயஜால மை. என்ன ஆச்சரியம் போங்கள்! தூரத்தில் உள்ளதையெல்லாம் அந்த மையால் நான் கண்டு சொல்வேன். இது ஒரு தமாஷ் இல்லையா?” என்றேன்.

ஆசிரியர் உதட்டைக் குவித்தார். பிறகு, “என்ன, ஸார்? நீங்களுமா இந்தப் பொய்யை எல்லாம் நம்பு கிறீர்கள்? உங்களை எவனே ஏமாற்றி விட்டான்! ஏதோ மையைக் கொடுத்துப் பணம் பறித்துவிட்டான். பரீட்சித்துப் பார்த்தீர்களா? பலன் இருந்ததா? எப்படி இருக்கும்!” என்ருர்.

“பரீட்சித்தேன். அற்புதமான மை. இதோ உங் களுக்கு முன்னே அதன் திறமையைக் காட்டுகிறேன். மானேஜரோ நம் இருவர் கண்ணுக்கும் தெரியாமல் தட்டிக்கு அப்பால் இருக்கிருர்; இல்லையா? அவர் இப் போது ஒரு சிறிய தப்புச் செய்துவிட்டார். கணக்கில் 8- என்ற எண்ணைப் போடுவதற்குப் பதிலாக 10- என்று போட்டுவிட்டார். அதை அடிக்கிருர். 8- என்று சரியாக எழுதுகிருர்” என்றேன்.

“என்ன, மானேஜர்? நிஜந்தாஞ?” என்று கேட்டார் ஆசிரியர்.

“ஆமாம்.”

ஆசிரியர் நம்பவில்லை. “ஓஹோ நீங்கள் இருவரும் ஏதோ முன்னேற்பாடு செய்துகொண்டு ஏமாற்றுகிறீர் கள். தெரிந்தது; தெரிந்தது” என்ருர் ஆசிரியர்.

“அது கிடக்கட்டும். இதோ தபால்காரன் வரு கிருன்.”

“ஓ! அதுதான் எனக்கே காலடிச் சத்தம் கேட்கிறதே. இந்த நேரத்தில் அவன் வராமல் வேறு யார் வரப்போகிருர் ?”

“பொறுங்கள். இன்னும் சொல்கிறேன். இப்போது தபால்காரன் மணியார்டர்களை எடுக்கிருன். நாலே நாலு மணியார்டர்தான் வந்திருக்கின்றன. மூன்று சந்தா; ஒன்று புத்தக விற்பனை. மொத்தத் தொகை முப்பத்திரண்டு ரூபாய்..” இதை நான் கடகட என்று சொன்னேன்.

“மானேஜர் ஸார், நிஜந்தாஞ ?” என்று விசாரித்தார் ஆசிரியர்.

“அத்தனையும் நிஜம். துளிப் பிசகில்லை” என்று பதில் சொன்ஞர் மானேஜர்.

ஆசிரியருக்கு இன்னும் நம்பிக்கை வரவில்லை. கணக்கைக் கொண்டுவரச் சொன்ஞர்; பார்த்தார். மணியார்டர் கூபன்களைப் பார்த்தார். நான் சொன்னதெல்லாம் சரியாக இருந்தது. ஆசிரியர் மலைத்துப் போஞர். என்னைப் பார்த்து, “எங்கே, அந்த மையைக் கொடுங்கள்; நான் போட்டுப் பார்க்கிறேன்” என்ருர்.

“அது சும்மா பலிக்குமா? மந்திரமெல்லாம் ஜபிக்க வேண்டும்” என்றேன்.

“என்னவோ ஏமாற்றுகிறீர்கள். ஆஞல்...எப்படித்தான் செய்கிறீர்கள் ?...ஏன் ஸார், நிஜமாகவே அப்படி மை உண்டா ?”

“உண்டு, ஸார்; உண்டு.”

“இருக்கலாம். எல்லாம் சில்லறை விஷயம்” என்ருர்.

பிறகு வெகுநேரம் வரைக்கும் அவர் மனத்தை இந்த மை விஷயம் புல்லரித்தது. 'இருக்கலாம்', 'அதெப்படி இருக்கும்?', 'இருக்காது', 'ஏன் இருக்காது?' என்று மாற்றி மாற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார்.

அவருடைய தவிப்பைப் பார்த்து, எனக்கும் மானேஜருக்கும் வெகு குஷி. மானேஜரோ தட்டிக் கப்பால் இருந்தார். அவருக்கு என்ன வந்தது? அவர் சத்தம் போடாமல் வாயைப் பொத்தியபடி சிரித்துக்கொண்டேயிருந்தார். அதை 'மை' உதவியால் கண்ட எனக்கும் சிரிப்பு வந்தது. அடக்கி அடக்கிப் பார்த்தேன். முடியாமல் கடைசியில் நானும் 'கபக்' என்று சிரித்துவிட்டேன்.

"சரி; சரி; சரி. சிரிக்கிறீர்கள். ஏதோ சூது இருக்கிறது. சொன்னால்தான் ஆச்சு" என்றார் ஆசிரியர்.

"ஒன்றுமில்லை. உங்களுக்கு முன்னே சுவரில் இருக்கிறதே பெரிய நிலைக்கண்ணாடி; அதுதான் என் 'மை'. தட்டிக்கு அப்பால் நடக்கிற விஷயத்தையெல்லாம் அதில் நான் காண்கிறேன்" என்றேன்.

"அப்படியா?" என்று கேட்டுக்கொண்டே நிமிர்ந்து கண்ணாடியை அவர் பார்த்தார். "எனக்கு ஒன்றும் தெரியவில்லையே!" என்றார்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்? நேரே இருக்கிற உங்களுக்கு உங்கள் உருவந்தான் அதில் தெரியும். தள்ளி உட்கார்ந்திருக்கும் எனக்கு என் உருவம் தெரியாது; மானேஜர் பக்கமெல்லாம் தெரியும். அவருக்கு அவர் உருவம் தெரியாது; என் பக்கமெல்லாம் தெரியும்" என்றேன்.

ஆசிரியருக்கு இப்போதுகூடப் பூர்ண நம்பிக்கை ஏற்படவில்லை. எழுந்து வந்து என் நாற்காலியில் உட்கார்ந்தார். கண்ணுடியைப் பார்த்தார். திருப்தியுற்றவராக, "ஆமாம் ஸார். ஆமாம் ஸார். இது நல்ல மாய ஜாலம்!'' என்று சொல்லிக்கொண்டே, திரும்பவும் எழுந்து, தம் நாற்காலிக்குப் போனுர். அவர் அறியாத புதிய விஷயமும் ஒன்று உலகத்தில் இருந்திருக்கிறது என்று இப்போது அவர் அறிந்துகொண்டார். ஆனுல், இது ஒரு சில்லறை விஷயம். இன்னுங்கூட இந்த மாதிரி பல சில்லறை விஷயங்கள் அவர் அறியாதவையாகவே இந்த உலகத்தில் - வேறு உலகத்தில் அல்ல - இருக்கலாம். இவை போகப் பல பெரிய விஷயங்கள் உண்டு பாருங்கள், காதல் முதல் கடவுள் வரையில்; அவை அத்தனையும் அவருக்குத் தெரியும். கொஞ்சங்கூட ஐயப்பாடு இல்லாமல், அருமையாக, தெளிவாக - விவாதித்து எதிரி எவனையும் விரட்டி யோட்டி விடக்கூடியபடி - அவை அவருக்குத் தெரியும். இதில் அவருக்கு இன்றும் சந்தேகம் இல்லை, இனியும் சந்தேகம் இல்லை.

பெட்டி வண்டி

இதோ இந்தப் புளிய மரத்தின் கீழே, ஆரங்கள் போன மூளிக் கால்கள், விரிந்து பிளந்த மூக்கணை, கிழிந்த கூண்டு இந்த லட்சணங்களோடு சீந்துவாரற்றுக் கிடக்கிறதே, இந்த வண்டிதான் என்ன என்ன சம்பவங்களை யெல்லாம் ரத்தினசாமிக்கு நினைவூட்டுகிறது! இந்தப் பெட்டி வண்டி - ஆம், இது பெட்டி வண்டிதான்; வில் வண்டி; 'மைனர்' வண்டி. 'மைனர்' என்றால், 'வயசாகாத குட்டி' என்று அர்த்தம் அல்ல. குஷியான பணக்கார வாலிபர்களை 'மைனர்' என்பார்கள் இல்லையா? அந்த மாதிரி மைனர்களுக்குரிய ஒரு வண்டியாகத்தான் இது உருவாயிற்று; விளங்கியது ஒரு காலத்தில்.

இதைப் பார்க்கும்போது, அவள், அந்தக் கோமளமான ரூபவதி - அந்த முகம், கண்ணழகு, அந்தக் கண்மணியிலிருந்து புறப்பட்ட ஒளி - நினைவு வருகிறது. வெறும் நினைவா? வேதனை! வேதனை! ஒரே வேதனை!

ஐயோ! ஏன் இந்த வண்டி இன்னமும் இங்கே கிடக்கிறது? ஏன் அடியோடு அழியவில்லை? இதைச் செய்தவன் போய்விட்டான்; இதன் உரியவர் போய்விட்டார். அவள் போய்விட்டாள். பூமியில் படியும் களங்க

மெல்லாம் மடிந்தோ, மட்கியோ, நீரில் கலந்தோ, காற்றில் பறந்தோ போய்விடுகிறது. அந்தக் களங்கத்திலே - ரத்தினசாமிக்கு நினைவு வரும் களங்கத்திலே - இந்த வண்டியும் அவனுந்தான் மிச்சம். களங்கமா ? சீ ! அப்படி ஒன்று உண்டா ? உண்டானல் அதற்கு நிலைப்பு உண்டா ? ஒன்றுமே அறியாத குருட்டுத் தனத்தோடு தான் எல்லாரும் உலகத்துக்கு - பிரபஞ்சச் சுழலுக்கு - வருகிறோம். எங்கிருந்துதான் வருகிறோமோ ! வருகிறோம் என்றுதான் சொல்ல முடியுமா ? நீரிலே காற்றுப் புக உண்டாகும் நீர்க் குமிழியா மனிதப் பிறவி ? ஒன்றுமே புரியவில்லை. புரிந்தவரோ, புரிந்ததுபோல் பேசுவோரோ சொல்வதையும் நம்ப முடியவில்லை. பிரபஞ்சம் பொய்யா ? மெய்யா ? பொய்யிலே களங்கம் ஒட்டாது. பொய்யே களங்கந்தானே. அதிலே களங்கம் ஒட்டாது, இரண்டறக் கலந்துவிடும். உலகம் மெய்யா ? மெய்க்குக் களங்கமே இல்லை. உலகம் பொய் அல்ல, மெய் அல்ல ; இரண்டும் கலந்த ஒன்று. வெளிப்படத் தெரிவதெல்லாம் பொய் ; உள்ளே மறைந்திருப்பதெல்லாம் மெய்.

ரத்தினசாமிக்கு இப்படியெல்லாம் என்ன என்னவோ வேதனையும் வேதாந்தமுமான சிந்தனைகள், மூளி வண்டியைக் கண்டதும் உண்டாயின. இதன் மேலே கவிந்திருக்கும் புளிய மரங்கூடச் சாக்குச் சாக்காய்ப் பழம் உதிர்த்த காலம் போக, இப்போது நரைத்துத் திரைத்து விறகாகத் தயாராய் மொட்டையிட்டு நிற்கிறது. இதுதான் பிரபஞ்ச விந்தை - அற்புதம் ! இந்தப் புளிய மரத்திலிருந்து உதிரும் பழங்களைக் காலையிலே பலநாள் புன்னகை தவழும் முகத்தோடு அவள் வந்து பொறுக்கிக் கொண்டு போவதை அவன் பார்த்திருக்கிறான். அவனேகூடச் சில சமயம் இப்படிப்

பொறுக்குவதில் அவளுக்கு உதவியிருக்கிறன். அப்போதெல்லாம் பிந்திய சம்பவங்கள் நேரும் என்று அவனுக்குத் துளிக்கூடத் தெரியாது. ஒருவேளை அவளுக்குத் தெரிந்திருக்குமோ? பிந்திய சம்பவங்களுக்கு ஏதுவான எண்ணம் ஏதும் அவள் உள்ளத்திலே அப்போதே எழுந்திருக்குமோ? எப்படி? ஒரு நாளும் இல்லை; சாத்தியமே இல்லை. அது நிச்சயம். தோட்டத்தில் மேயும் பசுவைத் துள்ளித் தொடர்ந்து வரும் கன்றுக்குட்டிபோல, அவளுடைய சிறு மகள் சரசுவும் அவள் சேலை முன்றனையைப் பல்லில் வைத்துக் கடித்தபடி அவளோடு கூடவே வரும் காட்சியைத்தான் மறக்க முடியுமா? அந்தப் பெண் சரசு இப்போது எங்கே எப்படி வாழ்கிறளோ? அது தெரியவில்லை. யாரைக் கேட்டாலும், புலனுகவில்லை. அக்கம்பக்கத்தில் அன்றைக்கு இருந்த எவரையுமே இப்போது காணவில்லை. சுமார் முப்பது வருஷத்துக்குப் பிறகு ஊருக்குத் திரும்பி வந்தால்............? முன்னே பழகிய முகம் ஒன்றைக்கூடக் காண முடியாமல் போய்விட்டது! ஹூம்! இதுதான் உலகம்!

அழகான பொருள் அழியாதா, என்றுமே ஆனந்தம் தருவதால்? தெய்வப் பதுமைபோல் இருந்த அவள் ஏன் அழிந்தாள்? சாலைக்கு அழகு தரும் ஒளி ரதம் போன்ற இந்த வண்டி ஏன் இப்படிச் சிதைந்து கிடக்கிறது? பச்சைப் பசேல் என்று இலையும் பூவுங் காயுமாய் நின்ற இந்தப் புளிய மரங்கூட இப்படிக் கொம்பொடிந்து தறிபட்டு வந்திருப்பதேன்? அழகு சாசுவதமா? பொய்! பொய்! பொய்!

இந்தப் பெட்டி வண்டியைச் செய்த ஆசாரி சோம்பேறிச் சாந்தப்பன். இந்தப் புளிய மரத்தடியிலேதான்

இந்த வண்டி உருவாயிற்று. ஊரிலே தொழிலாளிகளின் அந்தக் காலத்து வழக்கம் இப்போதும் அப்படியே தான் இருக்கிறதோ, அல்லது மாறிவிட்டதோ? ரத்தின சாமிக்குத் தெரியாது. இன்றுதான் அவன் இங்கே வந்தான். எல்லாருக்கும் அந்நியனுக இருக்கிருன். முன்னே ஊர் முழுக்க எல்லாருக்கும் அவனைத் தெரியும். ஊருக்கே செல்லப்பிள்ளை என்றுகூட அவனைச் சொல்லலாம். அப்படித்தான் எல்லாரும் 'ரத்தினு' வைக் கொண்டாடினுர்கள். கடைசியிலே, 'விழுந்த தேவதூதனை'ப் போல அவன் ஊரை விட்டு வெளியேறினுன். எங்கேயாவது மூலை முடுக்கிலே அவனுக்குப் பழகிய பழைய முகங்கள் கிழடு தட்டிக் கிடக்குமோ என்னவோ! இனித்தான் தட்டுப்பட வேண்டும்.

தச்சு, கொல்லு, பொன்வேலை இவையெல்லாம் செய்யும் ஆசாரிகளுக்கும் சரி, சலவை, க்ஷவரம் இவை செய்யும் தொழிலாளிகளுக்கும் சரி, சாதாரண வேலைகளுக்கு ஊரிலே யாரும் கூலி கொடுக்கும் வழக்கமில்லை. அறுவடைக் காலத்திலே அவர்கள் நிறைய நிறைய வர்த்தனை பெறுவார்கள். திருவிழாக்கள், 'கலியாணம் கார்த்தி', பண்டிகைகள் முதலிய விசேஷ நாட்களில் அவர்களுக்குப் பல வருமானங்கள் உண்டு. ஏர்க்காலுக்கு ஒட்டுப் போடவேண்டும், எரு வண்டிச் சக்கரத்துக்குப் பட்டம் மாட்டவேண்டும் என்ற மாதிரி சகஜமான வேலைகளையெல்லாம் செய்வது ஆசாரிமார் கடமை. ஆனுல், இதற்காக 'ஒரு வண்டியே செய்' என்ருல், அதற்குக் கூலி கொடுத்தாகவேண்டும். வேலைப்பட்டடையிலும் சரிதான், அறுவடைக் களத்திலும் சரிதான், சாந்தப்பன் பெரிய சோம்பேறி. வேலைக்கு மழுப்புவான். வர்த்தனைகேட்கப் போகமாட்டான்; அவனுடைய மனைவி மக்கள்தான் ஏதோ யாசகம் கேட்பதுபோலக்

கொஞ்சம் வர்த்தனையை வாங்கிவர வேண்டும். ஊர்ச் சமுதாய நிலத்தில் அவன் குடும்பத்துக்கும் சிறிது பங்கு உண்டு. அதன் 'வெள்ளாமை' யைக் கொண்டுதான் என்னவோ கொஞ்சம் கஞ்சி காய்ச்சிக் குடித்து வந்தது அந்தக் குடும்பம்.

சாந்தப்பனுக்கும் குருமூர்த்திக்கும் ஒரு சமயம் ஒரு 'சவால்' வந்தது. ரகசியம் என்ன வென்றால், சாந்தப்பனை வேலை செய்யும்படி தூண்டச் சவால்தான் சரியான யுக்தி என்பது குருமூர்த்திக்குத் தெரியும். ஊரிலே கௌரவமான 'பெரிய' மிராசுதார் குருமூர்த்தி. 'பெரிய' என்றால், பல வேலிக் குடித்தனக் காரர் அல்ல. கொங்கணச்சேரி கிராமத்தில் அவர்தான் பெரிய மிராசுதார். இரண்டரை வேலி நிலம் அவருக்கு உண்டு. ஒரு வேலி நிலத்துக்கு மேல் உடையவர் மற்ற யாருமே அங்கில்லை. எல்லாருக்குமே குருமூர்த்தியிடம் நல்ல மதிப்பும் மரியாதையும் உண்டு. அவர் பெரிய மிராசுதார் என்பதால் அல்ல; குணசீலர் என்பதால் தான். யாரையும் ஒரு வார்த்தை தவருகப் பேசமாட்டார். தெய்வபக்தர். ஒரு விதத்தில் வேதாந்தி என்றே சொல்லவேண்டும். முறையாக அதிகமாய்ப் படித்தவர் இல்லை. சொல்லப்போனல், இரண்டாம் வகுப்புக்கு மேல் பள்ளியில் படிக்கவேயில்லை. ஆயினும், பல புஸ்தகங்களை அவருடைய அலமாரியிலே பார்க்கலாம். எல்லாம் பெரும்பாலும் ஸ்தோத்திரங்களும் வேதாந்த பரமான நூல்களுமாகவே இருக்கும். வெறும் வறளிக் கதையெல்லாம் அவருக்குப் பிடிக்காது. நுட்பமான கலைகளை அவர் பயின்றிருந்தால் நிச்சயம் அவருக்குப் புரிந்திருக்கும். ஆனல், அதெல்லாம் வியர்த்தம் என்பது அவருடைய எண்ணம். எனவே, அவை பற்றிய நூல்களையும் அவர் நாடவில்லை. சித்தர், தாயுமானர்,

பட்டினத்தார் பாடல்கள், ஆஞ்சநேய பராக்கிரமம், விநாயகர் மான்மியம், திருவிளையாடல் புராணம், தனிப்பாடல் திரட்டு இந்த மாதிரி புஸ்தகங்கள் அவரிடம் ஏராளம். எல்லாவற்றிற்கும் மேலாகத் 'தஞ்சை பகவத் கீதை வசன'மே அவருக்கு மிகவும் பிடித்தமான புஸ்தகம். அதை அவர் திரும்பத் திரும்பப் படித்திருந்தார். ஆனால், அந்தப் புஸ்தகத்தைத்தான் யாரோ இரவல் வாங்கிக் கொண்டுபோய்த் திருப்பிக் கொடுக்கவேயில்லை. அது போனது ஒரு துரதிருஷ்டம் என்றே அவர் கருதினர்.

கேட்டபோதெல்லாம் இல்லையென்னது கால் அரை பணங்காசு சாந்தப்பனுக்குக் கொடுப்பவர் குருமூர்த்தி தான். ஆனாலும் அவனை அவர் கேலி செய்துகொண்டே இருப்பார்.

அவர் வீட்டுக்குச் சித்திரக் கொடியும் சுவாமி உருவங்களும் அமைந்த அலங்கார நிலைப்படியைச் செய்தவன் சாந்தப்பன்தான். ஆனால், அவனும் அறியாமல் அந்த நிலைப்படிக்குக் கீழே குடும்பத்துக்குச் சிரேயஸைத் தருவதற்காக, சில நவரத்தினங்களை அவர் போட்டு வைத்தது ரத்தினசாமிக்குத் தெரியும். எந்தத் தொழிற் கலாசாலையிலும் சாந்தப்பன் பயிலவில்லை. அந்த நாளில் அந்த வழக்கம் ஏது? அவன் கண் கண்டதைக் கை செய்யும். அப்படிச் சொல்வதுகூடச் சரி அல்ல; கண் கண்டதன் குறைகளை யெல்லாம் நீக்கிக் கற்பனையோடு அற்புதமாய்ப் புதுமையைப் படைக்கும் திறன் வாய்ந்தது, அவன் கை.

"சோம்பேறிச் சாந்தப்பனுக்கு என்ன தெரியும்? ஸ்லிப்பர் கட்டை செய்வான். வேலை செய்ய முடியாத கிளுவைக் கட்டையில்கூட அதைச் செய்துவிடுவான். கேட்டால், 'அது மிக லேசு; கண்ணுக்குக் குளிர்ச்சி'

என்றெல்லாம் வர்ணிப்பான். ஆனல், ஒரு பெட்டி வண்டி செய்யத் தெரியுமா, பெட்டி வண்டி?'' என்று ஒருநாள் சொன்னர் குருமூர்த்தி.

அதையே சவாலாக மதித்து, வேலைக்கு ஆயத்த மாகிவிட்டான் சாந்தப்பன்.

மரக்கட்டைகளையும் ஆணி, பிரம்பு, மெழுகு சீலை, ரெட்டு, வில், கண்ணடி முதலிய சாமான்களையும் ஒன்றுக் குப் பின் ஒன்ருகக் குருமூர்த்தி வாங்கிப்போட்டார். உத விக்கு ஆட்களையும் அமர்த்திக் கொடுத்தார். அவர்களுக் கெல்லாம் கூலி உண்டு. சாந்தப்பன் மாத்திரம் ஒரு கூலியும் பேசிக் கொள்ளவில்லை. குருமூர்த்தியிடம் சாந் தப்பன் கூலி வாங்கிக் கொள்வதா? அவர் அவனுடைய வள்ளல்; அவன் அவருடைய கலைஞன். ஆனல், அவர் கொடுக்கும் பணத்தை யெல்லாம்விட, "பேஷ்! சாந் தப்பா!'' என்று அவர் புகழ்ந்து இரண்டு வார்த்தை சொன்னல், அதுவே அவனுக்குப் பெரும் பரிசு.

எந்தக் காலத்திலுமேதான் குருமூர்த்தியின் வீட்டில் சாந்தப்பனுக்குச் சர்வோபசாரமும் நடக்கும். வேலை செய்யும் காலத்தில் கேட்க வேண்டுமா? காபி, பலகாரம், சாப்பாடு எல்லாம் அவனுக்கு அங்கேதான். ஆனல், அவற்றை அவன் பூர்ணமாய் ரசித்து அநுபவிக்கவில்லை. பட்டினியோடு வேலை செய்வதில்தான், அவனுக்கு அதிக இஷ்டம். சுடச் சுடச் சரியான நேரத்தில் எதையும் அவன் உண்டதில்லை. எடுத்த வேலையை முடித்து விட்டே எதுவானலும் உண்பான். அதற்குள் எல்லாம் ஆறி அவலாய்ப் போய்விடும்.

பெட்டி வண்டி வெகு சீக்கிரத்திலே உருப்பெற்றது. நாலு மாதத்துக்கெல்லாம் அசலூரிலே ஒரு கல்யாணம். "அதற்கு என் வண்டியிலேதான் குருமூர்த்தி ஐயா

போகவேண்டும்" என்று சொன்னான் சாந்தப்பன். அப்படியே தயாராகிவிட்டது பெட்டி வண்டி.

கூண்டு கட்டி, 'பெயிண்ட்' எல்லாம் மூன்று கோட்டிங் கொடுத்தாயிற்று. கூண்டிலே பச்சை, சிவப்பு, மஞ்சள், நீலம், ஊதா முதலிய வர்ணக் கண்ணாடிகள் பதித்தாயிற்று. கூண்டுக்கு மேலே வர்ணங் கொண்டு அழகான சித்திரங்களைத் தன் கையாலேயே தீட்டினான் சாந்தப்பன். ஓவியத்தில்கூட வல்லவன்தான் அவன்!

"பேஷ்! ஜோரான பெட்டி வண்டி! பலே வேலைக்காரன் சாந்தப்பன்!" என்றார் குருமூர்த்தி.

சாந்தப்பன் மீசைக்காரன் அல்ல; ஆனால், மீசை இருக்க வேண்டிய இடத்தை அவன் தடவிக்கொண்டான்.

இப்படி இந்தப் பெட்டி வண்டி உருவான காலத்தில் சரசு சின்னக் குழந்தை அல்ல; அவளுக்குப் பிறகு எட்டுக் குழந்தைகள் பிறந்திருக்க வேண்டிய அளவு அவள் வளர்ந்துவிட்டாள். சரசுவின் வயசு பதினொன்று. அப்படியிருந்தும், அவளுக்குப் பின் அவள் அம்மாள் சிவகாமி கருத் தரிக்கவே இல்லை. ஒரு பிள்ளைக் குழந்தை பிறந்திருக்கலாகாதா? பாழுந் தெய்வம்; குருட்டுத் தெய்வம்! ஏன் அவளுக்கு இந்தக் குறையை வைத்தது? இதனால்தானே, இதனால்தானே...ஐயோ! நினைக்கவும் பதறுகிறதே!

ரத்தினத்தின் அப்பாதான் அந்த ஊர்ப் பள்ளிக்கூடத்துக்கு வாத்தியாராக வந்திராமலே போயிருக்கப்படாதா? எத்தனையோ ஊரில் பள்ளிக்கூடம் இல்லை. இந்த ஊரில் அது இல்லையென்று யார் அழுதார்கள்? இங்கேயும் அது இல்லாது போயிருந்தால், எவ்வளவு மேலாக இருக்கும்! அப்பா வாத்தியார். அதனாலேயே

ரத்தினசாமி இங்கே வந்து வாழ நேர்ந்தது; குருமூர்த்தியோடு சிநேகமாக நேர்ந்தது; அவருடைய தம்பிபோல உறவாட நேர்ந்தது. அவர் வேதாந்தி. ஆனால், ரத்தினசாமியின் விதண்டாவாதங்களையெல்லாம் கேட்டு, அவனுக்குப் பதில் சொல்லுவதிலே அவருக்கு ஓர் ஆனந்தம். விளையாட்டிலேகூடக் குருமூர்த்தி ஒழுங்கு பிறழமாட்டார்; ஆயினும் சீட்டாடும்போது ரத்தினம் செய்யும் தில்லு முல்லுகளையெல்லாம் கண்டு அவர் மகிழ்வார். 'ரத்தினம் புத்திசாலி; ஆனால் அதிலே தினையளவு கோணல் புத்தி கலந்திருக்கிறது' என்பது அவர் கருத்து. எந்தவிதமான முரட்டுக் காரியத்துக்கும் ரத்தினத்தைத்தான் அவர் கூப்பிடுவார். அவர் என்ன? அவர் மனைவி சிவகாமியேதான் கூப்பிடுவாள். கிணற்றில் விழுந்த செம்பைக் கயிற்றின் துணைகூட இல்லாமல் இறங்கி எடுக்க வேண்டுமா? தென்ன மரமேறி நாலு இளநீர் பறித்துப்போட வேண்டுமா? எப்பேர்ப்பட்ட சண்டிக்காளை பூட்டிய வண்டியையும் சல்லியன் மாதிரி லாகவமாய்ச் சாரத்தியம் செய்ய வேண்டுமா? எதற்கும் ரத்தினசாமி தயார். ஆமாம்; அப்படி வண்டி ஓட்டியதால் தானே வந்தது வினை!

வண்டி பூர்த்தியாகிவிட்டது. கல்யாணத்துக்குப் புறப்பட வேண்டிய நாளைக்கு முந்திய நாள் மாலை. சிவகாமி ஒரு குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு குடிநீர்க் கிணற்றுக்குப் புறப்பட்டாள். ஊர்ப் பொது மக்களின் சௌகரியத்துக்காக, அதிலே இப்போது புதிதாகப் பம்புக் குழாய் போட்டிருந்தார்கள். ஆகவே, அவள் தாம்புக் கயிறு எடுத்துச் செல்லவில்லை. குடத்தை ஒரு கையால் அணைத்து, மறு கையால் அழகாகப் பிடித்துக்கொண்டு மெல்ல மெல்ல அவள் நடந்தாள்.

"ரத்தினு, பார்த்தாயா அண்ணியை? பாலகிருஷ்ணனை இடுப்பில் வைத்த யசோதை போவதை! பாவம், பிள்ளைக் குழந்தை இல்லை என்று பெருங் குறை இந்த யசோதைக்கு!" என்று கேலி செய்தார் குருமூர்த்தி.

மனைவியை இப்படித் தமாஷ் செய்வதிலே அவருக்கு ஒரு குஷி. அவளுடைய ஏக்கத்தின் பரிமாணத்தை அவர் அறியவில்லை. உள்ளே கொந்தளித்துக்கொண்டிருக்கும் எரிமலையின் உஷ்ணத்தை, சாந்தமான சமவெளியில் இருப்பவன் எப்படி அறிவான்?

"இனி உனக்குப் பிள்ளையே பிறக்காது" என்று ஒரு நாள் கனவில் வந்து சிவபெருமான் அவருக்குச் சொல்லிவிட்டாராம். சிவகாமியிடம் தாம் இதைத் தெள்ளத் தெளியத் தெரிவித்துவிட்டதாகச் சொல்லிச் சிரித்தார் குருமூர்த்தி. என்ன துர்ப்பாக்கியம்! நிராசை என்பது, நீற்றுப்போன நெருப்பல்ல என்று அவர் அறியவில்லை. அது நீறு பூத்த நெருப்பு; காற்றடித்ததும் கிளர்ந்து கனன்று ஜ்வாலை ஆகிவிடுமே! ஆகிவிட்டதே! அந்தத் தீ இதோ இன்றுகூட எரிக்கிறதே!

கல்யாணத்துக்குப் புறப்பட்டாயிற்று. தெருவிலே இருந்த இரண்டு மூன்று குடும்பங்கள் வண்டிகளைக் கட்டிக்கொண்டு புறப்பட்டன. எல்லாரும் ஒன்றுக்குள் ஒன்று; உறவினர்கள். ரத்தினம் சம்பந்தமில்லாதவன். ஆனால், அவன்தான் குருமூர்த்தியின் குடும்பத்துக்கு உற்ற துணைவனாகிவிட்டானே. குருமூர்த்தியின் ஆஸ்தானக் கலைஞன் சாந்தப்பன்; ஆஸ்தானப் புலவன் ரத்தினசாமி. இருவரும் கூடவே புறப்பட்டார்கள்.

ரத்தினத்தின் அப்பாவுக்கு அவன் ஒரு தறிதலை. "கட்டுக்கடங்காத பிள்ளையை வெட்டிப் போட்டால் என்ன?" என்று, அவன் இல்லாத சமயத்திலெல்லாம்

அவர் திட்டிக்கொண்டிருப்பாரே ஒழிய, நேரிலே ஒன்றும் சொல்வதில்லை. எந்த விதமாகவும் அவனைக் கண் காணிப்பதில்லை. இப்போதுதான் அவன் உச்சிக் குடுமியாயிருக்கிறன். அப்போதெல்லாம் அவன் தலை யிலே கட்டுக் குடுமி. பாதித் தலைக்குமேலே அது பரவி யிருக்கும். அதற்குமுன்னே சன்னமாகக் கன்றுக் குடுமி வைத்துக்கொண்டிருப்பான். அதைப் பார்த்து அவன் அப்பாவுக்கு எரிச்சல் எரிச்சலாய் வரும். 'இந்தப் பயலின் கேராவும் கிருதாவும்' என்று அவர் பெருமூச் செறிவார். 'கன்றுக் குடுமிக்கும்' 'கேரா-கிருதா'வுக்கும் அவருக்கு வித்தியாசம் தெரியாது. சரியான வாலிபம். இருபத்தைந்து வயசு. ரத்தினம் டில்பஹார் தைலந்தான் பூசி வாருவான். தலையிலே அடர்த்தியில்லாது மயிர் சொற்பமாக இருந்தாலும், முடிச்சுப் 'புஸு புஸு' என்று விலத்தியாய்ப் பெரிசாய் இருக்கும்படி தளுக்காக முடிந்து கொண்டையூசி செருகிக் கொள்ளுவான். சில சமயம் பெண்களைப்போல் செருகு கொண்டையும் போட் டுக்கொள்வான். கோதி வாரிவிட்ட மயிர் பறக்காது. ஆனாலும் அதைப் படிய வைக்கும் 'கமான் வளைவுச் சீப்பு' அவன் தலையிலே எப்போதும் அலங்காரப் பொரு ளாய் அமர்ந்திருக்கும். மஸ்லின் ஜிப்பா. வெண்பட்டு அங்கவஸ்திரம். இடுப்பிலே அழகாகக் கட்டமிட்ட வர்ணக் கைலி. நெற்றியிலே சன்னமாக வாசனைச் சாந்துப் பொட்டு. எப்போதும் வெற்றிலை மென்று சிவந் திருக்கும் அவன் உதடுகள். கதுப்பிலே புகையிலையைக் கிள்ளி அடக்கிக்கொண்டு தளைக் கயிற்றைக் கையிலே பிடித்தானானால், ஓடாத மாடெல்லாம் இறக்கை கட்டிய குதிரைகள் மாதிரி பறக்கும். அன்று இந்தப் பெட்டி வண்டியை அவன்தான் ஓட்டினன். அதுதானே பொல் லாத தீங்காய் முடிந்தது ?

குருமூர்த்தி இந்தப் பெட்டி வண்டியின் வெள்ளோட்டத்துக்கென்றே புதிதாக மிக் அழகான ஒரு ஜோடி காளைகள் வாங்கினுர். அவற்றுக்குக் கொப்பி, சதங்கை, மணிமாலை முதலிய அணிகளெல்லாம் போட்டுவிட்டார். அந்த மாடுகளுக்கேற்ற சாரதி ரத்தினந்தான். அவனிடம் விதம் விதமாய்ப் பூணும் சாட்டைகளும் கட்டிய தார்க் குச்சிகள் உண்டு. மணிமுடிச்சுச் சாட்டை, சன்ன வார்ச் சாட்டை, பூக்குஞ்சலச் சாட்டை இப்படிப் பல உண்டு அவனிடம். சாட்டையோடு, கறுப்புக் குடை ஒன்றையும் வண்டியோட்டும் சாதனமாகச் சில சமயம் அவன் கையாளுவான். குடைக்கு மிரளும் மாடுகள் விஷயத்தில் அவனுக்கு வெகு உற்சாகம். சாட்டையடிக்கும் தார்க்குத்துக்கும் மசியாத மாட்டை, விறுக்கென்று குடையை விரித்து வெறித்தோடச் செய்யும் போது, ஏதோ 'பாரசூட்'டில் பறப்பதுபோல அவனுக்கு ஆனந்தம் ஏற்படும். இந்தப் புது மாடுகளுக்குப் பூச் சாட்டை போலவே குடையும் அவசியம் என்று அவன் எடுத்துவந்தான்.

"அடே ரத்தினம், தார்க்குச்சியால் குத்தி ரத்தக் காயம் செய்துவிடாதே. ஹத்திலேயே ஓட்டு" என்று தொடக்கத்திலேயே எச்சரித்தார் குருமூர்த்தி.

"அந்தக் கவலை உங்களுக்கு வேண்டியதே இல்லை" என்று உறுதி சொன்ஞன் ரத்தினம்.

தாரைச் சுர் என்று குத்தி எடுக்கக்கூடாது; மென்மையாகக் குத்தி ஒரு திருகு திருகி எடுத்தால் பொட்டு ரத்தம் வராது. தவறி வந்தால் சிறிது சாணத்தைத் தடவிவிட்டால் போயிற்று. இது தார்க்குச்சிக் கலை பற்றி அவனுடைய சித்தாந்தம்.

ரத்தினம் வண்டி யோட்டினுன். அழகான பெட்டி வண்டி. அதில் அழகான பெண்களே உட்கார்ந்திருந் தார்கள். குருமூர்த்தி பின் வண்டி ஒன்றில் வந்தார். பெட்டி வண்டியில் முன் பாரம், பின் பாரங்களை யெல் லாம் சரி செய்தபோது, சிவகாமி முன்பக்கத்தில் மூக் கணைக்கு அருகே உட்காரவேண்டி வந்தது. பெட்டி, படுக்கை இவற்றேடு மற்றும் இரண்டு பெண்கள் அந்த வண்டியிலே இருந்தார்கள். சற்றுப் பருத்திருந்த ஒருத்தி, வண்டியின் நடு மத்தியிலே உட்கார்ந்திருந் தாள். அவள் சிவகாமியின் அத்தங்காள்; கொஞ்சம் வாயாடி; சம வயசுக்காரி.

வண்டியில் இருந்த மூன்று பேருக்குள்ளும் அதிக அழகி சிவகாமிதான். முழுமதிபோல் சற்று வட்டமான முகம். செக்கச் செவேல் என்றிருக்கும் அவள் மேனி. கறுத்த கூந்தல் தானுகச் சுருண்டு சுருண்டு, ஓவியன் எழுதிய லலித ரேகைகள் அடர்ந்து அலை மோதுவது போல் வளைந்து சென்றது. அவளுக்கு ஒன்றும் அப்படி வயசாகி விடவில்லை. இருபத்தேழோ எட்டோதான் இருக்கும். கூந்தலை வாரி வகிடெடுத்துக் கால் வாங்கிப் பின்னித் தொங்கவிட்டு, பூச்செருகிக்கொண் டிருந்தாள். நெற்றியின் நடுவில் புருவங்களின் இடைக்குச் சற்று மேலே பச்சை குத்திய பொட்டு ஒன்று துலங்கியது. அந்தப் பொட்டை மறைக்காமல், அதை ஒட்டினுற்போல் அதற்குக் கீழே ரம்யமான செஞ்சாந்துப் பொட்டு இட்டிருந்தாள். ஜரிகைக் கரைச் சிவப்பு ரவிக்கை. கரும் பட்டுச் சேலை. அதிக நகைகள் இல்லை. கழுத்திலே இரண்டு வடச் சங்கிலி. கையிலே காப்பு. காதிலும் மூக்கிலும் மூளியில்லாமல் சாதாரண நகைகள்.

'ட்ரு ! ட்ரு ! ட்ரு ! ஹை !' என்று பூச்சாட்டையை ஓங்கி இடது மாட்டின் வாலை முடுக்கினான் ரத்தினம். கொஞ்சம் துடியான மாட்டைத்தானே பெரும்பாலும் இடத்தில் கட்டுவார்கள் ? இது என்னவோ சற்று மந்த மாக இருந்ததுபோல் ஆரம்பத்தில் தோன்றியது. இடம் வலம் மாற்றிப் பார்க்கலாமா என்று எண்ணினான் ரத்தினம். இல்லை ; கொஞ்சதூரம் போனதும் சரியாகி விட்டது. புது ஆளைக் கண்ட வெறிப்புத் தணியச் சிறிது நேரம் ஆயிற்றுப் போலிருக்கிறது.

வண்டிகள் ஓடின. பெட்டி வண்டிதான் எல்லாவற் றுக்கும் முன்னே சென்றது. மற்ற வண்டிகளுக்காகச் சிறிது சிறிது தலைக் கயிற்றை இழுத்துப் பிடித்து மெது வாகவே ரத்தினம் அதை ஓட்டவேண்டியதாயிற்று. வண்டியோ வில் வண்டி ; பாதையோ சற்று ஈரம் பாய்ந் தது. மாடுகளுக்குத்தான் கொஞ்சம் கஷ்டமாயிருந்திருக் கும். உள்ளே உட்கார்ந்து சவாரி செய்தவர்களுக்கு மிகவும் சொகுசாகவே இருந்தது. அந்தப் பெண்கள் உற்சாகமாகத் தொண தொண என்று பேசிக்கொண்டே இருந்தார்கள். ரத்தினத்தின் காதிலும் அது விழுந்தது.

பருத்த அத்தங்காள், சிவகாமியை ஓயாமல் ஏதாவது கேலி செய்துகொண்டே வந்தாள். சிவகாமிக்கு ஒரே பெண் இல்லையா ? இதனால் அவள் பெரிய 'சோடை' யாம். தனி மரம் தோப்பாகாதாம் ; ஒரு குழந்தை பிள்ளைப்பேறு அல்லவாம். குறைந்த பட்சம் ஒரு பெண் ணும் ஓர் ஆணுமாக இரண்டு குழந்தைகளாவது ஒருத்தி பெற்றால்தான் பெண்மை பலித்ததற்குச் சான்றாகுமாம். அதுவும் எப்படி ?

" ரோஜா மாதிரி ஒரு பெண் ; ரத்தினம் மாதிரி ஒரு பிள்ளை !"

ரத்தினசாமி திடுக்கிட்டான். அவள் வேண்டு மென்றே அவனை ஜாடையாகக் குறிப்பிட்டுத்தான் பேசினளோ? என்ன ! என்ன குறும்பு !

இந்தச் சமயத்தில் சிவகாமியின் ஒரு புஜம் அவன் மீது தீண்டியது. தவறித் தன்னை அறியாமலேதான் தீண்டி யிருக்கவேண்டும். அப்பாடா ! அப்போது, அவள் மேனி எப்படி நடுங்கியது! தன் முதுகைத் தீண்டிய புஜத்தின் அதிர்ச்சியால் அதை அவன் அறிந்துகொள்ள முடிந்தது.

பிறகு தீப்பட்ட கொடிபோலச் சட்டென்று அது விலகியது. ஆனல்....ஆனல்....அதுதான் ஆரம்பம்.

கொஞ்ச நேரம் கழித்து அது மறுபடியும் மெல்ல மெல்ல நெருங்கி அவன்மீது பட்டது. விலகியது. இப் படிப் பல முறை. அவன் உணர்ச்சியிலே-உள்ளத்திலே, ஒரு லாகிரி-பித்தம் ஏறிவிட்டது. உலகத்திலே சரி-தவறு, நன்றி - துரோகம், நன்மை - தீமை என்றெல்லாம் பகுத் துச் சொல்லுகிருர்களே, அந்த விவேகத்தையெல்லாம், நியாயங்களையெல்லாம் கடந்த அதீத நிலையொன்றில் அவன் உள்ளம் சிறகு முளைத்த குருவிபோல் பறக்கத் தொடங்கியது.

பிறகு, நடந்ததெல்லாம் என்னவோ கனவு மாதிரி இருக்கிறது. அப்புறம் ஐந்தாறு நாள்தான் அவன் பூலோகத்தில் ஜீவனேடு உலவிய மனிதனுகவே இல்லையே! எங்கேயோ மேகத்தோடு மேகமாக மிதக்கும் ஆவிபோல்தான் அவனுக்கு உணர்ச்சி இருந்தது. அந்த நாட்களில் காதுந் தலையுமற்றுச் சின்னபின்னமான கனவை எப்படி ஒட்டவைத்து உருவாக்கிக் காண முடியும் ?

கல்யாணம் முடிந்து எல்லாரும் திரும்பி ஊருக்கு வந்தாயிற்று. அப்போதுகூட், எவனோ குழந்தை காற்றில் பறக்கவிட்ட காகிதப் பட்டம்போல அவன் வீட்டுக்குச் சென்றான்.

ரத்தினசாமி எந்த நாளிலுமே வீட்டில் படுத்ததில்லை. குருமூர்த்தி வீட்டு ஒட்டுத் திண்ணையில்தான் படுப்பது வழக்கம். இது ஏழெட்டு வருஷமாகவே ஏற்பட்டுவிட்ட பழக்கம். அந்த வராந்தா ஒட்டுத் திண்ணையிலேயே சுருட்டி வைத்திருக்கும் அந்தப் படுக்கை. அதை யாரும் கலைக்க மாட்டார்கள் ; நகர்த்த மாட்டார்கள்.

மாலையில் அங்கே தள்ளாடித் தள்ளாடியபடி வந்தான் ரத்தினசாமி. அவன் தூரத்தில் வரும்போதே, பெரிய திண்ணையில் குருமூர்த்தி உட்கார்ந்திருப்பதை அவன் கண்டான். எப்போதும் அவனைக் கண்டதுமே புன்சிரிப்போடு வரவேற்கும் வழக்கமுள்ள அந்த முகத்திலே அன்று ஈயாடவில்லை. ரத்தினம் கிட்ட வரவர அவருடைய முகம் குரூரமாயிற்று. கடைசியிலே சரேல் என்று எழுந்து மகா ஆத்திரத்துடன் அந்த ஒட்டுத் திண்ணைப் படுக்கைமீது அவன் கண் பார்க்கப் பலமாக ஓர் உதை விட்டார். அது இரண்டு கஜதூரம் எழும்பி நடு ரோட்டிலே போய் விழுந்தது.

ரத்தினம் பிரமித்துப் போய், வாசல் பூவரச மரத்தடியிலே சப்த நாடியும் ஒடுங்கிக் குன்றியவனாய்ச் சிலை போல் நின்றான். குருமூர்த்தியும் சிறிதுநேரம் எங்கேயோ வெட்ட வெளியைப் பார்த்தவராய் நின்றார். பிறகு அந்த இடத்தை விட்டு அப்பால் போய்விட்டார்.

ரத்தினத்துக்குச் சிறிது சுய நினைவு வந்தது. "மனிதன் மிருகம் ! மனிதன் மிருகம் ! மனிதன் மிருகம்...... !"

என்று முணுமுணுத்துக்கொண்டே, நடந்தான்; நடு வீதியில் அவந்தரையாய்க் கிடந்த படுக்கையைச் சுற்றிக் கையில் எடுத்துக்கொண்டான். மனிதனுக்கும் பசியும் தாகமும் இருக்கின்றன; இயற்கையின் தூண்டுதல் களுக்கு அவனுந்தான் ஆட்படுகிருன்; தீ, காற்று, நீராவி, மின்சாரம் இவையெல்லாம் விசை கொண்டு கண்மூடித் தொழிற்படுவது போல, உணர்ச்சி வேகத் திலே, உடம்பின் விறுவிறுப்பிலே, உள்ளத்தின் பரபரப் பிலே தன்னை அறியாமல் என்ன என்னவோ செய்து விடுகிருன்! நியாயம், தர்மம், சத்தியம், பாவம், புண்ணி யம் எல்லாம் விவகாரப் பேச்சுக்கு. உள்ளம் பொங்கி விடும்போது, இவையெல்லாம் அர்த்தமற்றுப் போகின் றன.

உண்மை என்ன? கல்யாணச் சந்தடியிலே அது நடந்துவிட்டது. ரத்தினத்தின் ஆயுள் பரியந்தம் நிரந்தர வேதனையை நல்கிவிட்ட அதுதான். நாலு பேர் அங்கேயே கிசுகிசு என்று அதுபற்றிப் பேசிக்கொண் டிருந்திருக்கிருர்கள். ஆனல், குருமூர்த்தியின் காதில் அதைப் போட யாரும் துணியவில்லை. ஆனல் ஊர் திரும்பி வந்ததுமே அவருக்கு எப்படியோ அது எட்டி விட்டது. வளர்த்த கடா மார்பில் பாய்ந்தால், ஒரு மனி தனுக்கு எப்படித்தான் இருக்கும்! குருமூர்த்தி அந்த நிமிஷத்திலே என்ன வேண்டுமானலும் செய்திருக்க முடியும். ஆனல், அவர் மானி; வேதாந்தி; சாந்த மூர்த்தி. சாந்தம் என்ற குன்றைக் குடைந்து வரும் ஆத்திரம் கங்கையின் வீழ்ச்சியாக இருக்குமா? அது அருவி நீர்போல் வலியற்றுப் போய்விட்டது.

அன்று முதல் குருமூர்த்தி வேறு மனிதராகி விட்டார். நஞ்சு தோய்ந்த பாம்புபோல ரத்தினமும்

எவர் கண்ணிலுமே படத் துணிவின்றி ஒளிந்து ஒளிந்து நடமாடினுன்.

சிவகாமி அதற்குப் பிறகு வெகுகாலம் உயிரோ டிருக்கவில்லை. அவளுடைய கடைசி நாட்கள் எப்படி இருந்திருக்கும் என்பதை, சில நடை முறைகளாலும் அரையுங் குறையுமாய்க் கேள்விப்பட்ட சில தகவல்க ளாலும் ஊகித்து அவன் கற்பனை செய்ய முடிந்தது.

அவளைக் குருமூர்த்தி ஒரு வார்த்தையும் கடிந்து சொல்லவில்லை. ஓடு வெளியே என்று துரத்தவில்லை. தாமரையிலை நீர்போல், வீட்டிலே இருந்தும் இராதவ ராக, ராஜரிஷிபோல் மனத் துறவு பூண்டு அவர் வாழத் தொடங்கினுர்.

சிவகாமி? அவள் சாகு முன்பே, விஷயம் குருமூர்த்தி யின் காதுகளை எட்டியவுடனேயே, உண்மையில் செத்து விட்டாள்; நடமாடும் சவமானுள். அதோடு, அன்று ஆரம்பித்த காய்ச்சல், படிப்படியாக உயிர் குடிக்கும் பெரு நோயாக மாறி, சில மாத காலத்தில் அவள் ஆயுளைத் தீர்த்துவிட்டது.

இதெல்லாம் ஒன்றும் விந்தை இல்லை. மயானத் திலே அவளுக்குக் கொள்ளி வைத்தபின் குருமூர்த்தி தம்மை மீறி வாய்விட்டுச் சொன்னுராமே சில வார்த் தைகள், அவைதான் ரத்தினத்தின் நெஞ்சை இன்னமும் வாள்போல் அறுக்கின்றன.

"நீ இனிப் புனிதையாகிவிட்டாய். உன் மூடத் தனத்துக்குப் பிராயச்சித்தம் ஏற்பட்டுவிட்டது. போ, சுமங்கிலியாய்ப் போய் வா. ஆனுல், அவன்....அவன்.... அந்த அறியாத வாலிபன்!......"

இதோடு அவர் நின்றுவிட்டாராம். என்ன சொல்ல எண்ணியிருப்பார்? என்னதான் எண்ணியிருப்பார்? இனி அதை அறியும் வகை ஏது? ஆறு மாதத்துக்கு முன் வரையில் முனிவரைப்போல் வாழ்ந்து வந்து அவருந்தான் போய்விட்டாராமே!

இந்தப் பெட்டி வண்டி? இதை அந்தச் சாந்தப்பனைத் தவிர வேறு யாரும் தொடக்கூடாது என்று அவர் சொன்னாராம். அவனும் வெகு நாள் வரைக்கும் இதிலேயே எந்நேரமும் துக்கம் நிறைந்த முகத்தோடு வந்து படுத்திருந்து சில வருஷங்களுக்கு முன் உயிரை விட்டானமே! என்ன விந்தை!

அவள் மாண்ட பிறகு, யாரும் அறியாமல் ஊரை விட்டு ஓடிய ரத்தினம், எங்கெங்கோ திரிந்தான். எவ்வளவோ பொருள் சம்பாதித்தான். உள்ளத்தின் சுமை மாத்திரம் சுமக்க முடியாப் பெரும் பாரமாக இருந்தது. பல பெண்கள் அவனை நாடி வந்தும், மணம் புரிய அவன் மனம் இசையவில்லை. கொங்கணச் சேரியை வந்து பார்க்க, எத்தனையோ தடவை என்னவோ ஓர் ஆசை வந்து உந்தியது. ஆனல் ஒரு பயமும் கூடவே வந்து அதை அத்தனை தடவையும் தடுத்தது. கடைசியாக இந்தத் தடவை வந்தே விட்டான். வந்து இந்தக் காட்சியைக் காணவா? இதை அவன் கனவும் காணவில்லை.

வாழ்க்கையிலே அவருடைய மன்னிப்பு ரத்தினத்துக்கு இல்லை. இனி என்ன பரிகாரம்? என்ன பிராயசித்தம்? செல்லரித்த அவன் மனத்துக்குக் கடைசிவரைக்கும் நிம்மதியே கிடையாது.

அவனுடைய உள்ளத்திலே ஒரு சங்கல்பம் எழுந்தது. குருமூர்த்தியின் வீடு இன்று யாருக்குச் சொந்தமானலும் சரி, அவர்களுக்கு என்ன விலை கொடுத்து

வேண்டுமானாலும் இந்த வீட்டை வாங்கப்போகிறான். வண்டியைத் தன் ஆயுள் வரைக்கும், குருமூர்த்தியைப் போலவே தானும் காப்பாற்றப் போகிறான். அப்புறம்? அப்புறம்? வீட்டுக் கூடத்திலே அவர்கள் இருவருடைய படங்களையும் வைத்து நித்தமும் மன்னிப்புக் கோரிப் பிரார்த்திக்கலாமா? ஐயோ! அப்போதாவது இரவிலே என்றாவது அயர்ந்த தூக்கம் வருமோ? இல்லை; வராது. அவன்தான் மக்பெத்மாதிரி தூக்கத்தை என்றைக்கோ கொலை செய்துவிட்டானே. அவனுக்கு இனி ஒரே தூக்கந்தான் உண்டு - கடைசிநாளில். ஆனால் கடுந்தவம் இன்றி இனி வாழ முடியாது. இன்றே அதை அவன் தொடங்கப் போகிறான்.

சிந்தனைப் புயலில் அலைக்கழிக்கப் பெற்ற ரத்தினம் ஏதோ கடின உழைப்புப் புரிந்தவனைப்போல, உடல் சோர்ந்து அந்தப் பழைய ஒட்டுத் திண்ணையிலே போய்ப் பொத்தென்று உட்கார்ந்து, அதன் சார்மணையிலே தலையைச் சாய்த்தான். இனி என்றும் இங்கேதான் அவனுக்குப் படுக்கை. ஆனாலும், விரிப்பு மாத்திரம் ஒன்றும் கிடையாது; கண்டிப்பாய்க் கிடையாது.

பொரிவிளங்காய்

இன்பம் என்பதுதான் எத்தனை விதங்களில் மனிதனுக்கு ஏற்படுகிறது! 'எத்தனை கோடி இன்பங்கள் வைத்தாய், இறைவா! இறைவா! இறைவா!' என்று பாரதியார் பரவசமாய்ப் பாடியது உண்மை; முற்றும் உண்மை. கிராமத்துக் கணக்குப்பிள்ளை சுப்புரத்தினத்துக்கு அன்று பெரிய சந்தோஷம். அது ஏற்பட்ட விதந்தான் விநோதம். புலங்களைப் பார்வையிடச் சென்ற அவன், காணமற்போன எட்டு ஸர்வே கற்களைக் கண்டு பிடித்துவிட்டான். இது ஆச்சரியம் இல்லையா! எந்தக் கணக்குப்பிள்ளைக்கும் பெருமை அளிக்கக்கூடிய சங்கதி!

அதெப்படிச் சொல்ல முடியும்? எத்தனையோ கணக்குப்பிள்ளைகளுக்கு இந்த நில அளவுக் கலையே பெரிய தொல்லை. அவர்களெல்லாம் கஸரா முறையைத்தான் கைக்கொள்ளுவது வழக்கம். சுப்புரத்தினம் தனிப் பிறவி, கிராமக் கணக்குப் பிள்ளைகளுக்குள்ளே. அவனுக்கு இந்த இருபத்தைந்து 'தப்படி' எடுத்துப் போட்டால் கணக்காக ஒரு சங்கிலி தூரம் வராது. ஆனால், செயின், க்ராஸ் ஸ்டாஃப், கொடி, கோல் - இவற்றோடு வெகு அழகாக வேலை செய்வான். இப்படித்தான் அந்தக் கற்களை அவன் கண்டு பிடித்தான். ஒரு 'டயாக்ன'லின்

இரண்டு கோடிக் கற்களையுங்கூடச் சிக்கலான கணக் கெல்லாம் போட்டு விடைப்படி அளந்து கண்டு பிடித்து விட்டான். அத்தனை கற்களும் கணக்கிட்ட இடத்தில் சரியாய்ப் பூமிக்குள்ளே புதைந்து கிடந்தன. கணக்குப் படி அவை அகப்பட்டது அவனுடைய ஸர்வே ஞானத் துக்கு அத்தாட்சி கூறியது. அவன் மகிழ்ந்தான். ஓவிய னுக்குச் சித்திரம் அற்புதமாய் அமைந்துவிட்டால், ஓவி யன் மகிழ்வான். கணக்கிலே கரூர் விடை வந்தால், சுப்புரத்தினம் மகிழ்வான். அது அவன் இயல்பு. அது மட்டும் அல்ல. அந்தக் கற்கள் அகப்பட்டிராவிட்டால், ஏழைக் குடியானவர்களுக்கு எவ்வளவு பணம் தண்ட மாகி யிருக்கும்? அபராத மெல்லாங்கூடச் சர்க்கார் போட்டுவிடுவார்கள். இந்தத் தண்டமெல்லாம் இல்லா மல் போனது வேறே மகிழ்ச்சிக்குரியது.

களைத்துச் சோர்ந்தபடியே மாலையில் வீடு வந்து சேர்ந்தாலும், களிப்பு அவன் உள்ளத்திலே பொங்கி யது. அவனால் பயனடைந்த ஒரு குடியானவன் அன் போடு தன் தோட்டத்துக் காய்கறிகள் சிலவற்றை அவ னுக்குப் பறித்துக் கொடுத்தான். ஒருவன் டஜன் ரோஜாப் பூ அளித்தான். அவனிடம் ஊர்க் குடியானவர் களுக்கெல்லாம் - அநேகமாக எல்லாருக்குமே - மிகுந்த அன்பு. சிலருக்கு மட்டும் என்னவோ அவனைப் பிடிப்ப தில்லை. காரணம் வேறொன்றும் அல்ல. அவன் சட்டப் படி நடப்பான். 'எங்க்ரோச்மெண்ட்' துளி இருந்தாலும் 'பி-மெமோ' கொடுத்து அபராதம் வாங்கி வைத்துவிடு வான். தண்ணீர்த் தீர்வையை விடமாட்டான். இதனா லெல்லாம் நஷ்டமடைந்த குடியானவர்கள் சிலர் உண்டு. அவர்கள் மட்டும் சுப்புரத்தினத்தை 'ஊமைக் குறும்பன்' என்று தூற்றி வந்தார்கள். அதற்கு அவன் என்ன

செய்வான்? அவர்கள்தான் குறும்புக்காரர்கள்; துஷ்டர்கள். நீதி, தர்மம் என்றெல்லாம் அவன் தத்துவம் பேசவில்லை. சட்டமும் ஒழுங்கும் இல்லாவிட்டால், மனிதன் எப்படி வாழ முடியும்? 'ஏதோ நம் பொறியைத் தொலைக்க வேண்டும்; பிறர் பொல்லாப்பு நமக்கு எதற்கு?' என்ற மனோபாவம் பல கணக்குப்பிள்ளைகளுக்கு இருக்கலாம். அவர்கள் மாதிரி, கண்டுங் காணாததுபோல் சில பட்டாதார்களின் ஒழுங்கீனங்களைக் கவனிக்காமல் விட்டுச் செல்லச் சுப்புரத்தினத்தால் முடியாது. இதனால்தான் சிலரிடம் அவனுக்கு மனஸ்தாபம் ஏற்பட்டது.

சர்க்கார் நிலத்தில் ஆக்கிரமித்த சாமுண்டிக்குப் பல தடவை அபராதம் போட்டாயிற்று. இப்போது அவனுக்கு 'எவிக்ஷன் நோட்டீஸ்' சாதரா செய்யச் செய்து விட்டான் சுப்புரத்தினம். இதற்காகத் துஷ்டச் சாமுண்டி இந்த வேலை செய்வான் என்று கணக்குப்பிள்ளை சுப்புரத்தினம் கனவிலும் நினைக்கவில்லை.

அன்று மாலை திரும்பி வரும்போது, குழந்தை துரைசானி...வேறு பெயர் அவளுக்கு வைக்கவில்லை; எதற்கு வைக்க வேண்டும்? அவள் துரைசானிதான். அவ்வளவு அழகு! அவ்வளவு சமர்த்து! குழந்தை துரைசானி அன்று எவ்வளவு குதூகலமாயிருந்தாள்! மனைவியும் மந்தகாசத்தோடு எதிர்வந்து நின்று வரவேற்றாள்.

"அடே செல்லா, க்ராஸ்-ஸ்டாஃபை அப்படியே குத்தி நிறுத்திவிட்டு, சங்கிலி, கோலையெல்லாம் வாசலிலே வை. எல்லாம் சேறுபட்டிருக்கின்றன. சுத்தமாய்க் கழுவ வேண்டும். அதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். முதலில் கொஞ்சம் உட்கார்ந்து இளைப்பாறு" என்றான் சுப்புரத்தினம்.

சிப்பந்தி செல்லன் அப்படியே செய்து, திண்ணையில் ஒரு கோடியில் போய் உட்கார்ந்தான். மற்ருெரு சிப்பந்தி கணக்கு மூட்டையை அதே திண்ணையில் ஒரு பக்கமாக வைத்தான்.

அவர்களுக்கு ஆளுக்கு ஒரு குவளை கெட்டி மோர் கொடுத்தாள் கணக்குப்பிள்ளையின் மனைவி.

சுப்புரத்தினத்துக்குக் காபி காத்திருந்தது. அடே யப்பா! இந்தக் காபிதான் இந்த முப்பது நாற்பது வருஷ காலத்துக்குள் எப்படி நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பரவிவிட்டது! சின்னப் பையனுய் இருந்தபோது எருமைத் தயிரும் பழையதும் அமிர்தமாய் இருந்தது போய், இப்போது கிடைக்காமல் போனுல் தலைவலியும் ஆயாசமும் கொடுக்கும் காபிப் பிசாசு வந்து சுப்புரத்தி னத்தைப் பிடித்துக்கொண்டது. இந்தக் காபியும் டீயுந் தான் எத்தனை தடவை குடிப்பது! ராத்திரி இருசால் சம்பந்தமான கணக்குகள் எழுதியாக வேண்டும். அப் போது, தெர்மாஸ் பிளாஸ்க் நிறைய டீ எந்த நேரமும் தயாராய்க் காத்திருக்க வேண்டும். எல்லாம் வேடிக்கை தான்! மனிதனுக்கு எல்லாப் பழக்கங்களுமே இப்படித் தான் வருகின்றன. நாகரிகம், பண்பாடு என்பதெல் லாமே இதேபோலத்தான்!

சுப்புரத்தினம் காபியைக் குடித்தான். 'இந்தா' என்று காய்கறிகளையும் ரோஜா மலர்களையும் மனைவி யிடம் கொடுத்தான். "அப்பாடா" என்று சாய்மான நாற்காலியில் போய்ப் படுத்துச் சற்று இளைப்பாறத் தொடங்கினுன்.

"அப்பா! அப்பா! இன்னக்கி நம் வீட்டில் பொரி விளங்காய் பிடிக்கப் போகுது" என்று மழலைக் குரலில்

8

சொல்லிக் கொண்டே, குழந்தை துரைசானி அவனுக்குப் பக்கத்தில் வந்து நின்ருள்.

" அப்படியா !" என்று கேட்டுக்கொண்டே, குழந்தையின் தலைமயிரைப் பிரிவோடு தடவிப் படிய வைத்தான் சுப்புரத்தினம்.

" ஆமாம், அப்பா. நிசம்மாச் செய்யப் போகுது. பாசிப்பயறு வறுத்து, மாவு அரைச்சுது அம்மா. வெல்லம் வாங்கியிருக்குது. கொப்பரை, ஏலக்காய் எல்லாம் நான் தான் கடையிலேயிருந்து வாங்கி வந்தேன். பாகு காய்ச்சி, மாவு போட்டு, ஏலம் கொப்பரை எல்லாம் போட்டுப் பணியாரம் பிடிச்சா, அதுதான் பொரிவிளங்காய். உங்களுக்குத் தெரியுமா, அப்பா ?"

சுப்புரத்தினம் சிரித்துக்கொண்டான். காணுமற் போன இன்னும் ஒரு டஜன் ஸர்வே கற்களைக் கண்டு பிடித்து விட்டதுபோல் அவன் உள்ளத்தில் மேலும் மகிழ்ச்சி பொங்கியது.

" சரி, போ. தலைவாரிப் பின்னி ரோஜாப் பூ வைத்துக் கொள். ஜோராய்ப் பாடத்தைப் படி. நீ சமர்த்துக் குட்டி இல்லையா ? போம்மா " என்ருன்.

" அப்பா, எனக்கு இந்த ஊரே பிடிக்கவில்லை. பட்டணத்துக்குப் போய் எப்ப அப்பா நான் படிக்கிறது ? படிச்சு டாக்டர் ஆக வேண்டாமா ?"

துரைசானி பெரிய காலேஜில் படிக்க வேண்டும் ; டாக்டர் ஆக வேண்டும் ; கார் வாங்க வேண்டும் ; பங்களா கட்ட வேண்டும். இந்த ஆசை யெல்லாம் அவளுக்குத் தாளுக வந்து விடவில்லை. அவளுடைய அம்மா சியாமளா வேடிக்கையாகச் சொல்லுவதுபோல் சொல்லிக் கொடுத்ததுதான் இத்தனையும்.

தெய்வாநுக்கிரகத்தால் இது வரைக்கும் இந்தத் துரைசானி ஒருத்திதான் அவர்களுடைய ஒரே குழந்தை. உண்மையிலேயே துரைசானியை மிக உயர்ந்த நிலைமைக்குக் கொண்டு வர வேண்டும் என்பதுதான் சுப்புரத்தினமும் சியாமளாவும் கண்டுகொண் டிருந்த ஆசைக் கனவு.

'ஏ, பி - டெஸ்டு' கள் படித்துப் பரீட்சை கொடுத்து, ஸர்வே பயிற்சி பெற்று, இவைகளே யோக்கியதாம்சங்களாகக் கொண்டு வேலைக்கு வந்தவன் அல்ல சுப்புரத்தினம். அவன் பி. ஏ. வரையில் படித்தாலும், பரம்பரையாக வந்த கணக்குப்பிள்ளை வேலையை ஏற்றுக் கொண்டான். ஊரிலே உள்ள நிலத்தை விட்டு எங்கேயும் போக அவனுக்கு விருப்பமில்லை. அதோடு கணக்குப்பிள்ளை வேலையையும் பார்த்தால் போகிறது. எதற்காக விடவேண்டும்?

கணக்குப்பிள்ளை என்றால், அந்தக் காலத்தில் கிராமத்து ராஜா மாதிரி; இல்லையென்றால், மந்திரி மாதிரியாவது வைத்துக்கொள்ளுங்களேன். மணியகாரர் ராஜா; கணக்குப்பிள்ளை மந்திரி. ஆனால், சர்வ வல்லமை உள்ள மந்திரி. அதுவும் வெண்பட்டூர் மணியகாரர் ஆடுதன் ராஜா. சுப்புரத்தினத்திடமே சகல கணக்கு வேலைகளையும் அதிகாரங்களையும் அவர் ஒப்படைத்து விட்டார். ரோஜ்வாரிகூட அவர் எழுதமாட்டார். அவருடைய குறிப்பை வைத்துக்கொண்டு முத்து முத்தான எழுத்துக்களில் அசல் ரோஜ்வாரியைச் சுப்புரத்தினமே தயாரித்து விடுவான். பட்டா எண்ணிக்கை அதிகமில்லை; முந்நூற்றுச் சொச்சந்தான். ஆகவே, எந்தக் கணக்கும் சுப்புரத்தினத்துக்கு ஒரு நொடி வேலை.

துரைசானி பொரிவிளங்காயை விட்டுப் பட்டணத்துப் படிப்பைப் பற்றிக் கேட்கத் தொடங்கியதும், சுப்புரத்தினம் சிரித்துக்கொண்டே, "சரி, தங்கம். சீக்கிரமே பட்டணம் போகலாம். இப்போது உள்ளே போய்ச் சமர்த்தாய்த் தலை பின்னிக்கொள். எனக்கு வேலை இருக்கிறது. தொந்தரவு பண்ணாதே" என்றான்.

துரைசானி பிறப்பதற்கு முன்புதான், மாமி மருகிச் சண்டை நடந்தது. அப்போது சுப்புரத்தினத்தின் அப்பா காலமாகி மூன்று வருஷம் ஆகியிருந்தது. அம்மா, இரண்டு தங்கைகள், ஒரு தம்பி இவர்களோடு தானும் மனைவியுமாக ஒரே வீட்டில் வாழ்ந்துகொண்டிருந்தான் சுப்புரத்தினம். சியாமளா நல்ல பெண்தான். அம்மா மட்டும் பொல்லாதவளா? அவளும் நல்லவள் தான். உலகத்திலே இரண்டுபேருக்குள் சண்டை வந்தால், உடனே 'ஒருவர் நல்லவர்; மற்றவர் பொல்லாதவர்' என்று தீர்ப்புக் கூறிவிட முடியுமா? அல்லது 'ஒருவர் கட்சி முழு நியாயம், மற்றவர் கட்சி முழு அநியாயம்' என்றுதான் சொல்லிவிட முடியுமா? நல்லவருக்கும் நல்லவருக்குமே சண்டை வந்து விடுகிறது; நியாமும் நியாயமுமே மோதி விடுகின்றன. மாமி மருகிச் சண்டையால் குடும்பம் இரண்டு பிளவாயிற்று. அம்மாவும் தங்கை தம்பிகளும் அடுத்த ஊரில் போய்த் தனிக் குடித்தனம் நடத்தத் தொடங்கி விட்டார்கள். இரண்டு குடித்தனங்களுக்கும் அதிகமாகப் போக்குவரத்துக் கிடையாது. திட்டமாகச் சொல்லப் போனால், மகன் மாத்திரம் வாரத்துக்கு ஒரு தடவை எப்போதாவது அம்மாவைப் போய்ப் பார்த்து விட்டு வருவான். இதைத் தவிர வேறு ஒன்றுமே - ஒரு தொடர்புமே - இந்த ஐந்து வருஷ காலமாக இரு குடித்தனங்களுக்கும் இல்லை. பேத்தியைப் பார்க்கக்

கூடப் பாட்டி வரவில்லை. ஒரு நாள் ஐந்து வயசான துரைசானியைக் கொண்டுபோய் அம்மாவுக்குக் காட்டி விட்டு வரச் சுப்புரத்தினம் யத்தனித்தான். அதைத் தடுத்துவிட்டாள் சியாமளா.

“இந்தக் கருவை வயிற்றில் சுமந்தபோதுதானே, அவருக்கு என்மீது அசூயை வந்தது? இதை அவர் பார்க்க வேண்டாம்” என்று அவள் மறித்தாள்.

“சரிதான்” என்று பெருமூச் செறிந்தான் சுப்பு ரத்தினம். அப்படியே சாகுபடி நோட்டை (அந்தக் காலத்தில் அடங்கலைத் தவிர அப்படி ஒரு புத்தகம் உண்டு) எடுத்துக்கொண்டு புலங்களைப் பார்க்கப் போய்விட்டான்.

துரைசானி மிகவும் சமர்த்து. அப்பாவின் பொறுமையை அளவுகடந்து சோதிப்பது அபாயம் என்று அவளுக்குத் தெரியும். ‘உள்ளே போய்த் தலை பின்னிக்கொள்’ என்று அப்பா சொல்லிவிட்ட பிறகு, இனி அவர் பக்கம் நிற்கக் கூடாது. உள்ளே போனாள். உள்ளாவது மண்ணாவது! அது ஒரு சிறு குடிசை. தன்னந்தனியே உள்ள குடிசை. அக்கம் பக்கத்தில் ஐந்து சங்கிலி தூரத்துக்கு வீடே கிடையாது. இந்தக் குடிசையில் வாசல் பக்கம் இரண்டு திண்ணைகள். அடுத்தாற்போல் ஒரு ஹால். கடைசியில் அந்த ஹால் நீளத்துக்கே, அகலம் சற்றுக் குறைந்திருந்த ஆளோடி தான் சமையல் உள். அந்தப் பக்கத்திலும் குட்டைச் சுவர் வைத்து உள்மாதிரி அதை அடைத்திருந்தது. புறக்கடைச் சுவரில் நிலைப்படி ஒன்றும் கிடையாது; ஒரே அடைப்புத்தான்.

உள்ளே அம்மா பொரிவிளங்காய்க்குப் பாகு காய்ச் சிக்கொண் டிருந்தாள். கொஞ்சம் தவறினால் பாகு

முறுகிவிடாதா? அப்போது மேபாய்த் தொந்தரவு செய்தால் ... ?

" அம்மா, தலை பின்னிவிடு " என்ருள் குழந்தை.

" போ அப்பாலே ! " என்று சீறிஞள் சியாமளா.

" அங்கே போனல் அப்பா கோவிக்கிருங்க. உள்ளே வந்தால் நீ கோவிக்கிறே..." என்று ஏங்கிஞள் குழந்தை.

" போகிருயா, இல்லையா ? " என்று எரிந்து விழுந் தாள் தாய்.

அப்போது அவள் என்னத்தைக் கண்டாள் ? மறு நாள் காலையில் நிகழப்போவது யாருக்குத் தெரியும் ? மறுநாள் என்ன ? அடுத்தகணத்திலே புதைந்துகிடப்பது கூடத்தான் மனிதன் அறியாத மர்மம்.

துரைசானி ஒரு போதும் பிடிவாதம் செய்யமாட் டாள். அன்று என்னவோ அவளுக்கும் புதிதாக ஒரு சண்டித்தனம் வந்தது.

" தலை பின்னி விடம்மா."

" முடியாது ; போ."

துரைசானி சற்றுத் தணிந்த குரலில், " அம்மா, கொஞ்சம் பாகு தா " என்ருள்.

" கழுதை ! அப்பாலே போ " என்று சொல்லிக் கொண்டே, பாகை இறக்கிஞள் சியாமளா. பாகு மிக நல்ல பதத்தில் இருந்தது; அவள் பயந்தது போல் முறுகவில்லை. மாவையும் மற்றப் பண்டங்களையும் அதில் கொட்டிக் கிளறி உருண்டை பிடிக்கத் தொடங்கிஞள்.

" அம்மா, எனக்கு ஒரு பொரிவிளங்காய் கொடேன்" என்று அம்மாவின் சேலைத் தலைப்பைப் பிடித்தாள்

துரைசானி. அந்தச் சமயம் பார்த்து, சியாமளாவின் கையைப் பாகு சுட்டு விட்டது.

பளீர் என்று குழந்தையின் முதுகில் ஓர் அறை வைத்தாள் சியாமளா.

துரைசானி அழுதுகொண்டே ஒரு மூலையில் போய் நின்ருள். என்ன சமாதானம் செய்தும் அப்புறம் அவள் ஓயவில்லை.

பொரிவிளங்காய் பிடித்தாயிற்று. அம்மா எல்லா வற்றையும் ஒரு வெண்கலப் பானையில் ஒவ்வொன்ரு கப் போட்டு மூடுவதைப் பார்த்தபடி அழுதுகொண்டே இருந்து அப்படியே கீழே படுத்துத் தூங்கிவிட்டாள் குழந்தை.

எல்லாமே அன்று விபரீதமாக நடந்தன: அப்பா இப்படி இந்த நேரத்தில் கோபித்துக் கொண்டதே இல்லை. அம்மா இப்படி ஒருபோதும் அறைந்ததில்லை. குழந்தை இந்த மாதிரி சண்டித்தனம் என்றுமே செய்த தில்லை. எப்போதாவது அவள் அழுதால் உடனே அவளைச் சமாதானம் செய்துவிட முடியும். அன்று அப்படி முடியவில்லை. பொரிவிளங்காயில் துளிக்கூட ருசி பார்க்காமலே குழந்தை தூங்கிவிட்டாள். அது கண்டு அம்மா, அப்பா இருவருக்கும் வேதனையாகத்தான் இருந் தது. அவர்களும் சிறிதும் அதைத் தின்னப் பிடிக்காமலே வைத்துவிட்டார்கள்.

சமையல் உள்ளை ஒழித்துவிட்டு, ஹாலுக்கு வந் தாள் சியாமளா. நடு ஹால் எப்போதும் மிகவும் சுத்த மாகவே இருக்கும். அங்கே ஒன்றும் அதிகமாக அடை சல் கிடையாது. ஆளோடிச் சமையல் அறையிலேயே ஒரு பக்கம் தட்டி வைத்துத் தடுத்துச் சாமான்களில் பெரும் பகுதியையும் போட்டிருந்தார்கள். பக்கத்தில்

இரண்டு டிரங்குப் பெட்டிகளில் சில வெள்ளிப் பாத்திரங்கள், நகை நட்டுகள், பட்டுச்சேலை, வேஷ்டிகளை வைத்துப் பூட்டியிருந்தார்கள். ஐந்தாறு மர ஷெல்புகளில் பாத்திரம் பண்டங்களை அடுக்கியிருந்தார்கள். ஒரு கோடியில் மற்றொரு தட்டி வைத்துத் தடுத்து அதற்குள் அடுப்புப்போட்டு, அருகே சிறு தொட்டி முற்றம் கட்டியிருந்தார்கள். இவையெல்லாம் போக, ஒரே ஒரு வரிசையாக ஆறு பேர் சாப்பிட இடம் உண்டு. அந்த இடத்தை மட்டும் சியாமளா எப்போதும் சுத்தமாகவே வைத்திருப்பாள். இந்தச் சமையல் உள்ளை ஒழிப்பதென்றால் ஒரு நொடி வேலை. அவ்வளவுதானே.

ஹாலில் ஒரு கட்டில். சுப்புரத்தினம் படித்த புஸ்தகங்கள் அடங்கிய மோட்டா அலமாரி ஒன்று. இந்த இரண்டும் கிடந்தது தவிர, படுக்கை வைக்கக் கட்டிய இரண்டு தூக்குகள் தொங்கின. கட்டிலில் யாரும் படுப்பதில்லை. சுப்புரத்தினத்தின் கணக்குப் புஸ்தகங்கள் தான் அதில் அடுக்கடுக்காய்க் கொலு வீற்றிருந்தன. ஒரு மூலையில் செயின், க்ராஸ் ஸ்டாஃப், கோல் முதலியவை முடங்கியிருந்தன.

ஹாலில் படுக்கையை விரித்து, துரைசானியை அதில் சியாமளா எடுத்துவிட்டாள். சிறு சிம்ணி விடி விளக்கை ஏற்றி, லாந்தரை அணைத்துவிட்டுத் தானும் படுத்துக்கொண்டாள்.

வாசல் திண்ணையில் பிரகாசமான பெரிய லாந்தரை ஏற்றி, கை மேஜை முன் உட்கார்ந்து, தன் கணக்குகளைச் சுப்புரத்தினம் பிரித்து வைத்துக்கொண்டு எழுதத் தொடங்கினான்.

பொழுது விடிந்ததும் இருசால் அனுப்ப வேண்டும். மணியகாரர் வந்துவிடுவார். கணக்கெல்லாம் தயாராக

இருந்தால் கையெழுத்தைப் போட்டுப் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போய்விடுவார். வேறு ஒரு கவலேயும் அவருக்கு இல்லே.

சுப்புரத்தினம் முதலில் ரோஜ்வாரி நகல் தயாரித்தான். பெயரேடு போன்ற பதினன்காம் நம்பர் கணக்கில் பதிந்தான். பிறகு கூடுதல் - வசூல் - அதிக வசூல்-பாக்கிப் பத்திகள் அடங்கிய பதினூரும் நம்பர் கணக்கு எழுதினுன். சிலர் மாதிரி குத்துமதிப்பாகக் கோஷ்பாரா தயாரித்து அனுப்புவது அவன் வழக்கமில்லே. ஒவ்வோர் இருசாலிலும் கரூராகக் கூடுதல் - வசூல்-பாக்கிக் கணக்கைப் பூர்த்தி செய்துவிடுவான்; அவன் கணக்கிலே அப்பழுக்குக் காண முடியாது. ஒரே ஒரு தடவை கூட்டிப் போட்டாஞைல், இம்மி பிசகாமல் கணக்குச் சரியாக வரும். சாதாரணக் கூட்டல் கழித்தலாய் இருந்தாலும் சரிதான்; 'கால்குலஸ்' கணக்காய் இருந்தாலும் சரிதான்: இரண்டும் அவனுக்கு ஒன்றே. இரண்டிலும் பூர்ண கவனமே செலுத்துவான். பதினூரும் நம்பர் கணக்கைக் கூட்டி மொத்தம் போட்டான். அதுவும் இன்று விபரீதமே செய்தது. கூடுதலேயும் அதிக வசூலேயும் கூட்டிய மொத்தம், வசூலேயும் பாக்கியையும் கூட்டிய மொத்தத்துக்குச் சரியாக வரவேண்டுமே! வரவில்லே. முதல் தடவை பத்து ரூபாய் சொச்சம் பிசகியது. பிறகு பதின்மூன்று ரூபாய் சொச்சம் வித்தியாசப்பட்டது. தொகை ஏறியது; இறங்கியது. பல தடவை கூட்டியும் தவறு நிகழ்ந்து கொண்டேயிருந்தது. அற்பக் கூட்டல்-கழித்தல்! அதிலே எட்டுத் தடவை எட்டு விடை வந்தன.

ராத்திரி மணி பன்னிரண்டு இருக்கும்; ஃப்ளாஸ்கைத் திறந்து சுப்புரத்தினம் ஒரு கப் டீ குடித்தான். அவனுக்குக் கணக்கைப் பார்த்து எரிச்சல் எரிச்சலாய் வந்தது.

டும்! டும்! டும்!

உள்ளேயிருந்து இப்படி ஒரு சத்தம் வந்தாற்போல் இருந்தது.

"சியாமளா! சியாமளா! உள்ளே என்ன சத்தம், பார்."

குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்த சியாமளா சிறிது புரண்டு படுத்து, "உம்! உங்கள் வேலையும் நீங்களும்! பாதி ராத்திரியில் இந்தப் பாடு படுத்துகிறீர்களே! பூனை எதையோ காலிப் பாத்திரத்தை உருட்டுகிறது. உள்ளே ஒன்றும் இல்லை. படுங்கள். மீதிக் கணக்கை விடிய இரண்டு நாழிகைக்கு எழுந்து எழுதினால் போகிறது" என்றாள் சியாமளா. மறுபடியும் தூங்கத் தொடங்கி விட்டாள்.

சற்றுக் காதைக் கூர்மையாக வைத்துக்கொண்டு உற்றுக் கேட்டான் சுப்புரத்தினம். சத்தம் ஒன்றும் வரவில்லை.

பிரமை! பிரமை!

சியாமளா சொன்னதும் சரிதான். விடிய இரண்டு நாழிகைக்கு எழுந்துதான் இனிக் கணக்கைப் பார்க்க வேண்டும். இப்போது மனம் சரியாக இல்லை.

விளக்குக்குப் பக்கத்திலே நெருப்புப் பெட்டியை நிதானமாக எடுக்கக்கூடிய இடத்தில் வைத்துவிட்டு, விளக்கை அணைத்தான். திண்ணையிலேயே படுக்கையைப் போட்டுக்கொண்டு படுத்தான். அயர்ச்சியால் சட்டென்று தூக்கம் வந்தது. அரைத் தூக்க நிலையில், கணக்குக் கசகல்... டும்! டும்! டும்!...குழந்தைக்கு அடி... பாவம்! பொரிவிளங்காய்...சனியனாய் வந்தது இந்தப் பணியாரம். எட்டு ஸர்வே கற்கள்...இப்படி என்ன என்னவோ சங்கதிகள் அவன் மனத்திரையிலே குறுக்கும் நெடுக்கும்

பறந்தோடின. பின் புலத்தில் ஹார்மோனியச் சுருதி போல 'டும்-டும்டும்-டும்டும்' என்று ஒரு ரீங்காரச் சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது. "சூ! சூ! மூதேவிப் பூனை! சூ" என்று முணுமுணுத்தபடி சுப்புரத்தினம் நன்ருய்த் தூங்கிவிட்டான்.

எவ்வளவு நேரம் தூங்கினுன்? அவனுக்கே தெரியாது. கனவு கினவு கண்டதாகக் கூட அவனுக்கு நினைவில்லை. கண்ட கனவுகூடத் தெரியாத ஆழ்ந்த தூக்கம். அரை நாழிகை நேரங்கூடத் தூங்கியிராதது போலவே அவனுக்குத் தோன்றியது. டைம்பீஸைப் பார்த்தபோது தான் மணி ஐந்து என்று தெரிந்தது.

திண்ணையில் ஒரு புறம் செம்பில் இருந்த தண்ணீரைக் கொண்டு முகங்கழுவி வாய் கொப்புளித்துக் கண்ணை நன்ருய்த் துடைத்துக் கொண்டு ஒரு வாய் டீயைப் ஃப்ளாஸ்கிலிருந்து ஊற்றிக் குடித்தான். மனம் இளநீரைப் போல் தெளிந்திருந்தது. கணக்கை எடுத்து வைத்துக்கொண்டு, விட்ட இடத்தில் தொட்டு வேலையைக் கவனித்தான். பதினைந்தே நிமிஷத்தில் கணக்கெல்லாம் சுத்தமாய் முடிந்தது. மொத்தமெல்லாம் போட்டு, இருசால் நாமாவும் எழுதி வேலையைப் பூர்த்தி செய்தான்.

மணியகாரர் வர வேண்டியது; கையெழுத்தைப் போட வேண்டியது. அவ்வளவுதான் பாக்கி. உடனே இருசாலைத் தலையாரி மூலம் அனுப்பிவிடலாம். இல்லை, இல்லை. இந்தத் தடவை தொகை பெருந்தொகை. ஒருவனுக்கு இருவராக இருப்பது நல்லது. வெட்டியையும் கூடவே அனுப்ப வேண்டும். எட்டு மைல் தூரத்தில் உள்ள தாலுக்கா கஜானுவுக்கு நடந்தே போய்ப் பணத்தை அவர்கள் செலுத்திவிட்டு வரவேண்டும். பஸ்

முதலிய போக்குவரத்து வசதி இல்லாது உள்ளடங்கி ஒதுங்கிய கிராமம் வெண்டயட்டூர்.

மனத்திலே ஒரு நிம்மதியுடன் "அப்பாடா!" என்று மணைமீது சாய்ந்து ஆசுவாசமாக உட்கார்ந்தான் சுப்பு ரத்தினம். இருள் பிரிந்து பொழுது பலபல என்று புலர்ந் தது. சேவல் கூவியது. காக்கைகள் கரையக் குருவிகள் கீசுகீசென்று கீச்சிட்டுப் பறந்தன.

காலைக் காபி சம்பந்தப்பட்ட மட்டில் பட்டணத்து வழக்கமே இவர்கள் வீட்டில் புகுந்திருந்தது. கிராமங் களிலே அநேக வீடுகளில் காலைக் காபியைக் காண மணி எட்டோ ஒன்பதோ ஆகிவிடுமே. அப்படி இல்லை சியாம ளாவின் வீட்டில். ஐந்தரை மணிக்குப் பால் வரும். ஆறு மணிக்குள் சியாமளா காபி தயாரித்து விடுவாள். பால் வருவதற்கு முன்பே பல்துலக்கி, அடுப்புமூட்டி, நீர்பொங்க விட்டு, டிகாக்ஷன் போட்டுத் தயாராய்க் காத்திருப்பது சியாமளாவின் வழக்கம்.

மணையிலே சாய்ந்த சுப்புரத்தினத்தின் கண்கள் கெஞ்சின. மறுபடியும் தூங்கவேண்டும் போலிருந்தது அவனுக்கு. அந்தச் சமயத்தில் திடுதிப்பென்று வீட்டுக் குள்ளேயிருந்து சியாமளாவின் கூக்குரல் கேட்டது.

"ஐயையோ! எல்லாம் போச்சே! குடிமுழுகிப் போச்சே! உள்ளே வந்து பாருங்களேன்" என்று அவள் கத்தினாள்.

பதறியவனாய் "என்ன! என்ன! என்ன!" என்று கேட்டுக்கொண்டே உள்ளே ஓடினான் சுப்புரத்தினம்.

என்னத்தைச் சொல்ல! ஆளோடிச் சமையலறை யின் பின்புறச் சுவரிலே குட்டியானை நுழையக் கூடிய அளவு கன்னம் வைத்திருந்தது. ஒரு சாமான் இல்லை; ஒரு பாத்திரம் இல்லை. பழையதுப் பானையும் மற்றும்

சில மண்சட்டி பானைகளுந்தான் பாக்கி. டிரங்குப் பெட்டிகள், பாத்திரம் பண்டங்கள் மூதலிய பிற பொருள்கள் அனைத்தையும் வறட்டிக்கொண்டு போய் விட்டான் கள்ளன்.

"ஐயோ! இன்று அடுப்பிலே உலைவைக்கக் கூட ஒரு பாத்திரம் இல்லையே!" என்று கண்ணீர் விட்டாள் சியாமளா.

சுப்புரத்தினத்துக்கு இது யார் வேலை என்று புரிந்து விட்டது. போக்கிரிச் சாமுண்டியைத் தவிர வேறு யார் இந்தக் காரியம் செய்திருக்கப் போகிறார்கள்? சந்தேகமே இல்லை; அவன்தான்.

ஒரு வாய்க் காபிக்கு வழி இல்லாமலே பொழுது நன்றாய் விடிந்துவிட்டது. மணியகாரர் வந்தார். விஷயத்தை அறிந்து பெரிதும் வருத்தப்பட்டார். "உடனே போலீஸுக்கு ரிபேர்ர்ட் எழுதுங்கள். கையெழுத்துப் போடுகிறேன்" என்றார். அப்போதெல்லாம் பஞ்சாயத்து போர்டு இல்லை. மணியகாரரேதான் கிராம முன்சீப்பு, மாஜிஸ்டிரேட் எல்லாம். சுப்புரத்தினம் "ஒன்றும், வேண்டாம்" என்று சொல்லிவிட்டான்.

எதற்காகவும் சர்க்கார் காரியம் நிற்கலாமா? ஒழுங்காக இருசால் அனுப்பியாயிற்று.

நாழிகை ஆக ஆக ஊர் முழுவதும் செய்தி பரவி விட்டது. ஊரே திரண்டு வந்துவிட்டது. அத்தனை பேரும் அநுதாபம் தெரிவித்தார்கள். வேண்டிய உதவி செய்ய அத்தனை மக்களும் முன்வந்தார்கள். எதையும் ஏற்கச் சுப்புரத்தினத்துக்கு மனம் சம்மதிக்கவில்லை. அது தேவைப்படவும் இல்லை.

செய்தி அடுத்த ஊரில் உள்ள தாயாருக்கும் எட்டி, அவள் ஒரு பெரிய ப்ளாஸ்க் நிறையக் காபியும், டிபின்

பாக்ஸில் உப்புமாவும் எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தாள். 'தான் ஆடாவிட்டாலும் தன் சதையாடும்' என்பார்களே, அது பொய்யல்ல.

அவளைக் கண்டதுமே, "மாமீ! மாமீ!" என்று கத்திக்கொண்டு ஓடி வந்து, அவள் காலில் விழுந்து நமஸ்கரித்தாள் சியாமளா.

கண்ணீர் சொரிந்தபடி அவளை வாரித் தூக்கி நிறுத்தி, "கவலைப்படாதே, சியாமளா! குழந்தை எங்கே? காபி டிபனைச் சுப்புவுக்குக் கொடு. நீ சாப்பிடு. என் துரைசானி எங்கே?" என்றாள் சுப்புரத்தினத்தின் தாய்.

சுப்புரத்தினத்துக்கு ஒரு பக்கம் பெருந் துயரம் இருந்தாலும் மறு பக்கம் அளவற்ற ஆனந்தம் உண்டாயிற்று. சிருஷ்டியிலே வேதனை இருப்பதுபோல, துன்பத்திலே இன்பம் பிறக்கிறது. மாமியும் மருகியும் ஒற்றுமைப்படத் தெய்வம் செய்த சூழ்ச்சி இது என்றே அவன் எண்ணினான்.

"துரைசானி! துரைசானி! இதோ பார், உன் பாட்டி வந்திருக்கிறாள்!" என்று கூவினான் சுப்புரத்தினம்.

ஆளோடிச் சமையலறையில் கண்ணோட்டம் விட்டுக்கொண்டிருந்த குழந்தை, "பாட்டியா? பாட்டீ! பாட்டீ!" என்று கூப்பிட்டுக்கொண்டே ஓடி வந்தாள்.

பாட்டி அப்படியே இரு கையும் நீட்டி ஏந்தி வரவேற்றுத் துரைசானியைக் கட்டி யணைத்து மடியில் இருத்தி "என் கண்ணு!" என்று சொல்லிப் பல முறை முத்தமிட்டுக் கொண்டாள்.

"பாட்டி, பாட்டி, எங்க வீட்டிலே திருடன் வந்தான், பாட்டி. நான் ஒரு பொரிவிளங்காய் கூடத் தின்னல்லே, பாட்டி. அத்தனை பொரிவிளங்காயையும் அவனே திருடிக்

கொண்டு போய்விட்டானே?" என்று முகஞ் சிணுங்கி அழுதாள் குழந்தை.

நேற்றுத் துளிப் பாகுகூடக் குழந்தைக்குக் கொடுக்கவில்லை; பொரிவிளங்காய் கேட்டதற்குக் குழந்தையை அம்மா அடித்தாள். இப்போது வெண்கலப் பானையோடு பொரிவிளங்காய் போய்விட்டது! 'பாவி, அந்தப் பானையையாவது விட்டுச் சென்றிருக்கக்கூடாதா?' என்று நினைத்தபோது, சியாமளாவின் இருதயம் வெடித்து விடும்போல் இருந்தது.

"போனால் போகிறது, தங்கம். இன்னிக்குச் சாயந்தரமே உனக்கு வேண்டுமென்கிற பொரிவிளங்காய் செய்து தருகிறேன்" என்றாள் பாட்டி.

இரண்டாக இருந்த குடும்பம் மீண்டும் ஒன்றாயிற்று.

"இனி எனக்கு இந்தக் கணக்குப்பிள்ளை வேலை வேண்டாம்" என்று ராஜீநாமாச் செய்யப்போனான் சுப்புரத்தினம்.

மணியகாரரும் கிராமத்து மக்கள்-சாமுண்டியைத் தவிர மற்றக் குடியானவர்கள்-அனைவரும் அப்படிச் செய்யக்கூடாது என்று அவனை மன்றாடிக் கேட்டுக் கொண்டார்கள்.

சாமுண்டியை ஊராரே சேர்ந்து தண்டிப்பதாகச் சொன்னார்கள். "அது மாத்திரம் வேண்டாம். அதனால் என்ன லாபம்? உங்களுக்காக வேலையை நான் தொடர்ந்து பார்க்கிறேன்" என்று வாக்களித்தான் சுப்புரத்தினம்.

சாமுண்டியை யாரும் தண்டிக்கவில்லை. ஆனால், சில நாளைக்கெல்லாம் அவனை ஊரிலே யாரும் காணவில்லை. அக்கரைச் சீமைக்கோ, வேறு எங்கேயோ அவன் ஓடி விட்டதாகச் சொல்லுகிறார்கள். எங்கே என்று திட்டமாக அறிந்தவர் மட்டும் எவரும் இல்லை.

முனியம்மா பந்தயம்

அப்பாவும் அம்மாவும் எப்போது ஊருக்குப் போனாலும், நானும் மதனியும் அண்ணா குழந்தைகளும் மட்டும் வீட்டில் தனியே இருக்க நேரிடும். அண்ணாவின் உத்தியோகம் என்றுமே - வருஷத்தில் ஒன்பது மாதத்துக்குக் குறையாமல் - சுற்றுப் பிரயாணத்தில் சென்றுவிடும். சொல்லப் போனால் கிராமத்தில் அவனை அந்த மீதி மூன்றுமாத காலத்தில் கூட முழுவதும் பார்க்க முடியாது; சில சனி ஞாயிறுகளில்தான் பார்க்க முடியும். பக்கத்துப் பட்டணத்திலே அவனுக்கு வேலை. ஒரு பெரிய சோப்புக் கம்பெனியின் பிரயாணப் பிரதிநிதி அவன்.

ஓர் உறவினர் வீட்டில் நடக்கும் விசேஷத்துக்காக இந்தத் தடவை அப்பாவும் அம்மாவும் புறப்பட்டார்கள். இரண்டு பேருக்கும் வயசாகிவிட்டது; ஆகவே, கோயில், குளங்களில் சற்று அதிகப் பிரேமை. "போகிறதுதான் வெகுதூரம் போகிறோம்; அப்படியே சில திவ்ய தேசங்களில் பெருமாளையும் ஸேவித்துவிட்டு வருவோம்" என்று சொல்லிக்கொண்டே அப்பா கிளம்பினார்.

வீட்டிலே பெரியோர் இல்லாதபோது எனக்கு வெகு ஆனந்தம். மதனி புதிது புதிதான சமையல்

பரீட்சைகளை ஆரம்பித்து விடுவாள்; வேளைக்கு வேளை சோறு கிடைக்காமல் போனாலும், நவ நவமான பட்சண பலகாரங்கள் எனக்குக் கிடைக்கும். பகல் முழுவதும் நான் சீட்டாடப் போகலாம். இரவிலே நெல்லுக்காரக் கிழவி வந்து விதம் விதமான கதைகள் சொல்லுவாள்.

ஆமாம்; அந்த நெல்லுக்காரக் கிழவியைப்பற்றித் தான் இன்று எனக்கு ஞாபகம் வந்தது. சின்னஞ் சிறிசுகளான எங்களுக்கு இராத்துணை வேண்டாமா? அதற்காக அவள் எங்கள் வீட்டுத் திண்ணையிலே வந்து படுத்துக் கொள்வாள்.

நெல்லுக் குத்திப் பிழைக்கிறவள் அவள். அதனால் தான் அவளுக்கு நெல்லுக்காரக் கிழவி என்று பெயர் வந்தது. பரட்டைத் தலை; ஒன்றரைக் கண்; வாளிப்பான சரீரம். 'வுவ் வுவ் வுவ்' என்று வாய் கொஞ்சம் நடுங்கும். இருந்தாலும், கதை சொல்லத் தொடங்கி விட்டாளானால், அந்த நடுக்கலெல்லாம் எங்கேயோ பறந்து போய் விடும்.

அவளுக்கு எத்தனையோ கதை தெரியும். கதைக்குக் கதை அவளுக்கு வித்தியாசமில்லை. ராமன் கதையும் சொல்லுவாள்; வீமன் கதையும் சொல்லுவாள்; தன் 'சிற்றப்பார்' கதையும் சொல்லுவாள். எல்லாக் கதையும் 'நடந்த நடப்பு'த்தான் அவளுக்கு. அவள் சொல்லுகிற கதையை நாம் 'உம்... உம்' என்று கேட்டுக் கொண்டே யிருக்கவேண்டுமே யொழிய, இடையிலே சந்தேகம் கேட்கக்கூடாது. கேட்டால் அவளுக்குப் பிடிக்காது.

"போகாத ஊருக்குப் போகவழி கேட்டதம்பி
பாகாயினித்த கதை பதம்பார்க்க எண்ணுவையோ?"

என்று பிலாக்கணக் குரலில் ஒரு பாட்டுப்பாடி, "அதுக்கு உனக்கு வயசு பத்தாது, தம்பி; பத்தாது" என்று நம்மை வாயடைத்து விடுவாள்.

எதற்கெடுத்தாலும் கதைதான். உபமானமாக எத்தனையோ கதை. நம்முடைய சகல பழக்க வழக்கங்களுக்கும் காரணமான பல கதை தெரியும் கிழவிக்கு. சகுனத்துக்குக் கதை; சாஸ்திரத்துக்குக் கதை; பூஜைக்குக் கதை; நியாயத்துக்குக் கதை - இப்படி எத்தனையோ கதை.

முன்னிலாக் காலம். எனக்கும் குழந்தைகளுக்கும் சாதம் போட்டு, தன் சாப்பாட்டையும் முடித்து விட்டு, உள் ஒழித்துக் கொண்டு, வாசல் திண்ணைக்கு வந்து சேர்ந்தாள் மதனி.

ஒட்டுத் திண்ணையில் என் படுக்கையைப் போட்டேன். பெரிய திண்ணைக் கோடியில் கிழவி ஒரு கந்தல் பாயை விரித்து, அதில் உட்கார்ந்து, தன் சேலை நுனியில் போட்டிருந்த 'பொளகு வெத்திலை' முடிச்சை அவிழ்த்தாள். ஆனால் அதில் ஒன்றும் இல்லை.

பெரிய குழந்தை சௌந்தரம் தரையிலே ஒரு தலையணை மீது தலைவைத்துப் படுத்தான். ஒரு துணியை விரித்து, சின்னக் குழந்தை மைதிலியை அதில் விட்டு முதுகில் தட்டிக் கொண்டே, "என்ன கிழவி, நாளைக்கு மைசூர்ப்பாகு கிளறவேண்டும். காலையில் வந்து நாலு தேங்காய் உரித்துத்தா" என்றாள் மதனி.

"அப்படிச் சொல்லாதே, தங்கச்சி; அப்படிச் சொல்லாதே" என்றாள் கிழவி.

"எப்படிச் சொல்லப்படாது?"

'காலையிலே வா' என்று சொல்லக் கூடாதாம். 'பிழைத்து முளைத்திருந்தால் காலையிலே வா' என்றே சொல்ல வேண்டுமாம். இதை விளக்கினாள் கிழவி.

"ஏன்?" என்று நான் கேட்டேன்.

"ஏனா? சொல்லுகிறேன். ஒரே ஒரு வெற்றிலைச் சருகு இருந்தால், எடுத்துவா" என்றாள் கிழவி.

உள்ளே போய் ஐந்தாறு வெற்றிலையையும் ஒரு பாக்கு வெட்டலையும் எடுத்துவந்து அவளிடம் கொடுத்தேன்.

வெற்றிலையைக் கிழவி சுண்ணாம்பு தடவிப் போட்டு மென்றுகொண்டு, சிறிது புகையிலையையும் வாய்க் கதுப்பில் அடக்கிக் கொண்டு, சொல்ல ஆரம்பித்தாள்:

"நாளைக்கு அதைச் செய்வேன், இதைச் செய்வேன் என்று மனிதன் கருவமாய்ப் பேசக் கூடாது. பேசினால், சாமிக்குப் பொறுக்காது.

நாளையென்றும் நேற்றென்றும்
நாம் சொல்லும் காலமெல்லாம்
நச்சரவம் பூண்ட சிவன்
நாட்டியத்தில் பூத்தமலர்.

நாளையும் நேற்றும் நமக்குச் சொந்தம் இல்லை.

"எங்கள் பெரியப்பாவின் மகன் ஒருத்தன் இருந்தான். அவனுக்குச் சின்னக் கறுப்பன் என்று பெயர். அவன் மகா துணிச்சல்காரன். நூறு சால் தண்ணீரை நொடிப் போதில் இறைச்சிடுவான்; தொண்ணூறு பசு மாட்டைத் துரத்தி வந்து கட்டிடுவான்; எட்டடுக்கு மாளிகையில் ஏணி வைத்து ஏறிடுவான். வீமன் மாதிரி கட்டுமஸ்தாயிருப்பான்; சோமன் மாதிரி குளுமையாய்ப் பேசுவான்..."

கிழவி வர்ணித்தாள். நான் 'உம்' போட்டுகொண்டே யிருந்தேன். மதனியும் சௌந்தரமும் சுவாரஸ்ய மாய்க் கேட்டுக் கொண்டிருந்தார்கள். மைதிலி மட்டும் ஹார்மோனியச் சுருதி போலக் குரலிழுத்துக் கொண் டிருந்தாள்.

சின்னக் கறுப்பனை வர்ணித்து முடித்தாள் கிழவி. கதையைத் தொடர்ந்தாள் :

"இளங்காளை கறுப்பனுக்கு ஏற்ற பெண் ஒருத்தி எங்கள் அத்தைக்குப் பிறந்திருந்தாள். பச்சைக்கிளி அவள் ; பார்த்த கண் பூத்திடும் பாவை. வேலைக்கு அஞ்ச மாட்டாள். விளையாட்டில் மிஞ்சிடுவாள். பிச்சியம்மன் திருவிழாவில் அவள் கும்மியடித்துப் பாடினுல், ஊர்ப் பய லெல்லாம் தலை கறங்கிப் போவான். முனியம்மா என்று அவள் பெயர். சின்ன வயசு முதலே முனியம்மாவும் சின்னக் கறுப்பனும் ரொம்பச் சிநேகமா யிருப்பார்கள். ஓயாமல் கேலியும் விளையாட்டுமா யிருப்பார்கள். சின்னக் கறுப்பனைக் கலியாணம் கட்டிக்கப் போகிறவள் முனி யம்மாதான் என்று ஊரறிய நாடறியத் தீர்மானம் ஆகி விட்டது.

"ஒரு நாள் சின்னக் கறுப்பனுக்கும் முனியம்மாவுக் கும் ஒரு போட்டி வந்தது. 'இருபது சால் தண்ணீர் இறைத்தால், எங்கள் மச்சான் இளைத்துப் போகும்!' என்ருள் முனியம்மா. 'சலிக்காமல் சோராமல் இருநூறு சால் தண்ணீர் நான் இறைப்பேன். ஆனுல், எங்கள் அத்தை மகள், ஈரேழு பாத்திக்குத் தண்ணீர் கட்டுவதற் குள் கை ஓய்ந்து போவாள்' என்ருன் சின்னக்கறுப்பன். 'பார்ப்போமா. என்ன பந்தயம்?' என்று கேட்டாள் முனியம்மா. 'நான் தோற்ருல் சந்நியாசியாக இருந்து விடுகிறேன். நீ தோற்ருல் . . ?' என்று அவன் கேட்

டான். ' நான் தோற்ருல், கன்னியாயிருந்து விடு கிறேன் ' என்ருள் இவள். பக்கத்தில் இருந்தவர்களெல் லாம் சிரித்துவிட்டார்கள். ' ஏதப்பா இது ? யார் தோற் ருலும் யார் கெலிச்சாலும், ஒருவன் சந்நியாசி ; ஒருத்தி கன்னிப் பெண். இப்படி இல்லையா முடியும் போல் இருக் கிறது ! இந்தச் சபதம் சரியில்லை ' என்று நாட்டாண் மைக்காரர் வீட்டு வில்லப்பன் சொன்னுன். என்ன இருந் தாலும் முனியம்மா நல்ல கெட்டிக்காரப் பெண் இல் லையா ? ' என்ன அண்ணே, உளறுகிறே ? இரண்டு பேரும் கெலிச்சிடுவோம். அப்போது…?' என்ருள். அப்போதும் வில்லப்பன் கொல் என்று சிரித்தான் ; ' பெண் தயார்தான். மாப்பிள்ளை மனசு எப்பிடியோ ?' என்ருன். முனியம்மாவுக்கு வெட்கமாய்ப் போச்சு. தலை குனிந்தாள்.

" சின்னக் கறுப்பன் வீரசிங்கம் மாதிரி தலை நிமிர்ந்து, ' நாளைக் காலை விடிய ஜாமப்போது இருக்கையில் உருளை யும் சால் கயிறும் எடுத்துவர்றேன். வந்து முனியம் மாவைக் கூப்பிடுறேன். அவள் மண்வெட்டி எடுத்து வரட்டும் : சோளக் கொல்லைக்குத் தண்ணீர் இறைச்சுப் பார்த்துவிடலாம் ' என்ருன். முனியம்மா கொஞ்சங் கூடத் தயங்கவில்லை. ' சரி ' என்ருள். ஆச்சா ! . . "

கிழவி சற்று நின்ருள். வாசலில் தலைவிரித்து ஆடிக் கொண்டிருந்த தென்ன மர மட்டையின் நிழல் கிழவியின் முகத்தில் கருங்கோலம் போட்டது.

" அப்புறம் என்ன, கிழவி ? சொல்லேன் " என் றேன்.

"வுவ் வுவ்…குளிர் நடுக்குது. பல்லெல்லாம் போச்சு. உசிரை இனிமேல் எதற்காக வெச்சுக்கணும் ?

பாவி மகள் வாழ் வெல்லாம்
பஞ்சாகப் பறந்ததுவே;
கூவிடுமிக் குயிலிசையைக்
கோபாலன் கேட்பானே ?"

இதுதான் அந்தக் கிழவியிடம் உள்ள ஒரு துர்க் குணம். கதை சொன்னால், அதை நேராய், தொடர்பாய், அழகாய்ச் சொல்லுவதில்லை. இடையிடையே பலவிதச் சேஷ்டைகள் செய்வாள் ; பாட்டு வேறு பாடக் கிளம்பி விடுவாள். எனக்கு இதெல்லாம் பிடிப்பதில்லை. மதனியோ எனக்கு நேர் மாறானவள். அவளுக்கு இதெல்லாந்தான் ரொம்பப் பிடிக்கும்.

"சரி, சரி, சரி..." என்று நான் சலிப்புடன் சொன்னேன்.

"அட இரேண்டா ; சொல்லட்டும். பாட்டை முழுக்கச் சொல்லு, கிழவி" என்றாள் மதனி.

அதுவும் பலிக்காது கிழவியிடம். அவள் சொன்னால் சொன்னதுதான் ; நிறுத்தினால் நிறுத்தினதுதான் ; தொடர்ந்தால் தொடர்ந்ததுதான்.

கிழவி 'ஹ¬ங்' என்று முனகிவிட்டு, "தங்கச்சி, நீ ஆயிரங் காலத்துப் பச்சை. பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழணும். ராஜாத்தியாக இருக்கணும். நான் பட்ட மரம். கதையும் பாட்டும் ! ஹ¬ங் ! என்னவோ சொல்லுகிறேன் ! காடு அழைக்குது ; வீடு அனுப்ப மாட்டேன் என்குது" என்றாள்.

நானும் பேசவில்லை ; மதனியும் பேசவில்லை. இனி மேல் கிழவி தானாக இஷ்டப்பட்டால்தான் கதை தொடரும். ஒரு பத்திரிகாசிரியர் கேட்டவுடனே இப்போதெல்லாம் நான் பறந்து பறந்துகொண்டு கதை தயாரிப்ப

தைப்போல அவள் செய்யமாட்டாள். இது எங்களுக்குத் தெரியும்.

நல்ல வேளையாக, கிழவிக்குச் சில நிமிஷத்தில் நல்ல மனசு வந்தது. கதையைத் தொடர்ந்தாள்.

"சித்திரை மானம் சுட்டுக் கொளுத்துது; வையாசி மானம் வறண்டு கிடக்குது; கார்த்திகை மானம் காய்ஞ்சு கிடக்குது - இப்படி என்று சொல்லுவார்கள். அது கார்த் திகை மாசம். மானத்திலே பொட்டு மேகம் கிடையாது. முனியம்மா படுத்திருக்கிருள். எங்கே? வீட்டு நடு முற்றத்திலே. பூர்ணிமைக்கு முதல் நாள். பால்போலே நிலாக் காய்ந்துகொண்டிருக்குது. ஈ, காக்கை மூச்சுப் பறியவில்லை. எல்லாரும் ஆழ்ந்து தூங்குகிருர்கள். எங்கும் 'கம்' என்று அடங்கிக் கிடக்குது.

"வாசலிலே யிருந்து, 'முனியம்மா, முனியம்மா' என்று ஒரு சத்தம் கேட்டது. அவள்தான் 'இன்னிக்கு ஒரு கை பார்த்துப் பிடறது' என்ற நினைப்போடே படுத் திருக்கிருளே. நல்ல தூக்கம் ஏது? சட்டென்று கண் விழித்துவிட்டாள். வாசலிலே வேலிக்குப் பக்கத்திலே ஆள் நிற்கிறதைக் கதவு இடுக்கால் கண்டாள். தலை யிலே பெரிய மண்சால்; தோளிலே மர உருளை; கட்கத் திலே தாம்புச் சுருள்; கையிலே கல் பாரம் - இவை களோடு நிற்குது அந்த ஆள். 'இதோ வந்துவிட்டேன் மச்சான்' என்று சொல்லி, பெரிய மண்வெட்டி ஒன்றைத் தூக்கிக்கொண்டு முனியம்மா கிளம்பினுள். கொஞ்சம் குளிராய் இருந்தது. ஒரு துப்பட்டியை எடுத்துத் தலை யையும் உடம்பையும் போர்த்துக்கொண்டு அவள் வாச லுக்கு வந்தாள். ஆள் திரும்பிப் பார்க்கவேயில்லை; வேகமாக முன்னுல் நடந்தது. பின்னுலே போனுள் முனியம்மா. 'என்ன, மச்சான்? இங்கேயே இவ்வளவு

வேகம் ?' என்று சிரித்துக்கொண்டே, ஆளைக் கேட்டாள். பதில் இல்லை. எப்படி எப்படியோ அவள் பேச்சுக் கொடுத்தாள் ; கேலி செய்தாள். ஒன்றுக்கும் பதில் இல்லை. 'மச்சான் இப்பவே சந்நியாசியாகத் தீர்மானிச்சிட்டதுபோல் இருக்கு' என்றாள்.

" 'ஹிங்' என்று ஓர் உறுமல் வந்தது ; வேறே பேச்சில்லை. 'சரி ; பார்க்கலாமே இன்னிக்கித்தான்' என்று சொல்லிக்கொண்டே முனியம்மாவும் நடந்தாள்.

"கொல்லைக்குள்ளே நுழைஞ்சாச்சு. ஆள் உயரம் சோளப் பயிர் 'இள இள்' என்று வளர்ந்து கிடக்குது. பால் கொண்டை திரண்டிருக்குது ; இன்னும் முற்றவில்லை. பயிருக்கு நடுவே ஆள் நடக்கிறதே தெரியாது. முந்தின நாள் தண்ணீர் இறைத்தபோது, கிணற்றடிக்குப் பக்கத்திலே முதல் பாத்தியிலிருந்து தண்ணீர் கட்டினவள் முனியம்மாதான். அதனாலே இன்றைக்குக் கடைசிப் பாத்தியிலே யிருந்து தண்ணீர் கட்டவேண்டும். ஆள் பேசாமல் கிணற்றடிக்குப் போச்சு. முனியம்மாவும் பிகுவாகவே கடைசிப் பாத்தியிலே போய் நின்றாள். என்ன ஆச்சரியத்தைச் சொல்கிறது ! அவள் போய் நிற்பதற்குள்ளே தண்ணீர் பெருக்கெடுத்தோடி வந்தது. ஒரு பாட்டில்லை ; ஒரு வசனமில்லை. மச்சான் சின்னக் கறுப்பனா தண்ணீர் இறைக்கிறான் ? கொள்ளை கொள்ளையாய்ப் பாடுவானே ! 'இன்னிக்கி ரோஷத்திலே பாட்டுக்கூட வரல்லைபோலிருக்குது !' என்று சொல்லிக் கொண்டே, 'மடக்கு மடக்கு' என்று முனியம்மா தண்ணீர் கட்டினாள். ஒரு பாத்தி வாயில் மண்ணைத் திருப்பிப் போட்டு நிமிர்வதற்குள்ளே அது நிரம்பிப் போகுது. தண்ணீர் அப்படி வருகுது.

காவேரி வெள்ளம்
 கரைபுரண்டு வருகுது ;
குடமுருட்டி வெள்ளம்
 கோலமாய் வருகுது ;
வையைநதி வெள்ளம்
 வழிந்தோடி வருகுது ;
வாய்க்காலில் வெள்ளம்
 வள்ளலென வருகுது.

"பத்துப் பாத்தி கட்டி முடிவதற்குள் வாய்க்கால் உடைப்பெடுத்து விட்டது. முனியம்மா பயந்துபோனாள். 'இது மச்சான் இல்லே ; மனிசனே இல்லே. ஒரு பிசாசு. அதுதான் தண்ணீர் இறைக்குது' என்று எண்ணினாள். இந்தப் பிசாசிடம் எப்படித் தப்புவது ? முனியம்மாவுக்கு ஒண்ணும் புரியல்லே..."

இந்தச் சமயம் பார்த்து, மைதிலி திடுக்கிட்டுப் பயந்ததுபோல், 'வீல்' என்று கத்தினாள்.

"வேண்டாண்டி அம்மா, என் தாயி. வேண்டாண்டி" என்று அதைச் சமாதானப்படுத்தத் தொடங்கினாள் மதனி.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வெகு நேரம் சென்றுவிட்டது. "மைதிலியை உள்ளே கொண்டுபோய்த் தூளியில் விட்டுத் தூங்கப்பண்ணிவிட்டு வருகிறேன். அதுவரையில் கதையைச் சொல்லாதே, கிழவி. இதோ வந்துவிட்டேன்" என்று சொன்னாள் மதனி. குழந்தையுடன் உள்ளே போனாள்.

கிழவியும் "சரி, தங்கச்சி" என்று சொல்லி, ஒரு வெற்றிலைச் சுருளை வாயில் போட்டு மெல்லத் தொடங்கினாள்.

மதனி சில நிமிஷ நேரத்தில் வெற்றியுடன் திரும்பினாள். மைதிலி தூங்கிவிட்டாள். ஆனால், கதை

தொடரவில்லை. இங்கே கிழவி பலமாய்க் குறட்டைவிட்டுக்கொண்டிருந்தாள்.

"சரிதான்; நாளை ராத்திரிதான் மீதிக் கதையைக் கேட்க வேண்டும்" என்று சொல்லி, "அடே சௌந்தரம், தரையிலே கிடக்காதே. பாயைப் போட்டுக்கொள்" என்று எச்சரித்தாள் மதனி.

சௌந்தரம் 'உம்' என்று முனகிக்கொண்டே பாயில் படுத்தான். மதனி உள்ளே போனாள். நானும் தூங்கிவிட்டேன்.

2

மறுநாள் ராத்திரி நிலா இன்னும் கொஞ்சம் நன்றாய்க் காய்ந்தது. வளர்பிறைச் சந்திரன் இல்லையா?

கிழவி வழக்கப்படி திண்ணையில் வந்து படுத்தாள். சௌந்தரம் 'தவளை கத்துவ'தை - அதுதான் பாடம் படிப்பதை - நிறுத்திவிட்டு வாசலுக்கு வந்து சேர்ந்தான். நல்ல வேளையாக இன்று மைதிலி முன்னதாகவே தூங்கிவிட்டாள். மதனி பெரிய திண்ணையில் வந்து உட்கார்ந்தாள். ஒட்டுத் திண்ணையில் என் படுக்கையை விரித்து, காலைத் தொங்கவிட்டு நான் அமர்ந்தேன்.

"அப்புறம் என்ன கிழவி? கதையைச் சொல்" என்று நான் கேட்டேன்.

"கொஞ்சம் இரப்பா. தொண்டையெல்லாம் எதுக்களிச்சு வருது. வயிற்றைக் குமட்டுகிறாற்போல் இருக்குது. அந்த முருங்கைக் கீரையும் தவிடுமாய்ப் போட்டுக் கிண்டித் தின்னது இந்தப் பாடு படுத்துது. ரவை மோர் இருந்தால் கொடேன், தங்கச்சி" என்றாள் கிழவி.

பக்க வாத்தியங்களோடு கதை செய்யும் பாகவதருக்குச் சீனுக் கல்கண்டு (இப்போது மறைந்துபோன வஸ்து), கிராம்பு எல்லாம் கொடுக்கிறோம்; கிழவிக்கு மோராவது கொடுக்கக் கூடாதா? மதனி கொடுத்தாள்.

அதைக் குடித்து விட்டு, "அப்பாடா! இப்பத்தான் கொஞ்சம் வாய் சரிப்பட்டுது. கீரையும் தவிடும் வயிற்றுக்குத்தான் ஆகுமா? பசியைத்தான் அடக்குமா? தலை கூடச் சிறிது கிறுகிறுத்தாற்போல் இருந்தது. இப்ப தேவலை" என்றாள் கிழவி.

"ஆமாம்; ஏன் சோறு தின்னவில்லை?" என்று மதனி கேட்டாள்.

கிழவி வாய்க்குள்ளே குமுறிக்கொண்டு ஒரு சின்னச் சிரிப்புச் சிரித்தாள்.

"சோறு? சோற்றுக்கென்ன பஞ்சம்?

கள்ளியிலே சோறு;
கற்றாழையில் சோறு;
புல்லரிசி பொறுக்கிப்
பொங்கினா லுஞ் சோறு.

"மகராசன் போனான்; என் மகிமையும் போச்சு. புவி ராசன் போனான்; என் புலமையுந்தான் போச்சு. வீட்டுக்காரர் போனதிலே யிருந்து இந்தக் கஷ்டந்தான். இல்லாவிட்டால் இப்படியா நெல்லுக் குத்துவேன்?" என்று குறை யிரந்தாள் கிழவி.

பிறகு, அவளாகவே, "அது கிடக்குது. நேற்று என்ன சொன்னேன்?..." என்று கேட்டாள்.

"தண்ணீர் இறைப்பது மச்சான் அல்ல என்று முனியம்மா நினைத்தாள். பிசாசு என்று பயந்தாள்..." என்று அவள் விட்ட இடத்தை எடுத்துக் கொடுத்தேன்.

" ஆமாம் ; அப்படிப் பயந்தாள்.
பழையனூர் நீலிக்குப்
பலியானன் செட்டி மகன்.

அது மாதிரி பலியாவாளா இவள் ?..." என்று தொடங்கினள் கிழவி.

" அதென்ன கதை ?" என்று கேட்டாள் மதனி.

" அதுதான் உலகறிந்த கதையாச்சே. அதை இன்ஞெரு நாள் சொல்லுகிறேன். இதைக் கேள். முனியம்மா நல்ல அறிவுள்ள பெண். மண் வெட்டியைக் கீழே 'பதன' மாக நட்டாள். தன் மேலே போர்த்திருந்த துப்பட்டியை எடுத்தாள். மண்வெட்டிக்கு அழகாகப் போர்த்துவிட்டாள். தலைகீழாய் நட்ட மண்வெட்டியின் இலை மேற் பக்கம் இருந்ததா ? அது மனிசன் தலை மாதிரி தோன்றிற்று. துப்பட்டி போர்த்ததும் அசல் ஆள் உட்கார்ந்திருப்பதுபோல் ஆச்சு. முனியம்மா துளிச் சந்தடி செய்யாமல், இலைகளை விலக்கிக் கொண்டு, பூனைபோல் பதுங்கிப் பதுங்கி நடந்தாள். கொல்லையை விட்டு வெளியே வந்தாள். திரும்பிப் பார்க்காமல் ஓட்டமாய் ஓடினுள். இதை ஞாபகம் வெச்சுக்கோ தங்கச்சி· பிசாசுக்குப் பயந்தோடினல் திரும்பியே பார்க்கக் கூடாது. பார்த்தால் போச்சு ; ஒரே அறையாய் அறைந்து போடும்.

" முனியம்மா வீடு போய்ச் சேர்ந்தாள். அவள் மார்பு 'விதுக்கு விதுக்குன்'னு அடிச்சுக்குது. வாய்பேச முடியவில்லை. யாரையாவது எழுப்பக்கூடத் துணிவில்லை. வாசல் கதவை மெதுவாய்ச் சாத்தி, தாழ்ப்பாளைக் கெட்டியாகப் போட்டாள். பழையபடி படுக்கையில் படுத்தாள். ஆனல், நல்ல தூக்கம் வருமா ? அதுதான் இன்னும் எட்டு நாளைக்கு வராதே. பெருமூச்சு விட்டுக்கொண்டு

புரண்டு புரண்டு அவள் படுத்திருக்கிருள். இங்கே இப்படியா? அங்கே பிசாசு என்ன செய்தது?...'' என்று கிழவி சற்று நின்று கொட்டாவி விட்டாள்.

"சொல்லு" என்றேன் நான்.

இந்நேரம் அரைத்தூக்கம் தூங்கித் தலையாடி விழுந்த சௌந்தரம் "ஊ - உ - உ! அறைய வரது" என்று உளறினான்.

"இந்தாடா, மூதேவி. நீ இந்தக் கதை யெல்லாம் கேட்க வேண்டாம். உள்ளே போய்த் தூங்கு" என்று அவனை மதனி விரட்டினாள்.

"ஊம். நான் மாட்டேன்" என்று சொல்லிய அவன் நகரவில்லை.

கிழவி மறுபடியும் தொடர்ந்தாள். "பிசாசுக்குப் புத்தி ஏது? அது 'பர பர' என்று தண்ணீர் இறைத்தது. கொல்லை எல்லாம் ஒரே வெள்ளக் காடாய்ப் போச்சு. 'ஏ முனியம்மா, என்ன சரியாத் தண்ணி கட்டலே?' என்று கேட்டது. முனியம்மா இருந்தால் அல்லவா பதில் சொல்லுவாள்? பேச்சில்லை. பிசாசு சாலை அப்படியே கிணற்றில் நிறுத்திவிட்டு, ஓடி வந்தது. போர்த்திருந்த மண்வெட்டியைப் பார்த்து, 'என்னடி முட்டாக்கு? தலையை நிமிர்' என்றிருக்கிறது. மண்வெட்டி எப்படி நிமிரும்? அது இருந்தபடி இருந்துவிட்டது. பிசாசு பலம் கொண்டமட்டும் விட்டது ஓர் அறை. மண்வெட்டிக் கழி இரண்டு துண்டாய்ப் போச்சு..."

"ஆமாம், கிழவி; இதை எல்லாம் கூட இருந்து யார் பார்த்தார்கள்?" என்று நான் கேட்டேன்.

"ஆத்திரப்படாதே, தம்பி. முன்னமே சொன்னேனே.

நல்லதோர் கதையினுக்கே
நாலுகால் இல்லை என்பார்;
வல்லமை யில்லாதவரே
வக்கணையாய்ப் பேசிடுவார்.

பிசாசுக்குத்தான் கால் இல்லை; கதைக்குக் கால் உண்டு. ஆனால், அது உனக்குத் தெரிகிறபோதுதான் தெரியும். பிசாசு இப்படி யெல்லாம் செய்தது பின்னாலே உனக்குத் தெரியும்...''

"நீ பாட்டுக்குச் சொல்லு, கிழவி. உனக்குத்தான் தெரியுமே, அவன் குயுக்தி எல்லாம்'' என்றாள் மதனி.

"மண்வெட்டி உடைந்தது. பிசாசு ஏமாந்து போச்சு. இந்தச் சங்கதி யெல்லாம் சின்னக் கறுப்பன் கண்டானா? ஜாமக் கோழி கூவினதும், அவன் எழுந்தான். ஒழுங்காய்ச் சால் கயிறுகளைச் சுமந்து கொண்டு முனியம்மா வீட்டுக்கு வந்தான். கதவைத் தட்டி, 'முனியம்மா, முனியம்மா' என்று அழைத்தான். வந்தது சின்னக் கறுப்பனா? இல்லா விட்டால் பிசாசுதான் மறுபடியும் வந்ததா? இப்படி யெல்லாம் முனியம்மாவுக்குச் சந்தேகம் உண்டாச்சு. அது நியாயந்தானே. அவள் பேசாமல் கமுக்கமா யிருந்தாள். கறுப்பன் கதவை உடைத்து விடப் போகிறவன் போல் இடித்தான்; திரும்பத் திரும்ப அழைத்தான். முனியம்மாவின் ஆயாள் விழித்துக் கொண்டாள். 'முனியம்மா, மருமகப் பிள்ளை கூப்பிடுதே; காதிலே விழல்லே?' என்று எழுப்பினாள். 'நீ சும்மா இரு, ஆயா' என்று முனியம்மா அவளை வாயடைத்தாள். 'ஏ பயந்தாங்கொள்ளி முனியம்மா?' என்று கத்தினான் கறுப்பன். கடைசியாக மனசைத் திடப்படுத்திக் கொண்டு, 'யார் அது?' என்று கேட்டாள் முனியம்மா. 'நான்தான் உன் மச்சான்'

என்ருன் கறுப்பன். 'மச்சாஞ மச்சான்! உங்க சங்கதி தெரியும் எனக்கு. போது விடிஞ்சு வாருங்க, பார்த்துக்க லாம்' என்ருள் முனியம்மா. கறுப்பனுக்குக் கோபம் கோபமாய் வந்தது. 'சை! இவ்வளவுதாஞ உன் வீரூப் பெல்லாம்! தெரிஞ்சு போச்சு உன் பவிசு. இனி மேல் உன் முகத்திலே முழிக்க முடியாது. வார்த்தையைக் காப்பாத்தாத பெண்ணேடே வாசகம் ஏது?' என்று சொல்லி, 'தூர்!' என்று காரி உமிழ்ந்துவிட்டு, கறுப்பன் திரும்பிப் போய்விட்டான். முனியம்மாவுக்கா அவமானம் தாங்க முடியவில்லை. 'என்ன ஆனலும் சரி; இது பிசாசாகவே இருந்தாலும் சரி. ஆறிலும் சாவு, நூறி லும் சாவு' என்று துணிந்தாள். பாய்ந்தெழுந்து வாசல் கதவைத் திறந்தாள். தெருவைப் பார்த்தாள். கறுப்பன் இதற்குள் வெகுதூரம் போய்விட்டான்; கண்ணுக்கு எட்டாத தூரம் போய்விட்டான். முனியம்மா என்ன செய்வாள்? வாசலிலே ஓடிப் போய்ப் பார்க்க லாமா என்று நினைத்தாள். பயம் முழுக்கப் போக வில்லை. என்ன இருந்தாலும் பெண்தானே! 'பொழுது விடிஞ்சா, எல்லாம் பார்த்துக் கொள்ளலாம்' என்று எண்ணிஞள். மறுபடியும் உள்ளே போய்ப் படுத்தாள். உடம்பு களைத்துப் போயிருந்ததா? கண் கெஞ்சியது. தூங்கிவிட்டாள். நல்ல தூக்கம்.

தூக்கமான தூக்கம்—அது
துயரமொழி தூக்கம்
பாற்கடலில் தூக்கம்—அது
பரமனவன் தூக்கம்

கும்பகருணன் தூக்கம்—அது
குடிகெடுக்கும் தூக்கம்
உம்பரவர் தூக்கம்—அது
உரம்கொடுக்கும் தூக்கம்.

அது எனக்குத்தான் வரமாட்டேங்குது. முனியம்மா தூங்கிஞள். வெள்ளி முளைத்தது. கோழி கூவியது.

போது விடிந்தது. ஆயாள் பழங்கஞ்சி குடிக்கக் கூப்பிட்டபோதுதான் முனியம்மா எழுந்து பல் துலக்கி முகம் கழுவினுள். என்னவோ அரைகுறையாய்க் கஞ்சி குடித்தாள். அவள் மனசிலே ஏறியிருக்கிற சுமையிலே கஞ்சி எங்கே பிடிக்கும்? ஓடினுள் சின்னக் கறுப்பன் வீட்டுக்கு. 'வெச்ச சபதம் வெச்சதுதான்; பிடிச்ச விரதம் பிடிச்சதுதான்' என்று அவன் சொல்லி விட்டான்; சரியாய் முகம் கொடுத்தே பேசவில்லே. பிசாசு வந்த சங்கதியெல்லாம் இவள் சொன்னுள். 'இதெல்லாம் வீண் பேச்சு; இந்தக் குட்டி என் கிட்டக் கதை அளக்கிருள்' என்று அவன் சொன்னுன்.

"இந்தச் சமயத்தில் நாட்டாண்மைக்கார வீட்டு வில்லப்பன் அங்கே வந்து சேர்ந்தான்; அவன் என்ன செய்திருக்கிருன்? இந்த ஜோடி சபதம் கூறினபோது கூட இருந்தவனு? அது என்ன ஆகிறது என்று பார்க்க எண்ணியிருக்கிருன். காலங் கார்த்தாலே எழுந்திருந்து சோளக் கொல்லேப் பக்கம் போயிருக்கிருன். கொல்லே முழுக்க ஒரே வெள்ளக் காடாயிருக்குது. துணி போர்த்தின மண் வெட்டிக் கழி உடைஞ்சு கிடக்குது. ஆனுல், ஆள் இரண்டும் கண்ணிலே தட்டுப்படவில்லே. 'இதென்ன வேடிக்கை!' என்று நினேத்து, கறுப்பனுடைய வீட்டுக்கு வந்திருக்கிருன். இரண்டு பேரையும் சேர்ந்தாற்போல் பார்த்ததும், அவனுக்கு என்ன தோணிச்சோ, தெரியவில்லே. 'என்ன, அண்ணே! முகூர்த்தப் பேச்சா நடக்குது. முனியம்மா சொன்னது போலே இரண்டுபேரும் கெலிச்சிட்டாப் போலிருக்கு?' என்று கண்ணேச் சிமிட்டிக் கொண்டே கேட்டான். 'என்னடா சில்லறைப் பரிகாசம் பண்ணுகிறே?' என்று கோபத்தோடு சொன்னுன் கறுப்பன். 'ஆமாம், இனிமேல் பரிகாசம் பண்ணுமல் விடுவாங்களா? கலியாணப்

பெண்ணையும் மாப்பிள்ளையையும், முகூர்த்தம் நடந்து முடிகிறவரைக்கும் எல்லாருந்தான் பரிகாசம் பண்ணு வாங்க' என்ருன் வில்லப்பன். 'டேய்! சும்மா போடா. இல்லே, எனக்குக் கெட்ட கோபம் வரும்' என்று அதட்டினுன் கறுப்பன். வில்லப்பனுக்கு இது ஒண்ணும் புரியல்லே. சற்று நின்று விசாரித்த பிறகு தான் சங்கதி தெரிந்தது. 'அண்ணே, நான் நேரே பார்த்தேன். முனியம்மா சொல்கிறது நிஜந்தான். கொல்லே யெல்லாம் ஒரே வெள்ளமாயிருக்கு; மண் வெட்டி முரிஞ்சு கிடக்கு' என்ருன். 'இரண்டு பேரும் பேசிக்கிட்டு, இந்தக் கதை கட்டியிருக்கீங்களா? இதெல்லாம் யாருக்குக் காதுகுத்த? என்கிட்டப் பலிக் காது' என்ருன் கறுப்பன். 'அண்ணே, இப்படிச் சொல்லாதே. இப்பவே நேரே கொல்லேயைப் போய்ப் பார்க்கலாம். வா' என்ருன் வில்லப்பன். கறுப்பன் கொஞ்சம் விதண்டாவாதம் பண்ணிவிட்டுப் பிறகு சரி என்று சம்மதித்தான். மூன்று பேரும் சோளக் கொல் லேக்குப் புறப்பட்டார்கள்......அடி ஆயர்......என்ன அசதியா வருது. தங்கச்சி, மீதிக் கதையை நாளேக்குச் சொல்லுகிறேன்'' என்று நின்ருள் கிழவி.

எனக்கு எரிச்சல் வந்தது. பத்திரிகைக்காரர்கள் செய் வது மாதிரி நல்ல கட்டத்தில் கதையை நிறுத்திஞல் எப்படி எரிச்சல் வராமல் இருக்கும்?

"கிழவி, நீ சொல்வதோ பிசாசுக் கதை. நாளேக்கு, அண்ணு வந்துவிடுவான். அவனுக்கு இந்தப் பிசாசு, பேய் என்ற பேச்செல்லாம் பிடிக்காது. கதை முரிஞ்சு போகும். நீயே ஒரு தடவை சொல்லியது ஞாபகம் இருக்கா? 'அரைகுறையாய்க் கதை சொன்னவன்

ஆந்தையாய்ப் பிறப்பான்' என்ருயே?" என்று மிரட்டினேன்.

"எனக்கு இப்போதேதான் ஆந்தைக் கண். அது வாகவே பிறக்கவும் வேண்டுமா? உன் தங்க வாயால் 'பிடி சாபம்' என்ளுதே, தம்பி. சொல்லுகிறேன். ஆனுலும் பெரிய கதை. ஒரு நாளில் முடியாது. ஒரு பச்சை மிளகாய் இருக்குதா, தங்கச்சி. துளிக் கடிச்சுக் கிட்டால் தூக்கம் போகும்" என்ருள் கிழவி.

மதனி எழுந்தாள்.

"அப்படியே இரண்டு உப்புக் கல்லும் கொண்டு வா. வெறும் மிளகாயைக் கடிக்க முடியாது."

மிளகாயும் உப்பும் வந்து சேர்ந்தன.

முழு மிளகாய் ஒன்றை உப்புடன் கடித்து விழுங்கி விட்டு, "இ ஸ் ஸ் ஸ் ...... உ ஸ் ஸ் ஸ் ......" என்று நாக்குப் பட்டையிடக் கதையைக் கிழவி தொடர்ந்தாள் :

"இவர்கள் கிளம்பிஞர்கள். ஆனுல், இதற்குள்ளே பிசாசு என்ன செய்தது? அது பகலிலே உருவத் தோடேதான் வரமுடியாது; மற்றப்படி எல்லாம் செய்யும். இவர்கள் பேச்சையெல்லாம் கேட்டுக் கொண் டிருந்தது. குடு குடு என்று பறந்தோடி, மண் வெட் டியை மறைத்தது; கொல்லே வெள்ளமெல்லாம் காய்ந்து போகச் செய்தது. இவர்கள் அங்கே போய்ச் சேர்ந் தார்கள்; பார்த்தார்கள். வில்லப்பனும் முனியம்மாவும் திடுக்கிட்டுப் போனுர்கள். 'அடேடே! மண் வெட்டி யைக் காணல்லியே! இந் நேரத்தில் யார் இங்கே வந் திருப்பாங்க?' என்ருன் வில்லப்பன். 'அடேயப்பா! என்ன பாசாங்கு! மண் வெட்டிதான் போச்சு; பூமி ஏன் ஏழு நாளேக்குமுன் தண்ணி இறைச்சது மாதிரி வறண்டு கிடக்குது?' என்று ஏளனமாய்ப் பேசினுன்

கறுப்பன். முனியம்மா, வில்லப்பன் இரண்டு பேரும் சேர்ந்து சூழ்ச்சியாய்க் கட்டி விட்ட அண்டப் புளுகு இது என்றே அவன் எண்ணிவிட்டான்.

"பிறகு யார் யாரோ வந்து பஞ்சாயத் தெல்லாம் செய்து பார்த்தார்கள். 'நான் என்ன தப்புச் செய்திருந் தாலும் என்னை மன்னிச்சிடு' என்று முனியம்மா எவ் வளவோ கெஞ்சினுள். ஒண்ணுக்கும் கறுப்பன் மசியல்லே. 'ஐயோ! ஏன்தான் இந்தப் போட்டி போட்டேன்!' என்றெல்லாம் அவள் புலம்பினுள். போட்டியினுலேயா கெடுதல் வந்தது? கறுப்பன் வாயிலே சனியன் புகுந் தான்; 'நாளைக் காலையிலே நான் வர்றேன்' என்று கருவமாய்ப் பேசினுன். வந்தது தொல்லே.

முத்துச் சிவிகையிலே
　　மோகன மாய்ப் போவேன்;
பத்துச் சிவிகையிலே
　　பாங்கிமார் பின்வருவார்.

தந்தச் சிவிகையிலே
　　தளுக்கியே நான் போவேன்;
சிந்தும் எழில்மயில்போல்
　　சேடிமார் பின்வருவார்.

மாமன் மகன்வந்து
　　மாட்சியாய்க் கைபிடிப்பான்;
காமன் தனை விஞ்சும்
　　கட்டழகென் கண்ஒளிரும்.

பூப் போட்ட பந்தலிலே
　　பொன்னுடை போர்த்திட்டுக்
காப்பிட்ட கையதனுல்
　　கட்டிடுவான் நற்ருலி.

இப்படி யெல்லாம் பல விமர்சைகளோடு தனக்குக் கலியாணம் நடக்கும் என்று கோடித் திருந்த முனி யம்மா நினைப்பில் இடி விழுந்தாற் போலாச்சு. 'ஒன்று, உன் மனசு மாறி, உன்னையே நான் கலியாணம் கட்

டிப்பேன்; இல்லையோ, கன்னி கழியாமலே, காலங் கழிப்பேன்' என்று அவனிடமே சொல்லி விட்டுக் கண்ணீரோடு அவள் வீடு வந்து சேர்ந்தாள்...... இவ்வளவுதான், தங்கச்சி. இனிமேல் என்னை நீ அடிச்சுப் போட்டாலும் சரி. மீதிக் கதை நாளைக்குத்தான்" என்று சொல்லிக் கிழவி நிறுத்தினாள். அடுத்த நிமிஷமே குறட்டை விட்டுக் கொண்டு தூங்கி விட்டாள்.

3

மூன்றாவது நாள் அண்ணன் நல்ல வேளையாக வரவில்லை. அப்பா, அம்மாவைப் பற்றியோ கவலை இல்லை. அவர்கள் வர ஒரு மாதமோ ஒன்றரை மாதமோ எவ்வளவானாலும் ஆகும். கடிதம் மட்டும் வந்து கொண்டேயிருக்கும், என்னைச் 'சமர்த்தா யிருக்க' ச் சொல்லி.

வழக்கப்படி நில வொளி திண்ணையில் வீச, மதனி யும் நானும் கதை கேட்கத் தயாரானோம். கிழவி 'பொளகு வெத்திலே' மென்று தொண்டையைச் சீர் படுத்திக் கொண்டாள்.

"என்ன தம்பி, சித்தமா யிருக்காப் போலிருக்கு... அதிருக்கட்டும். நீ துடைப்பம் வைத்துக் காகிதத்தில் அழிக்கிறாயே, அது எங்கே யிருந்து வருகுது? உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"ரப்பரைத் தானே சொல்லுகிறாய்? புஸ்தகங்களில் படித்திருக்கிறேன். சிலவித மரங்கள் இருக்கின்றனவாம். அவைகளின் பட்டையை நறுக்கிவிட்டால் பால் வருமாம். அந்தப் பாலை எடுத்துத்தான் ரப்பர் செய்கிறார்களாம்" என்றேன்.

"ஏது! தம்பிக்கு எல்லாம் தெரிஞ்சிருக்கு!" என்ருள் கிழவி.

"கதையைச் சொல்லு; இந்த வம்பெல்லாம் எதற்கு?" என்று நான் ஆவலாய்க் கேட்டேன்.

"கதைக்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கு. அதனுல் தான் இந்தப் பேச்சை எடுத்தேன்.

கங்காணிச் சின்ஞனும்
கறுப்பியும் கூடிக்கொண்டு
சிங்காரச் செல்வனையே
சிக்கவைத்தார் கப்பலிலே.

"இது என்ன தெரியுமா? இந்த ஊரிலே அந்த நாளில் சின்ஞன் என்று ஒரு கங்காணி இருந்தான்; கறுப்பி என்று ஒரு பெண் கங்காணி இருந்தாள். அவனுக்கும் கலியாணம் ஆகவில்லை; இவளுக்கும் கலியாணம் ஆகவில்லை. ஆனுல், இரண்டுபேரும் தொட்டுத் தாலிகட்டிய புருஷன், பெண்சாதி மாதிரிதான் ஒரே வீட்டில் வாழ்ந்தார்கள். இந்தக் கங்காணி என்ருலே ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கணும், தம்பி. இப்போது கூட அடுத்த ஊரிலே ஒரு கங்காணி இருக்கிருன். அவன் சில சமயம் இந்த ஊருக்கு வருவான். அவன் எத்தனையோ பசப்புவான். உன்னைக்கூட அழைத்தாலும் அழைப்பான். ஏமாந்து போகாதே......"

கிழவி இப்படி எச்சரித்த காலத்தில் நான் சின்னஞ் சிறு பையன். அதற்குப் பிறகு எத்தனையோ வருஷங்கள் ஆகிவிட்டன. வெளி நாடுகளில் கூலிவேலை செய்யக் கிராம வாசிகளைச் சேர்த்தனுப்புவதற்காக அந்த நாளில் கங்காணிகள் ஏராளமாக உண்டு. அவர்கள் பிடித்து அனுப்பும் ஓர் ஆளுக்கு இத்தனை ரூபாய் என்று கணக்கிட்டு, கங்காணிகளுக்குக் கமிஷன் கொடுப்பார்களாம்.

" சரி, கிழவி. அந்தக் கங்காணிகளைப்பற்றி இப்போ தென்ன ? அவர்கள் கறுப்பனைப் பிடித்து அக்கரைச் சீமைக்கு அனுப்பி விட்டார்களோ ?"

" ஆமாம், தம்பி. அதுதான் சொல்ல வந்தேன். சின்னனும் சரி, கறுப்பியும் சரி, 'ஊரிலே எந்தப் பயலைப் பிடிக்கலாம்; எந்தக் குட்டியை லாவலாம்' என்று ஒரே குறிப்பாயிருப்பார்கள். யார் வீட்டிலாவது 'கலசல்' என்றால், உடனே இரண்டு பேருக்கும் வெகு குஷி. அங்கே போனால் 'இரை' கிடைக்கும் என்று அவர்களுக்கு நிச்சயமாய்த் தெரியும். மெல்லப் போய் 'வலை' விரித்து விடுவார்கள். சின்னக் கறுப்பனுக்கும் முனியம்மாவுக்கும் மனவாட்டம் வந்துவிட்டது என்று தெரிந்ததும், சின்னனும் கறுப்பியும் அவனுக்குக் 'கண்ணி' வைக்க ஆரம்பித்தார்கள்.

"எங்கள் பெரியப்பாவுக்கு என்ன நினைப்பு? தம் தங்கை மகளைத்தான் கறுப்பனுக்கு எப்பாடுபட்டும் கட்டி வைக்கவேணும் என்று அவர் உறுதியா யிருந்தார். 'இதென்ன சுத்த முட்டாள்தனம்! தண்ணியிறைக்கிற தாம்; அதுக்குப் பந்தயமாம். அது நடக்கல்லியாம். அதுனலே அந்தப் பெண்ணைக் கட்டிக்க முடியாதாம்! அத்தறுதியா இதோடே விட்டுப் போச்சா ? தங்கச்சி உறவை நான் உதறிவிட முடியுமா ? நீ அந்தப் பெண்ணைத்தான் தாலி கட்டணும். இல்லே, என் முகத்திலே முழிக்காமல் போக வேண்டியதுதான்' என்று கறுப்பனை ஓயாமல் அலட்டிக்கொண் டிருந்தார். இரண்டு நாளைக்கொரு வாட்டி வீட்டிலே பெரிய சச்சரவுதான். கறுப்பன் சோறே தின்ன மாட்டான். இந்த நிலையிலே மெல்லக் கறுப்பி வருவாள். கறுப்பனைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துப் போவாள். அங்கே சின்னனும் கூடிக் கொள்வான். கறுப்பனுக்குப் பெரிய உபசாரம் எல்லாம் நடக்கும். ஊர்க்

கதையெல்லாம் பேசுவார்கள். இடையிலே 'இது என்ன எளவு ஊரு? ஒரு மங்குஸ்தான், ஒரு கிச்சிலி ஏதாவது ரெண்டு பழம் உண்டா? மானம் கண்திறந்தாப் போச்சு. இல்லே, திண்டாட வேண்டியதுதான். பச்சை மிளகாயைக் கடிச்சிக்கிட்டு, சோளக் கூழோ, கம்பங் கஞ்சியோ கொட்டி வயித்தை நிறைச்சுக்க வேண்டியதுதான். ஒரு சுகமில்லே?' என்பான் சின்னன். 'ஆமாம், வாங்களேன். போவோம், அடுத்த வாரக் கப்பலுக்கு; தம்பியையும் வேணுமானல் அழைச்சிக்கிட்டுப் போவோம். எனக்குந் தான் பிடிக்கல்லே இந்த ஊரு' என்பாள் கறுப்பி.

"அந்த மலாயாவிலே அப்படி இருக்கும், இப்படி இருக்கும் என்று ரொம்ப வர்ணனையாய்ச் சொல்லுவார்கள். வெள்ளைக்காரத் துரைக்குத் தங்கள் இரண்டு பேரிடமும் வெகு பிரியமாம். இரண்டு பேரையும் சீமைக்கே வந்துவிடும்படி சொல்லுவாராம். பை பையாய்ப் பணம் கொடுப்பாராம். நாலு ரப்பர் மரத்திலே பால் எடுத்தால் போதுமாம். அந்த வேலை ஓடுகிற ஓட்டமாம்; வெகு சுளுவாயிருக்குமாம். 'தம்பி மாதிரி ரெண்டு எழுத்துத் தெரிஞ்சவங்க, அதுகூட என்னத்துக்குச் செய்யவேணும்? மத்தவங்க எடுக்கற பாலையும் மரங்களையும் கணக்கு வெச்சுக்கிட்டாப் போகுது. போனவுடனே மேஸ்திரி வேலை. பின்னலே கங்காணி. அதுலேயும் ரெண்டு கோணை எழுத்துத் தெரியும் தம்பிக்கு. தம்பியைத் துரை தலையிலே வெச்சுக்கிட்டுக் கொண்டாட மாட்டாரா?' என்பாள் கறுப்பி. 'அது சரித்தான். அதுக்கு என்ன ஆட்சேபம்?' என்பான் சின்னன்.

"வீட்டிலே அப்பாவின் தொண தொணப்புச் சள்ளை தாங்கவில்லை. இனி இந்த ஊரிலே இருக்கத் தோதுப் படாது என்று எண்ணினன் சின்னக் கறுப்பன். ஏன்

மலாயாவுக்குப் போகப்படாது? போய் விடுவது என்று தீர்மானித்தான். போனால்தானே தெரியும், தம்பி, அந்தப் பவிசு? எத்தனையோ பேர் மலாயாவுக்குப் போன கதை எனக்குத் தெரியும்.

"முதலில் ரெயிலிலே நாகப்பட்டணம் போக வேணும். அங்கே போனால், ஒரு பெரிய காம்பவுண்டு. அதிலே இவர்களையெல்லாம் ஏழு நாளைக்கு ஆடுமாடு மாதிரி அடைச்சுப் போடுவார்கள். அம்மை மருந்தெல்லாம் குத்துவார்கள். போடுகிற சோறோ சொல்லத் தரமில்லை. எத்தனை பேர் வாயிலெடுப்பார்கள்! எத்தனை பேர் தப்பியோடி வருவார்கள்! ஏழெட்டு நாள் இந்த ஜெயிலிலே இருந்த பிறகு, கப்பல் வந்து, ஐம்பது அறுபது பாகைக்கு அப்பாலே கடலில் நிற்கும். படகிலே இவங்களை ஏற்றிக் கப்பலுக்கு அனுப்புவார்கள். அப்போதே அந்த அலையையும் ஆட்டத்தையும் பார்த்துப் பல பேருக்கு வாந்தியும் மயக்கமும் வந்துவிடும். கப்பலேறியாச்சு.

கப்ப லுந்தான் புறப்படுது
காலை யிள வெயிலில்
கட லலையைப் பெருவாள்போல்
கன மிடுக்காய்க் கீண்டே.

"கப்பல் புறப்படுகிறது. ஏழெட்டு நாள் பிரயாணத்துக்குப் பிறகு அக்கரைச் சீமை போய்ச் சேரும். அங்கே சில சடங்கெல்லாம் நடந்த பிறகு, ரப்பர்த் தோட்டத்திலே கூலிகளாய் இவர்களை வேலை செய்யச் சொல்வார்கள். அதில் எத்தனையோ இக்கட்டு. சில துரைகள் வெகு கஷ்டப்படுத்துவார்களாம். நான் போனதில்லை, தம்பி. எல்லாம் சொல்லக் கேள்விதான். அப்பா, உற்றார் உறவினர் யாரிடமும் 'சொல்லாமல் கொள்ளாமல்' இந்த

அழகான வேலையைத் தேடிக் கொண்டு சின்னக் கறுப்பன் போய்விட்டான்.

" ஊரிலே எல்லாரும் பட்ட வருத்தம் சொல்லி முடியாது. குடும்பத்துக்குக் கண் அவன்; ஊருக்கு உசிர் அவன். யார்தான் வருத்தப்படமாட்டார்கள்? எல்லாரையும்விடப் பெருங் கஷ்டப்பட்டவள் முனியம்மாதான். சின்னனும் கறுப்பியும் தங்களுக்கு ஏதுமே தெரியாதுபோல் பாசாங்கு செய்தார்கள். ஆனால் ஊராருக்கு அவர்கள் மேலேதான் சந்தேகம். அவர்களைத் திட்டாதவர் இல்லை. பெரியப்பா நாகப்பட்டணத்துக்கெல்லாம் ஆள் அனுப்பிப் பார்த்தார். எப்படித்தான் ஒளிந்துகொண்டு கறுப்பன் போனானோ? அவன் அகப்படவில்லை. அக்கரைச் சீமைக்கே போய்விட்டான். அங்கேயிருந்து கடிதாசு போட்ட பிறகுதான் அவன் இருக்கும் இடம் தெரிந்தது. கடிதாசு மாத்திரமா போட்டான்? ஆறு மாசத்துக்கெல்லாம் இருநூறு ரூபாய் பணமும் அனுப்பினான். நம் ஊரில் அக்கரைச் சீமைக்குப் போன யாரானாலும் அனுப்புகிற பணத்தைப் பெரிய வீட்டுப் பிள்ளைக்குத்தான் அனுப்புவார்கள். இது 'வளமை'. இப்படியே கறுப்பனும் அனுப்பினான். இங்கே முனியம்மா தவித்துக்கொண்டிருந்தாள். அத்தைக்கோ - அதுதான் முனியம்மாவின் தாய் - அவளுக்கு ரொம்ப ரோஷம் வந்துவிட்டது. 'இவன்தான் பெரிய மனிசனோ? வீரத்திலே அருச்சுனன், பெருமையிலே இந்திரன், அழகிலே மன்மதன்! போக்கணங்கெட்ட பயல். என் மகளைக் கட்டிக்கக் கொடுத்துவைக்கலே இவனுக்கு. அவளைக் கட்டிக்க எத்தனையோ ராசா காத்துக் கிடக்கிறான். இந்த வருசமே கலியாணத்தை நடத்திப்புடுறேன்' என்று வீறாப்புப் பேசினாள். முனியம்மா மனசை அவள் அறியவில்லை. இதனாலே

இந்த வீட்டிலேயும் கொஞ்சம் கொஞ்சம் ‘ கலசல் ’ ஏற்பட்டது.

“ கலகம் உண்டான இடத்திலே தம்புராவை மீட்டிக்கிட்டு நாரத முனிவர் வந்து தோன்றிவிடுவார் இல்லையா ? முனியம்மாவின் வீட்டுக்குக் கறுப்பி வரத் தொடங்கினாள். அவளுக்குப் பின்னாலே சின்னானும் வந்து சேர்ந்தான். ஆனால், இங்கே முனியம்மாவிடம் அவர்களுடைய பேச்சு எடுபடவில்லை. அத்தையைப் பிடித்துவிட்டார்கள். அவள் மனசை நன்றாய்க் கரைத்தார்கள்.

கரைப்பார் கரைத்தால்
    கல்லுந்தான் கரையாதோ?
உரைப்பார் உரைத்தால்
    உள்ளந்தான் உருகாதோ?

தீயிட்ட செம்பொன்
    திண்ணெனவே இளகாதோ?
வாயிட்ட சீனியும்
    வந்திடுமோ பின் திரும்பி?

“ முனியம்மாவின் தாய், வறட்டுத்தனமாய்ப் பேசினாளே தவிர, மருமகனுக்கிக் கொள்ள எந்தப் ‘புள்ளி’யையும் குறித்துக் கொள்ளவில்லை. கறுப்பியும் சின்னானும் அந்த வேலையைத்தான் மேற்கொண்டார்கள். முதலில் அவர்கள் முனியம்மாவையும் அக்கரைச் சீமைக்கு அனுப்பிவிடலாம் என்று முயன்றார்கள். அவளோ இவர்களோடு பேசக்கூட மறுத்துவிட்டாள். ‘ இருக்கட்டும் இந்தக் குட்டியைச் சரியான தொழுவில் மாட்டிவிட வேண்டும் ’ என்று அவர்கள் வருமம் வைத்தார்கள். இதற்கு ஓர் ஆளையும் பிடித்தார்கள். அவன் வேறு யாரும் இல்லை; நாட்டாண்மைக்கார வீட்டு வில்லப்பன்தான் ... உம் ...

தம்பி, உனக்குத் தூக்கம் வரவில்லையா? உனக்கென்ன? நீ சின்னஞ் சிறிசு. எனக்கோ வயசாச்சு. கண்ணைச் சுழட்டுது...''

அவ்வளவுதான். இனிப் பலிக்குமா? கிழவி கதையை மறுநாளைக்கு ஒத்திப் போட்டுவிட்டாள்.

4

அன்று காலையில் அண்ணன் வந்துவிட்டான்.

நல்ல சந்தன சோப்பு ஒரு 'பாக்கட்' வாங்கி வரும்படி மதனி சொல்லியிருந்தாள். அண்ணனுக்குச் சோப்பு என்ருலே மகா வெறுப்பு. பயறு, கடலை இவற்றின் மாவையோ, சீயக்காய்த் தூள் அல்லது வாசனைப் பொடியையோதான் நம் நாட்டுப் பெண்கள் தேய்த்துக் கொள்ள வேண்டும் என்ற திட அபிப்பிராயம் உடையவன். இருந்தாலும் மதனியின் 'கட்டளை'யை அவன் மீற முடியாது. சோப்புப் 'பாக்கட்' வாங்கி வந்திருந்தான். சந்தன சோப்புத்தான். ஆனால், நல்ல சோப்புஇல்லையாம். இதுபற்றி அண்ணனுக்கும் மதனிக்கும் பெரிய தர்க்கம் நடந்து கொண்டிருந்த சமயத்தில், நெல்லுக்காரக் கிழவி அங்கே வந்தாள்.

"சரிதான், பெரிய தம்பிதான் வந்துவிட்டதே. இண்ணைக்கு ராத்திரி நான் துணைக்குப் படுக்க வரவேண்டாம்'' என்ருள்.

"வா, கிழவி. வராமல் இருந்துவிடாதே. கதையை முடிக்க வேண்டாமா? அரைகுறையாய்க் கதை சொன்ன பேர்...?'' என்றேன்.

"ஆமாம், கிழவி. வந்து கதையை முடித்துவிட்டுப் போ. இல்லை, எங்கள் வீட்டுத் திண்ணையிலேயேதான் இன்றைக்குப் படுத்திரேன்'' என்ருள் மதனியும்.

"ஆமாம். அது சரி. வந்ததும் வராததுமாய்ப் பெரிய தம்பியோடே நீ என்ன சண்டை போடறே?" என்று கிழவி கேட்டாள்.

"ஒண்ணுமில்லே. மேலுக்குத் தேய்ச்சுக்க 'அருமை' யான சோப்பு வாங்கி வந்திருக்காங்க. அந்த அழகெப் பத்தித்தான் சண்டை!" என்ருள் மதனி.

" இந்தச் சோப்புப் போட்டா நாங்களெல்லாம் குளிக்கிரேம்? குளத்தங்கரைக்குப் போக; தண்ணி ஓரத்திலே ஒரு சின்னக் குழி பறிக்க; பிடி களிமண் எடுக்க; தண்ணியிலே குழப்ப; தலேயிலே தேய்க்க - இவ்வளவு தானே. இப்படிச் செய்துபார். கூந்தலிலே உள்ள சிக்கெல்லாம் தீரும்; தலே சுத்தமாகும். உடம்பிலே தேங்காய் நாரைத் தப்பித் தேய். தந்தமாய்ப் போகும்" என்ருள் கிழவி.

" அப்படிச் சொல்லு, நெல்லுக்காரி" என்று ஆமோதித்தான் அண்ணன்.

கிழவி வழக்கப்படி பாட ஆரம்பித்தாள் :

" நூறு குழி வெட்டி
நோகாமல் மண்ணெடுத்து
ஆறு கழி நட்டு
அழியாத வீடு கட்டி..."

இது என்ன பாட்டோ, எனக்குத் தெரியவில்லே!

" இந்த மாதிரி, நாம்ப மண்ணிலே யிருந்து வந்தோம். மண்ணிலே மனேகட்டி வாழ்கிரேம். மண்ணேடு மண்ணுகப் போகப் போரேம். மண்ணேப்போல் சுத்தமானது வேறில்லே" என்று விளக்கம் செய்தாள் கிழவி.

" சரி. இன்றைக்குக் கட்டாயம் கதை சொல்ல வா" என்றேன்.

அன்றிரவு அண்ணன் நடு வாசலில் நிலாவில் கட்டிலைப் போட்டுக்கொண்டு படுத்தான்.

சின்னத் திண்ணையில் நான்; பெரிய திண்ணையில் மதனி, கிழவி, சௌந்தரம் மூன்று பேரும் எப்போதும் போல் இருந்தார்கள். அண்ணாவின் கட்டிலைச் சுற்றிச் சுற்றி வந்து மைதிலி விஷமம் செய்துகொண்டிருந்தாள்.

கிழவி ஆரம்பித்தாள்:

"என்ன தம்பி, வெளியூர் போய் வந்திருக்குது பெரிய தம்பி. வெற்றிலை பாக்கு வாங்கி வந்திருக்குமே......"

"இதோ" என்று சொல்லி, கால் கவளி வெற்றிலையையும், ஒரு கை களிப்பாக்கையும் கிழவியின் முன்றானையில் போட்டாள் மதனி.

"கதை?" என்றேன் நான்.

"என்ன கதை, கிழவி?" என்று அண்ணா கேட்டான்.

"மண்ணாங்கட்டிக் கதை. சின்னப் பிள்ளையாக இருக்கச்சே, உனக்கு எத்தனையோ தடவை சொல்லியிருக்கேனே, அந்த முனியம்மா கதைதான். அப்பவெல்லாம் இது உனக்கு ரொம்பப் பிடிக்கும். இப்பதான் கண்ணுக்குக் கண்ணெதிரே காணும் கரகம், தீமிதி, அக்கினிச் சட்டி ஒண்ணையுமே நீ நம்ப மாட்டேங்கிறையே! சாமி, பூதம் எதுவுங் கூடாது; எதுவுங் கிடையாது! நல்ல துணிச்சல் தாம்பா உனக்கு. இருந்தாலும் என் கதையை நான் முடிச்சுடறேன். வேணுமானால் நீ உன் காதைப் பொத்திக்கோ" என்று சிரித்துக்கொண்டே சொன்னாள் கிழவி.

அண்ணாவும் சிரித்தான்.

பிறகு, கிழவி விட்ட இடத்தில் கதையைத் தொடர்ந்தாள்.

"பாரதத்தைப் பதினெட்டு நாள் உடுக்கடிச்சுப் படிச்சாலும் படிப்பாங்க; இல்லே, கிருட்டினன் தூது, மாடுபிடி சண்டை இதுகளெ மட்டும் சொல்லி முடிச்சாலும் முடிப்பாங்க. அந்த மாதிரி இன்னிக்கி என் கதையைச் சுருக்க முடிச்சுப்பிடறேன். சரிதானு?" என்று பீடிகை போட்டாள்.

சற்று நின்று, ஒரு கொட்டாவி விட்டு, விரலைச் சொடக்கி, "அப்பாடா! நேத்து என்ன சொன்னேன்? ஆமாம்; சின்னுனும் கறுப்பியும் வில்லப்பனைப் பிடிச்சாங்க. வருசம் மூணுச்சு. கலியாண முகூர்த்தம் வெச்சாச்சு...." என்ருள்.

"என்ன கிழவி, ஒரே தாவாய்த் தாவறே! தந்தி பாஷையா யிருக்கிறதே" என்றேன்.

"நான் என்ன அநுமாரா லங்கா பட்டணம் தாண்ட? ஒரு கதை என்ருல், போகிற போக்கிலேதான் போகும். கேளு. குறுக்கே குறுக்கே பேசாதே; விழுந்து குழருதே. முனியம்மாவை வில்லப்பனுக்குக் கலியாணம் கட்டிவைக்கப் பெரியப்பாகூடச் சம்மதிச்சுட்டார். சின்னக் கறுப்பன்தான் அடங்காத பிள்ளையாய்ப் போனுனே! தவிர, அவனிடமிருந்து கடிதாசோ, பணமோ ஒண்ணும் வெகுநாளாக வரவில்லை என்று அவருக்கு வருத்தம். அவன் இருக்கிருனோ போனுனோ என்றுகூட அவர் சந்தேகப்பட்டார். சின்னக் கறுப்பன் போட்ட எல்லாக் கடிதாசையும் பணத்தையுந்தான் வில்லப்பன் அமுக்கிப் போட்டானே! பெரியப்பாவுக்கு அவை எப்படி வரும்? அத்தனைக்கும் வழி சொல்லித் தந்தவர் சின்னுனும் கறுப்பியுந்தான்.

"முகூர்த்தம் குறிச்சாச்சு. பரிசப் பணமும் கொடுத்தாச்சு. கலியாண ஏற்பாடெல்லாம் தடபுடலா நடக்குது. பெரிய வீட்டுக் கலியாணம் இல்லையா? பறைமேளம், கொட்டுமேளம், பாண்டு, பல்லாக்கு, பூமாலை எல்லாத்துக்கும் சொல்லியாச்சு. சிலம்பம் பழகிய பிள்ளைகளெல்லாம், 'இந்தக் கலியாணத்திலே விமரிசையா நாலடி போடப் போறோம்' என்று பேசிக்கொண்டார்கள். ஆனை மேலே அம்பாரி கட்டி, அதுக்குமேலே கொடி பிடிச்சா இருக்குமே, அந்த உயரம் பந்தல் போட்டாச்சு......"

"சரி, கிழவி. அப்புறம்?" என்றேன் சலிப்புடன்.

"அட சொல்லட்டுண்டா. வர்ணனை எவ்வளவு அழகாயிருக்கு!" என்றாள் மதனி.

"ஊர் முழுக்க எல்லாரும் உற்சாகமாகத்தான் இருந்தார்கள். ஆனால், என்னவோ ஒரு கறக்கமும் எல்லாருக்கும் இருந்தது. முனியம்மாவுக்கு மட்டும் ஒரே வேதனை. மனசுக்குள்ளேயே அவள் வெந்துகொண்டிருந்தாள். ஏற்கனவே வாடி இளைச்சுத் துரும்பாயிருந்தாள். அந்த இளைப்பும் அல்லிக்கொடி மாதிரி ஓர் அழகாய்த்தான் இருந்தது. பெரியவர்களுக்கு எதிராக ஒரு வார்த்தையும் அவள் பேசவில்லை. ரொம்ப மானம் மரியாதைக்குக் கட்டுப்பட்ட பெண் அவள். முகூர்த்த நாள் நெருங்க நெருங்க, எல்லாருக்கும் பயமாயிருந்தது. அத்தைக்குக்கூட அதிக அச்சந்தான். ஒரு கணங்கூட மகளை விட்டு அகலாமல் கட்டிக் காத்துக்கொண்டிருந்தாள். மகள் என்ன செய்துவிடுவாளோ என்று அவள் பதறினாள். முனியம்மா மனசை யாராலும் அறிய முடியவில்லை.

"முகூர்த்தத்துக்கு முதல் நாள் குலதெய்வத்துக்குப் படைப்புப் போடுவது எங்கள் குடும்ப வழக்கம். அதற்கு

வேண்டிய சாமக்கிரிகளெல்லாம் சேர்த்தாச்சு. ஒரு பக்கத்தில் பெரிய அடுப்புகள் வெட்டி, ஆண் பிள்ளைகள் எல்லாரும் ஆரவாரமாகச் சமையல் செய்துகொண்டிருந்தார்கள். படைப்பெல்லாம் முடிந்தபிறகுதான் பெண்கள் அந்தப் பக்கமாகப் போகலாம். போய்ச் சாமி தரிசனம் பண்ணிவிட்டுக் கும்மி யடிப்பார்கள்.

கும்மியடி பெண்ணே கும்மியடி
கூடி நின்றுநீ கும்மியடி
நம்மை ரட்சிக்கும் சாமியெலாம்
நாடி வந்து காத்திடவே.

கொண்டை குலுங்கக் கும்மியடி
கோல மயில்போல் கும்மியடி
அண்டர் பிரான்வரக் கும்மியடி
ஆனந்தம் தோன்றிடக் கும்மியடி.

"இப்படிச் சாமி கும்பிட்டுக் கும்மியடிக்கப் போகு முன்னே, பெண்ணுக்கு அலங்காரம் செய்ய வேண்டும். அப்போது என்ன ஆச்சு! பெண்ணைக் காணவில்லை. ஊர் தேடுபடலம் ஆரம்பம் ஆச்சு. எங்கே தேடியும் முனியம்மா அகப்படவில்லை. எல்லாருக்கும் ஒரே சந்தேகம். யார் மேலே? கங்காணி ஐதை மேலேதான். இந்தச் சூழ்ச்சிக்கும் அவர்களே காரணமாயிருப்பார்களோ என்று ஒவ்வொருவரும் நினைத்தார்கள்.

"இங்கே இப்படியா? அங்கே அக்கரைச் சீமையிலே என்ன நடந்திருக்கு?...சாமி இல்லேன்னு சொல்ல முடியுமா? என்னவோ பெரிய தம்பி நினைக்குது! அது பெரியவங்க காலத்திலே இருந்துது; இன்னிக்கு இருக்குது; நாளைக்கும் இருக்கப்போவுது. சாமி என்னிக்கும் அழியாது. நாம்ப தான் வரோம்; போறோம்.

எங்கிருந்து வந்தேனோ
எங்கேதான் போவேனோ
ஏதுமறி யாதஎன்றன்
பாதையினைக் காட்டாயோ.

"அந்தப் பராபரந்தான் நம்மையெல்லாம் ஆட்டி வைக்கிறது.

"ஒண்ணும் வேண்டாம், தம்பி. மனிசன் எத்தனையோ பாடுபடறான். என்ன என்னவோ சாமர்த்திய மெல்லாம் பண்ணறான். ஜகஜாலப் புரட்டெல்லாம் செய்யறான். இத்தனைக்குப் பிறகும் பத்துப் பேர் அவனைக் கொண்டாடாமலே அவன் போய் விடுகிறான். கோயிலிலே இருக்கிறதே அந்தச் சிலை வெறுங் கல்லா? அப்படியானால், தலைமுறை தலைமுறையாய் எத்தனையோ பேர் ஏன் அதைக் கும்பிட்டு வணங்குகிறார்கள்? செய்த சிற்பி போய்விட்டான். தொழுத எத்தனையோ பேர் போய் விட்டார்கள். சிலை நிலைத்திருக்கிறது. அதற்கு இந்த மகிமை எப்படி வந்தது? எது எப்படியானாலும் சரி; மனிசனை மிஞ்சிய ஏதோ இருக்கிறது......"

கிழவி இந்தச் சுருதியில் இறங்கி விட்டால், பரம வேதாந்திகளும் தோற்றுப் போக வேண்டியதுதான்.

"கிழவி......"

நான் அழைத்ததற்குக் காது கொடாமலே, "ஏ பெரிய தம்பி, நான் உன்னை ஒண்ணே ஒண்ணு கேட்கிறேன். அதுக்கு மாத்திரம் பதில் சொல்லு; செத்தவன் சீவன் எங்கே போச்சு?" என்றாள் கிழவி.

நல்ல வேளையாக அண்ணா தூங்கிவிட்டான். இல்லாவிட்டால், அவனும் விடமாட்டான்; ஒரு பெரிய உபந்நியாசத்துக்குக் கிளம்பி யிருப்பான்.

"அவன் தூங்கி விட்டான். மேலே சொல்லு. எனக்குக் கூடக் கண்ணைச் சுழற்றுது" என்றேன்.

"அப்புறம் என்ன? அக்கரைச் சீமையிலே சின்னக் கறுப்பனுக்கும் மன நிம்மதியில்லே. ஆனாலும் மனிசன் வீம்பு பிடிச்சாப் பிடிச்சதுதானே. முனியம்மாவை அடியோடு மறக்கத்தான் பார்த்திருக்கிறான். முடியவில்லை. உண்டாலும் சரிதான்; உறங்கினாலும் சரிதான்; பால் வெட்டினாலும் சரிதான். இவள் நினைப்பு அவனை விட்டு அகலவேயில்லை. இத்தனையும் போக ஒரு நாள் இரவு அதிசயமான கனவு ஒன்று கண்டிருக்கிறான். குல தெய்வம் வந்து அதிலே பேசியிருக்கு. 'மகனே, முனியம்மா சொன்னது அப்படியே நிசம். அவள் நீயே நினைப்பாயிருக்கிறாள். அவளுக்கு ஆபத்து வந்திருக்கு. ஓடு உடனே ஊருக்கு ஓடு. நீ போனால்தான் அவளைக் காப்பாத்த முடியும்' என்று சொல்லியிருக்கு. இதோடே மட்டும் இல்லே. கனவிலே மன்னார்சாமி கோயில் தெரிஞ்சுதாம். 'ஊருக்குப் போனதும் நேரே இங்கே போ. உனக்கு நன்மை உண்டாகும்' என்றதாம் சாமி.

"அப்படியே அவன் உடனே கப்பல் ஏறி, ரயில் ஏறி, கடைசியிலே வழி நடந்து, அருச்சுனன் விட்ட அம்பு மாதிரி பறந்து கொண்டு ஊருக்கு வந்திருக்கிறான்; இப்படி அவன் வந்தபோதுதான் ஊரிலே இந்த அமளி துமளி நடந்து கொண்டிருக்கிறது. சேதியெல்லாம் தெரிந்துகொண்டான். சாமி சொன்னது சரியாய்ப் போச்சு. முனியம்மாவை ஊரெங்கும் தேடி எல்லாரும் கைவிட்டுவிட்டார்கள். சாமிமேலே பாரத்தைப் போட்டான் சின்னக் கறுப்பன். யாரிடமும் ஒன்றும் சொல்லிக் கொள்ளாமல், பித்துப் பிடித்தவன் மாதிரி ஓட்டமாய் ஓடினான் மன்னார்சாமி கோயிலுக்கு. சாமியை வணங்கினான். என்னவோ கவுளி சொல்லிச்சு: 'நல்ல வாக்குச்

சொல்லு ' என்று சொல்லிக்கொண்டே, 'தெய்வமே! அவளை நான் எங்கே தேடுவேன்? நீயே வழிகாட்டு' என்று கத்தியிருக்கிறான். ' யார்? சின்னக் கறுப்பனா?' என்று அசரீரி மாதிரி ஒரு குரல் கேட்டது. யாரும் இல்லாத இடத்திலே இதென்ன குரல்? அதுவும் மேலே இருந்து கேட்கிறது. அவன் ஆச்சரியத்துடன் நிமிர்ந்து பார்க்கும் போது மறுபடியும் கேட்டது குரல்: 'என் அத்தான் சின்னக் கறுப்பனா? இது நிசமா? கனவா?...' முனியம்மாவின் குரல்தான். அவளேதான் கோயில் மச்சு மேலே நின்று கொண்டிருந்தாள்.

" சமாசாரம் இதுதான். முனியம்மாவுக்கு என்னவோ தோன்றியிருக்கு. ஊருக்கு ஒதுக்குப் புறமாய் இருக்கும் மன்னார்சாமி கோயில் மச்சிலே போய், முகூர்த்த நாள் முடிய ஒளிந்திருப்பது; யாராவது கண்டுபிடித்துக் கலியாணத்துக்கு வற்புறுத்தினால், அங்கிருந்து கீழே பாறுங்கல் படி மீது குதித்து உயிரை விடுவது - இப்படி அவள் நினைத்திருக்கிறாள்.

" பிறகு என்ன? இவ்வளவுதான் கதை. பெண்ணும் பிள்ளையும் கண்ணீருங் கம்பலையுமாய் ஒருவரை ஒருவர் அணைத்துத் தேற்றிக் கொண்டார்கள். வில்லப்பனே மனம் மாறி, தான் எண்ணிய எண்ணத்துக்காக ரொம்ப வருத்தப்பட்டான். முனியம்மாவுக்கும் சின்னக்கறுப்பனுக்கும் அதே பந்தலில் அதே முகூர்த்தத்தில் கலியாணம் ரொம்ப விமரிசையாய் நடந்தது.

கொட்டு முழக்குடனே
 கோலா கலமாகப்
பட்டத்து ராணி போல்
 பாங்காக மாலையிட்டாள்.

ஈசனுடன் தேவி
 இருக்கின்ற கோலமதாய்
வாச மலர் சூட்டி
 வண்ணமாய் வீற்றிருந்தான்,

"பிற்பாடு மதனும் ரதியும் போல் இரண்டு பேரும் பலகாலம் சௌக்கியமாய் வாழ்ந்தார்கள். இனிமேல் தூங்கு தம்பி. தங்கச்சி, போய் வறேன்."

கிழவியின் கதை முடிந்த சமயத்தில், அண்ணு ஏதோ உளறிக் கொண்டு எழுந்திருந்தான்.

"என்னடா இது! இன்னும் நீ தூங்கவில்லையா? நெல்லுக்காரி, உன் பிசாசுக் கதையும் பேய்க் கதையும் இன்னும் முடியவில்லையா? நானே தூக்கத்தில் மருண்டு போனேன்" என்ருன்.

"பார்த்தியா, உன் உடம்பு தூங்குது; உள்ளம் விழித்திருக்குது. இது எப்படி, அப்பா, சாமி இல்லாமல் முடியும்? மனிசன் புத்தியினுலே எதையும் வெல்ல முடியாது. புத்திக்கு அப்பாலே ஏதோ இருக்கு. அதை நினைக்க வேண்டும்" என்று சொல்லிக் கிழவி விடை பெற்ருள்.

அவள் என்ன சொன்னுலும் சரி; அண்ணுவுக்கு இந்த அதிசயத்திலெல்லாம் நம்பிக்கையில்லை. சோளக் கொல்லைக்கு முதலில் தண்ணீர் இறைத்தது வில்லப்ப னின் சூழ்ச்சியாக இருக்கலாம்; சின்னக்கறுப்பனின் கனவு அவனுடைய மனக் கவலையின் கற்பனையா யிருக்கலாம்; மன்னுர்சாமியின் கூற்று, பின்னுல் கட்டிய கட்டாயிருக்க லாம்-இப்படி யெல்லாம் சகலத்துக்கும் அவன் காரணம் சொல்லுகிருன். ஆனுல், இந்தக் கதையைக் கேட்டதி லிருந்து எட்டுநாள் வரைக்கும் இரவிலே தூக்கத்தில் அவன் திடீரென்று உளறியடித்துக் கொண்டு எழுந் திருப்பதுமட்டும் நிற்கவில்லை.